# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 31 | கதிர் 363 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 08, புதன்கிழமை 23.11.2016


## முஸ்லிம் சிங்கள மோதலுக்குச் சூழ்ச்சி

நீலப் படையணியே இதற்குப் பின்னணியாம்

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கையில் சிங்கள-முஸ்லிம் மக்களிடையே மோதலை உருவாக்குவதற்குச் சூழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதனை முன்னின்று >> 27

## தவராசாவின் பதவி குறித்து நாளை ஆராயப்படாது

யாழ்ப்பாணம், நவ. 23
சர்ச்சையை ஏற்படுத்திய வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில், வடக்கு மாகாண சபையின் நாளைய அமர்வில் எந்தவொரு விடயங்களும் ஆராயப்படமாட்டாது. >> 27

## வடக்கு பட்ஜெட் நாளை சபைக்கு

யாழ்ப்பாணம், நவ. 23
வடக்கு மாகாண சபையின் நாளைய அமர்வில், வடக்கு அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதிக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. வரவு- >> 27

# உயிரிழந்தோரை அஞ்சலிப்பதற்கு தடை கிடையாது

### புலிகள் அமைப்பையே நினைவு கூரவேண்டாம் என்கிறதாம் அரசு

யாழ்ப்பாணம், நவம்பர் 23
உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கு எந்தத் தடையும் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளையே நினைவு கூரவேண் டாம் என்கின்றோம்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் வாரம், நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது. தாயக விடுதலைக்காக வீச்சாக - மூச்சாகப் போராடி வீரச்சாவை அரவணைத்துக் கொண்ட வீரமறவர்களை நினைவு கூர்ந்து மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. >> 27

# சேமித்த நெல்லை அரசு விடுவிக்காமையே விலை உயரக் காரணம்

### யாழ்ப்பாண வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம். நவ. 23
அரச களஞ்சியங்களில் சேமித்து வைத்துள்ள நெல்லை வெளியே விடாமல் வைத்திருப்பதால் தான் சந்தையில் நெல்லுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. விலை அதிகரிப்புக்கும் இதுவே காரணம் என யாழ்ப்பாண வர்த்தகர்கள் நேற்றுக் குற்றஞ்சாட்டினர்.

யாழ்ப்பாண வணிகர் கழக மண்டபத்தில் வணிகர் கழகத் தலைவர் தலைமையில் மொத்த >> 29

## யாழ்ப்பாணத்தில் கைதாவோரை கொழும்பில் முற்படுத்துவதேன்?

### எதிராக உறவினர் வழக்குத் தொடரலாம் என்கிறார் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் முற்படுத்தாமல் எதற்காகக் கொழும்பு நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் >> 27

## குடாநாட்டில் தொடர் மழை 1, 869 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ். மாவட்டத்தில் கடந்த நான்கு நாள்களாகத் தொடரும் மழை காரணமாக 521குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 869 பேர் பாதிக்கப்பட்டுள்ள >> 27



## சுமணரத்ன தேரரின் அடாவடிகளை நிறுத்து

### செங்கலடியில் நேற்று இந்துக் குருமார் பேரணி

மட்டக்களப்பு, நவ.23
மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரின் இனவாதச் செயற்பாடுகளையும், அடாவடித் தனங்களையும் உடனடியாக நிறுத்து >> 29

## அடித்துக் கொல்லப்பட்டாரா முன்னாள் பொலிஸ் ஊழியர்?

### வவுனியாவில் திங்களன்று சம்பவம் 4 பேர் விசாரணை வளையத்துக்குள்

வவுனியா, நவ. 23
வெளிநாட்டிலிருந்து வந்து வவுனியாவில் வசித்து வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். இவரை யாராவது அடித்துக் கொலை செய்தார்களா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 4 பேர் வவுனியா பொலிஸ் >> 28



### எச்சரிக்கிறார் ஞானசாரர்

## ஆயுதம் ஏந்தும் நிலை வருமாம்

யாழ்ப்பாணம், நவ. 23
வடக்கிலும், தெற்கிலும் புத்தர் சிலைகள் அகற்றப்பட்டு வருகின்றன. இதற்கெதிராகச் சிங்கள மக்கள் கிளர்ந்தெழும்பி ஆயுதம் ஏந்தும் நிலையே நாட்டில் உருவாகவுள்ளது. இவ்வாறு பொதுபலசேனா >> 27



## வடக்குக்கு நோர்வே அரசு ரூபா 200 மில். உதவி

யாழ்., நவ. 23
வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார- >> 27

## முன்னாள் போராளி மீது பாரிஸில் வாள் வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 23
பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மாவீரர் நாள் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். பாரிஸ் லாச்சப்பல் பகுதியில் >> 29

## புதிய தண்டத்தால் மக்களுக்கே சுமை

### கூறுகிறார் மகிந்த

யாழ்ப்பாணம், நவ. 23
நல்லாட்சி அரசு உத்தேசித்திருக்கும் புதிய தண்டப் பண அறவீடு நாட்டு மக்களுக்கே பெரும் சுமையாக மாறிவிடும். இவ்வாறு முன்னாள் ஜனா >> 06

## எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு கிடைக்குமென நம்பவில்லை

### வடக்கு முதலமைச்சர் கொழும்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
நாட்டின் புதிய அரசமைப்பு ஊடாக நாம் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கும் என்று நம்பவில்லை. நாங்கள் இலங்கையர்களாக உணரவில்லை. இரண்டாம், மூன்றாம் தரக் குடிமக்களாக உணர்கின்றோம். கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வு காணப் >> 29



## நாட்டைப் பிரிப்பதற்கே ரணில்-சம்பந்தன் கூட்டு

### தோற்கடிக்கத் திரளுமாறு விமல் வீரவன்ச அறைகூவல்

யாழ்ப்பாணம், நவ. 23
ஜெனிவா அமர்வுக்கு முன்னர் புதிய அரசமைப்பை நாடாளுமன்றில் நிறைவேற்றிக்கொள்ள தேசிய அரசு தயாராகி வருகின்றது. நாட்டை பிளவுபடுத்தும் >> 27


1717 FOLLOW US www.mobitel.lk PRE PAID

LIFE இன் SPEED இற்கு செட்டாகும் INTERNET

ரூ. 29 இற்கு 160MB
ரூ. 49 இற்கு 400MB
ரூ. 99 இற்கு 800MB
ரூ. 199 இற்கு 2GB
ரூ. 299 இற்கு 3GB

செயற்படுத்த #170# இனை அழையுங்கள்

Sri Lanka Telecom Mobitel

TRC/M/Promo/16/13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்புச் செயலரை உடன்பதவிநீக்குங்கள்

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23
பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று, நீதிக்கான தேசிய அமைப்பின் தேசிய அமைப்பாளர் கலாநிதி சரத் விஜேசூரிய கோரிக்கை விடுத்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.
பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு கையளித்துள்ளதாகவும், அவரைப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்றும் கலாநிதி சரத் விஜேசூரிய தெரிவித்தார்.
ஆட்சி மாற்றத்துக்கு உதவிய சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய நீதிக்கான தேசிய அமைப்பின் தேசிய அமைப்பாளராக, கலாநிதி சரத் விஜேசூரிய பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)



சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு, மொங்கோலியாவுக்கான தூதுவராக வும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது நியமனக் கடிதத்தை மொங்கோலிய ஜனாதிபதி கியாஜின் எல்பராஜிடம் மொங்கோலியத் தலைநகர் உலான் படாரிலுள்ள அரச மாளிகையில் வைத்து கடந்த வாரம் கையளித்தார். (த-5)

## மகிந்தவின் ஆலோசகராக மனைவி பணியாற்றியதை ஒப்புக்கொண்ட வாசுதேவ

யாழ்ப்பாணம், நவ. 23
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் தனது மனைவி, ஜனாதிபதி செயலகத்தில் ஆலோசகராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றினார் என்பதை, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ஒப்புக் கொண்டுள்ளார்.
நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் நளின் பண்டார, கொலைகள், ஊழல்கள், மோசடிகளில் ஈடுபட்ட முன்னைய அரசில் அமைச்சராக இருந்தவர் வாசுதேவ நாணயக்கார. அவரது மனைவி, ராஜபக்ச அரசில் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து பத்து ஆண்டுகள் சம்பளத்தையும், வாகனத்தையும் பெற்றவர். இப்போது, அவர் கதாநாயகன் போலப் பேசுகிறார் என்று குற்றம்சாட்டினார்.
அதற்குப் பதிலளித்துப் பேசிய வாசுதேவ நாணயக்கார, ஜனாதிபதி செயலகத்தில் தனது மனைவி 10 ஆண்டுகள் ஆலோசகராக இருந்தார் என்பதை ஒப்புக்கொண்டார். அந்தப் பதவிக்குத் தேவையான தகைமைகளைத் தனது மனைவி கொண்டிருந்தார் என்றும் அவர் நியாயப்படுத்தினார். (த-5)

# முகமாலை தெற்கில் டிசெ. 2 மீள்குடியமர்வு

## ஏனைய பகுதிகளும் விரைவில் விடுவிப்பு

பளை, நவ.23
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் முகமாலை தெற்கு மற்றும் வேம்பொடுகேணி, இந்திராபுரம் ஆகிய பிரிவுகளில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட 200 மீற்றர் தூரம் வரையான பகுதிகள் எதிர்வரும் 2ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
முகமாலை மடத்தடியில் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெ.பரமோதயன் தலைமையில் நடைபெறும் மக்களை மீள்குடியமர்த்தும் நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள் மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது
போரின்போது படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த முகமாலை தெற்குப் பிரிவுக் காணிகளில் ஹலோ டிரஸ்ட் நிறுவனத்தினால் வெடிபொருள்கள் அகற்றப்பட்டன. அதில் மக்களைக் மீள்குடியமர்த்துவதற்கான பதிவுகள் முகமாலை மற்றும் வேம்பொடுகேணி கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
1996 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் முகமாலையில் ஏற்பட்ட உக்கிர போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் வடக்கு மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களில் இது வரை காலமும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்து வசித்து வருகின்றனர்.
இந்தப் பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஏனைய பகுதி மக்களும் விரைவில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்று அறிய முடிகிறது.
ஏ-9 வீதி மற்றும் தண்டவாளம் அமைப்பதற்கெனக் கடந்த 2011ஆம் ஆண்டு வெடிபொருள்கள் அகற்றப்பட்ட 200 மீற்றர் தூரம் வரையான பகுதியிலேயே தற்போது மீள்குடியமர்வு இடம்பெறவுள்ளது.
(வ-9)

## இராணுவப் புரட்சிக்கு இங்கு இடம் இல்லை

### பிரதியமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கையில் இராணுவப் புரட்சிக்கு இடமேயில்லை என்று பிரதி அமைச்சர், அஜித் பெரேரா தெரிவித்தார்.
ஜனநாயகம் நசுக்கப்பட்டால் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாக, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் எச்சரித்திருந்தார்.
இது குறித்து பண்டாரகமவில் நடந்த நிகழ்வில் நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் அஜித் பெரேரா,
நாட்டில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசுகள் தான் ஆட்சி செய்ய முடியும். அரசியல் வழிமுறைகளுக்கு அப்பால், சர்வாதிகார முறையில் ஆட்சியைப் பிடிக்க முயன்றால், அனைத்து மக்களும் வீதிக்கு வந்து அதற்கு எதிராகத் திரண்டு நிற்பார்கள். துருக்கியில் இராணுவப் புரட்சி தோல்வியடைந்தது போன்ற நிலையே ஏற்படும்.
நாட்டில் எந்தக் கட்சி ஆட்சி செய்வது என்பது பிரச்சினையல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியா, மக்கள் விடுதலை முன்னணியா அல்லது வேறு எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். ஆனால் ஜனநாயகத்தை உள்ளடக்கியதாக அது இருக்க வேண்டியது கட்டாயம்.
நாட்டின் அபிவிருத்தி, மற்றும் முழுமையான எதிர்காலமும், ஜனநாயகத்தில் தான் தங்கியுள்ளது. எனவே அதனை நாம் இழந்து விட முடியாது-என்றார். (த-5)

## மகிந்த இன்று சீனாவுக்கு

கொழும்பு, நவ. 23
முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட இணைந்த எதிரணியின் உறுப்பினர்கள்சிலர்,இன்று புதன்கிழமை சீனாவுக்கு ஒரு வார உத்தியோகபூர்வப் பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.
வெளிவிவகார முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான லொஹான் ரத்வத்த, உதித்த லொக்கு பண்டார ஆகியோர் இந்தப் பயணத்தில் இணைந்துகொள்ளவுள்ளனர்.
சீன அரசால் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே, முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டகுழுவினர் சீனாவுக்குச் செல்லவுள்ளனர். (தி)

## ஏ.ரி.எம்முக்குள் புகுந்த முதலையால் பரபரப்பு

மட்டக்களப்பு, நவ.23
கிழக்குப்பல்கலைக்கழகத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள இலங்கை வங்கியின் தன்னியக்கப் பணப் பரிமாற்ற இயந்திர அறைக்குள் (ஏ.ரி.எம்) முதலை புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.
இந்த முதலை வெள்ளத்தில் அள்ளுண்டு வந்திருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.
குறித்த தன்னியக்கப் பணப்பரிமாற்ற இயந்திர அறைக்குள் புகுந்து படுத்துக்கொண்ட முதலையால் பணம் பெறுவதற்கு அங்கு வந்த மாணவர்கள் பதற்றத்திற்குள்ளானார்கள்.
இதனையடுத்து அந்த முதலை பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரின் உதவியோடு வேறு பகுதியில் ஓடும் வெள்ளநீரில் விடப்பட்டது. (த-ய-46)



## பாடசாலைக்குச் சென்ற 7 வயதுச் சிறுமி மாயம்

மட்டக்களப்பு, நவ.23
மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவு மிச்நகர் கிராமத்தைச் சேர்ந்த, ஏழு வயதுச் சிறுமி ஒருவர் நேற்றுக் காலை முதல் காணாமற்போயுள்ளதாகப் பெற்றோர் பள்ளிவாசல்களில் அறிவித்தல் கொடுத்துள்ளனர்.
இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் அப்துல் றஹீம் பாத்திமா சுஹானா என்ற சிறுமியே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.
சிறுமி மிச்நகர் பாடசாலையிலிருந்து காலை 10.00 மணியளவில் வெளியேறியபோதும் வீடு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
பாடசாலைச் சீருடையுடனேயே சிறுமி காணாமற்போயுள்ளார். குறித்த பாடசாலைக்கு அருகிலேயே சிறுமியின் வீடு உள்ளது.
பெற்றோரும், உறவினர்களும் தற்போது சிறுமியைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏறாவூர் பொலிஸார் சம்பவம் குறித்த விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-ய-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.கே.எஸ்ஸில் கையகப்படுத்திய காணிகளை விடுவித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 23

வலி. வடக்கில் காங்கேசன்துறைப் பகுதியில் பொலிஸாரினால் பிடிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் நேற்று மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி. வடக்கில் நடேஸ்வராக் கல்லூரி விடுவிக்கப்பட்ட போது, அதனோடு இணைந்த மக்களின் காணிகள் சிலவும் பாதுகாப்பு அமைச்சினால் விடுவிக்கப்பட்டது. இருப்பினும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் பொலிஸாரின் பாவனையில் இருந்த பல காணிகளை பொலிஸார் கையகப்படுத்தி தனி முட்கம்பி வேலிகளை அமைத்தனர்.

இது தொடர்பில் காணி உரிமையாளர்களின் முறைப்பாட்டையடுத்து யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

இந்தநிலையில் நேற்று அந்தப் பகுதிகளை மீண்டும் நில உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தால் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டு மாவட்டச் செயலகத்துக்கும் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கு அமைய குறித்த பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த தடுப்பு வேலிகள் நேற்று மாலையில் அங்கிருந்து அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-101)

# ஆசிரியரிடம் தாலிக்கொடி கொள்ளை

யாழ்ப்பாணம், நவ. 23

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியரின் ஐந்தரைப் பவுண் தாலிக்கொடி கொள்ளையர்களால் அறுத்துச் செல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளை புன்னாலைக்கட்டுவனை அண்மித்த இடத்தில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

பாடசாலையில் இருந்து தனது பிள்ளையுடன் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில்சென்ற இருவர் ஆசிரியரை முந்திக்கொண்டு சிறிது தூரம் சென்று பின்னர் திரும்பி வரும்போது தாலிக் கொடியை இழுத்து அறுத்துக் கொண்டு சென்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது. வீதியில் யாராவது வருகிறார்களா என்று பார்க்க அவர்கள் முந்திக் கொண்டு சென்றிருக்கலாம். எவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு கொள்ளையிட்டிருக்கலாம்.

கொள்ளையர்களுடன் இழுபறிப்பட்டு தாலிக்கொடியைப் பாதுகாக்க முற்பட்டபோதும் கொள்ளையர் அறுத்துச் சென்றுவிட்டனர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த ஆசிரியரின் தாலிக் கொடியே கொள்ளையடிக்கப்பட்டது. அவர்களது மோட்டார் சைக்கிள் இலக்கம் முறைப்பாட்டில் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,26)

# நீதியமைச்சருடன் நேற்று ஞானசாரர் திடீர்ச் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

நீதி அமைச்சர் விஜயதாச ராஜ பக்கசவுக்கும், பொதுபல சேனா அமைப்புக்கும் இடையில் நேற் றுத் திடீர் சந்திப்பு நடைபெற்றது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச,

நாட்டில் தற்போது இனரீதியாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலை பற்றியும் ஏனைய சில முக்கிய விட யங்கள் சம்பந்தமாகவும் பேசப்பட்டது. சகலவிதமான பிரச் சினைகளுக்கும் பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும். அந்த நடைமுறையைப் பின்பற்று வதற்கு இணக்கம் காணப்பட்டது.

தமிழ், முஸ்லிம் உட்பட ஏனைய அமைப்புகளுடனும் பேச்சு நடத்த வுள்ளேன். நீதி அமைச்சில் நாளை (இன்று) முஸ்லிம் அமைப்புகளுடன் சந்திப்பு நடை பெறவுள்ளது – என்றார்.

இனவாதப் பேச்சுக்கு எதிரான சட்டவரைவு எப்போது கொண்டு வரப்படும் என்று கேட்கப்பட்ட தற்கு, இப்படியொரு சட்டம் தேவையெனக் கூறியவர்களே அது கொண்டுவரப்பட்ட பின்னர் அதற்கு எதிராக வழக்குத் தொடுத் தனர். இதன் காரணமாக அது மீளப் பெறப்பட்டது என்றார்.

(த-5)

ஆள்கள் தேவை
CCTV கமராக்கள்
பொருத்துவதற்குரிய ஆள்கள் தேவை.
077 559 3163










## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாண பிராந்திய நிலையம்
## விஞ்ஞான இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

## B.Sc Natural Sciences

கல்வியாண்டு 2016/2017

**அனுமதித் தேவைகள்**

க.பொ.த (உயர்தர) கணித, விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அத்திவாரப் பாடநெறியில் சான்றிதழ் அல்லது அதற்குச் சமனான இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.

* க.பொ.த (உயர்தர) கணித, விஞ்ஞானப் பிரிவில் பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்க முடியும். எனினும், மாணவர் பதிவின் போது அவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் அவசியமானதாகும்.

**பாடப் பரப்புக்கள்:** தாவரவியல்/ இரசாயனவியல் / கணினிவிஞ்ஞானம் / தூயகணிதம் / பிரயோக கணிதம்/ பௌதிகவியல்/ விலங்கியல்.

விண்ணப்பப்படிவக் கட்டணம்: ரூபா 350/-
விண்ணப்பிக்கும்காலம்: 06.11.2016 தொடக்கம் 07.12.2016
www.ou.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடனோ அல்லது 021 2223374 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ள முடியும்.

இணைய வருவழி மூலமே விண்ணப்பிக்க முடியும்.

பதிவாளர்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.

## வேலணை பிரதேச சபை
## 2017 ஆம் ஆண்டுக்கான மீன் கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 23.11.2016 - 30.11.2016
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 01 . 12.2016 மதியம் 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 01.12.2016 பிற்பகல் 12.30 மணி

| இல | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள் விப் படிவக் கட்டணம் (VATதவிர்த்து) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (VATதவிர்த்து | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை (VATதவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை துறையூர் மீன்சந்தை (புதிய கட்டடம்) | - | 2,000.00 | 10,000.00 | 220,000.00 |
| -2 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 27,500.00 |
| 3 | வேலணை அம்பிகை நகர் மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 14,300.00 |
| 4 | சரவணை மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 7,260.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தையில் அமைந்துள்ள கடைகள் | | | | |
| 5 | கடை இல 2-கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | - | 1,000.00 | 5,000.00 | 31,600.00 |
| 6 | கடை இல 4- கருவாட்டுக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 34,760.00 |
| 7 | கடை இல 5- கருவாட்டுக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 34,760.00 |
| 8 | கடை இல 7 - வேலணை ஆட்டிறைச்சிக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 33,770.00 |
| 9 | வேலணை 6 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை- மரக்கறி/மீன் | | 1,000.00 | 5,000.00 | 37,878.50 |
| 10 | வேலணை 6 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை- ஆட்டிறைச்சிக்கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 11,000.00 |
| 11 | வேலணை 6 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை- கருவாட்டுக்கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 11,000.00 |
| 12 | வேலணை 6 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 1,000.00 | 5,000.00 | 24,000.00 |
| 13 | வேலணை 6 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - கோழிக்கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 17,907.89 |
| 14 | மண்டைதீவு வாராந்த சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 10,000.00 |

இது தொடர்பான விவரங்கள் 03.11.2016 ஆம் திகதி வெளிவந்த உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம். கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அப்பாத்துரை குருநாதன்,
செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அதிபர்களே!

01 – 12 வரையான வகுப்புக்களுக்கான விரிவான பாடத்திட்டமிடல் புத்தகங்கள், பாடக் குறிப்புப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2017

ஷாம்பவி பதிப்பகம் கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். 021 222 4143, 077 618 4425.


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை
திருமதி தர்சினி ஹேமலதாஸ் அவர்களின் தந்தை

**பெரியார் தம்பிராஜா**

கடந்த 20ஆம் திகதி சிவபத மடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ புனித தெரேசாளி மகளிர் கல்லூரி, அச்சுவேலி.

## தவறிவிட்டது

S.ஜிதுஸ்மன், I.மதுசூதனன் ஆகியோரது மருத்துவபீட அடையாளஅட்டை, தேசியஅடையாளஅட்டை(921151047V), காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய இரண்டு கறுப்புநிற பேர்ஸ் வெள்ளைநிறப் பையுடன் 20.11.2016 அன்று வவுனியா, மன்னார் வீதி, முருங்கனில் இரவு 6 - 8 மணிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(J 6278) (14,17,18)

077 351 2309(மது)/ 077 803 4066 (ஜிதுஸ்மன்)


நீங்கள் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவரா?
AIR TICKETING அக்கடமி வழங்கும் உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு...

AIR TICKETING AND RESERVATION
வகுப்புக்கள் முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் அனுபவம் வாய்ந்த ஆசான்களால் கற்பிக்கப்படவுள்ளது. வகுப்புக்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



SB Travels and Tours (pvt) Ltd
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1082, 021 222 9555


## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கனரக தொழிற்சாலை ஒன்றிற்குக் கீழ்க்குறிப்பிடப்படும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

01. இயந்திர இயக்குநர் (machine operator)
02. உதவியாளர்கள் (Helpers)

தகுதியும் ஆர்வமும் உடையோர் தங்களது சுய விவரம் அடங்கிய விண்ணப்பங்களினை கீழ்க்காணும் முகவரிக்கு 02.12.2016 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல - 5517
C/O உதயன் - இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இலங்கை தேசிய நிர்மாண சங்கம் வடமாகாண கிளை

**சகல நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கான அறிவித்தல்**

01. தேசிய மட்டத்தில் பதிவு செய்தலும் நிர்மாண ஒப்பந் தகாரர்களை தரப்படுத்தலும்
02. நிலுவையை இரத்துச் செய்தல் - (தளர்த்துதலை நீடிப்பது 28.10.2016 நிர்வாக சபை தீர்மானத்தின் படி)

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சின் கீழ் உள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) யின் 1/9/2/18 ஆம் இலக்க 11.11.2016 ஆம் திகதிய எமக்கும் ஏனையோருக்கும் முகவரி இடப்பட்ட மேற்படி கடிதத்தின் விவரங்கள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளது.


கடந்த இரண்டு வருடங்களாக ஒப்பந்தகாரர்கள் தங்களது சீடாப்பதிவுகளைப் புதுப்பிக்காதவர்களுக்கு நிலுவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்த விசேட சலுகைகள் சீடாவின் நிர்வாகசபை அங்கத்தவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இவை C7,EM4,SP4 உம் அதற்கு கீழ் உள்ள தரத்தில் உள்ளவருக்கு மாத்திரம் பொருந்தும்.(தீர்மானம் 28.10.2016 எடுக்கப்பட்டது)
ஏனைய தரத்தில் உள்ளவர்களுக்கு நிலுவை செலுத்தாது புதிய பதிவு.புதிய பதிவு இலக்கத்துடன் புதிய புத்தகமும் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை எமது காரி யாலயத்துடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**இலங்கை தேசிய நிர்மாண சங்க அலுவலகம்,**
**54, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல. 021 221 7567, 077 616 9666**

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 06 . 1945



இறப்பு 22 . 11 . 2016

## கனகரத்தினம் நகுனகுலசிங்கம்

(முன்னாள் மாநகரசபை சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்)

297, பலாலி வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் நகுனகுலசிங்கம் நேற்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்–ராசம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் சந்திராதேவி, சந்திரகுமாரி, சந்திரவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணானந்தன், காலஞ்சென்ற தம்பிரட்ணம் மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமலவேணி (மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்) நிர்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வினோவிந்தன், திவ்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் விகாஷின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(J 6306) (16,17,19)

## சிறுநீரகம் தேவை

17 வயதுடைய ஆண் ஒருவருக்கு சிறுநீரகம் செயலிழந்துள்ளமையால் O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

021 222 6307/ 076 678 7098


VIDEO EDITING
HD,WEDDING
BIRTHDAY
PUBERTY CEREMONY
Contact: 076 883 7070



இறைச்சிக் கோழி விற்பனைக்கு
புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.
1Kg 400/= மட்டும்
U.S.A பாம்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500


## சிறுநீரகம் தேவை

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் வசிக்கும் மாணவர் ஒருவருக்கு $O^+$ / $O^-$ இரத்த வகையிலுள்ள சிறுநீரகம் தேவை.

077 391 1406, 077 979 7403, 021 222 7263


## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்றர்
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)


## கலந்துரையாடல்

வரவு – செலவு திட்டம் - 2017 தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ். முகாமையாளர் சம்மேளனத்தால் நடத்தப்படவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரி விக்கப்பட்டது. (ற–10)

## சுயதொழிலை ஊக்குவிக்கும் விற்பனை நிலையம்

வவுனியா பிரதேச செயலகத்தால் சுய தொழிலை ஊக்குவிக்கும் விற்பனை நிலையம் அமைக்கப்படுகின்றதுஎன்று பிரதேச செயலர் கா.உதயராஜா தெரிவித்தார்.
வவுனியா குடியிருப்பு கலாசார மண்டபத்தின் பின்பக்கமாக உள்ள வளாகத்தில் நான்கு மில்லியன் ரூபா செலவில் இந்த நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. வவுனியா திருநாவற்குளம் பகுதியில் உள்ள பனை தென்னை வள சுய தொழிலின் விற்பனைகளை ஊக்குவிக்கும் முகமாகவும், பொது மக்களை சுயதொழிலில் ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த விற்பனை நிலையம் அமைக்கப்படுகின்றது.
இந்த விற்பனை நிலையத்தில்கிடைக்கும் வருமானம் கலாசார மண்டபத்தின் தேவைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளப்படவுள்ளதுமேலும்பொது மக்கள் சுயதொழிலின் மூலம் மேற்கொள்ளும்பொருள்களை இங்கு விற்பனைசெய்துகொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (ற–10)

## மரண அறிவித்தல்

### நாகரத்தினம் தவராசா (தவம்)



வட்டுக்கோட்டை, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் தவராசா (ஆசாரியார், இலங்கை நோர்வே கூட்டுத் தாபனம்(சீநோர்) முன்னாள் ஊழியர்) நேற்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2016) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி,
வட்டுக் கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்போடு இசைந்த சேவையே சாயி தத்துவம்

மருத்துவர். க.சிதம்பரநாதன்

'பிறரை நேசித்து இறைவனை அடைவாயாக' என்பது அவதார புருஷர் பாபாவின் அருள் வாக்காகும். எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பது ஒரே ஒரு தெய்வசக்தி என்பதை அறிவால் உணர்ந்த அந்த உயிர்களுக்கு அன்போடும் மகிழ்வோடும் சேவை செய்வதே சாயிதத்துவமாகும். இந்தச் சிறப்புமிக்க தத்துவம் உலகளாவியரீதியில் பரந்து விரிந்து செயற்பட வேண்டும் என்பதே சாயிசங்கற்பமும் கருணை நிறைந்த செய்தியுமாகும். அன்போடு இசைந்த சேவை ஒன்றே ஆன்மிக வாழ்வின் உயர் வுக்கும் லௌகீக வாழ்வின் சிறப்புக்கும் மனிதனை அழைத்துச் செல் லும் ராஜவீதியாகும். இந்த உண்மையையே வேதங்களும் அறநூல்களும் ஞானிகள் மகான்கள் ஆகியோரின் வாழ்க்கை நெறிகளும் சதா காலமும் எமக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன. இந்தப் பெரும் தத்துவமே பகவான் நமக்கு நல்விருந்தாக அளிக்கும் கருணை மழையாகிய உபதேசமொழியாகும். எண்ணங்கள் சொற்களை விட அன்பின் செயலாக்கமே சக்தியும் வலிமையும் மிக்கது என்பது சுவாமியின் அறிவுறுத்தலாகும் "Sound of Action is Louder than Words and Thoughts" தூய அன்பை அடிப்படையாகக் கொண்டசேவையே இம்மைக்கும் மறுமைக்கும் பயனளிக்க வல்லது. தான் அறவழியில் பெற்ற பொருளையும் அறிவையும் அன்புச் சேவை மூலம் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது. அது அருளாகமாறி உயிருக்குற்ற துணையாக நிற்கிறது. கொடுப்பவனாக இரு. பறிப்பவனாக வாழாதே என்பதும் சாயிதத் துவமே. உன்னுடைய பண்பாடுமிக்க சீரிய வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் உனது சமுதாயமே உயிர் மூச்சுப்போன்றது என்பதை நன்றி அறிவோடு உணர்ந்து அதன் உயர்வுக்காக முடிந்தவரை சேவை செய்வது உனது கட்டாய கடமையாகும் என்று பகவானின் குரல் எங்களை நோக்கி நல்ல செய்தியைக் கொண்டு வருகின்றது. கண் நேரம் செய்யும் சிறிய சேவையானது மாதக்கணக்காகச் செய்யும் தியானம் பஜனைகளை விடப்பெரும் பயன்தரும்.

சமூக உயர்வுக்காக சேவைசெய்ய விளையும் ஒவ்வொரு தனிமனிதனும் முதலில் தனக்குத்தானே சேவை செய்யவேண்டும் என்பது பாபாவின் அறிவுறுத்தலாகும். தியாக சிந்தை, சீலம் நிறைந்த ஒழுக்கநெறி, கர்மத்தில் தர்மம் பேணும் மனோபக்குவம், சுயநலம் கலவாத அன்பை வளர்த்தல் போன்ற சீரிய பண்பாடுகளைத் தனது சொத்தாகப் பேணி வளர்த்தல் போன்றவையே தனிமனிதன் தனக்குச் செய்யும் சேவையாகும். அத்தகைய சேவையாளனே மானிட சேவைக்காக எவ்விடத்தும், எந்த நேரத்திலும் தன்னை அர்ப்பணம் செய்யும் செயல் வீரனாக இருப்பான். சதாகாலமும் தன்னையும் தன் குடும்பத்தையுமே நினைத்துக் கொண்டிருப்பவனுடைய நெஞ்சம் கல்லாக மாறிவிடுவதால் பிறர் துன்பம் அவன் கண்களுக்குப் புலப்படமாட்டாது என்கிறார் பாபா. மானிட நேயத்தின் ஒளிப்பிளம்புகள் சேவையின் மூலமாக ஊடுருவி துன்பம் துயரம் என்ற இருளில் தவிக்கும் உயிர்களுக்கு அன்பு ஒளியைக் காட்டி அக்கொடுமையிலிருந்து மீட்டெடுக்கவேண்டும். ஆக்க நிறைந்த நினைவு ஆறுதல் தரும் சொல் அருள் நிறைந்த செயல்களே. சேவை செய்பவனுக்கும் சேவையைப் பெறுவோனுக்கும் ஆனந்தத்தை அளிப்ப தோடு நெஞ்சத்தையே பரிசுத்தமாக்கிவிடுகின்றது. நெஞ்சம் தூய்மை அடையும்போது ஒவ்வொரு உயிர் அணுவும் தெய்வீக அருள் ஒளியால் நிரம்பி வழிகிறது. அத்தகைய நெஞ்சில் அல்லல் இல்லை சித்த மயக்கம் எனும் இருளும் இல்லை.

எமக்கு ஆண்டவன் அளித்த கண்களும் காதுகளும் கால்களும் கைகளும் மானிடநேயம் நிறைந்த சேவைக்கே என்பதை மறத்தலாகாது. நீர் நிறை விழிகளை சோகப் பெருமூச்சு விடும் இதயங்களை உங்கள் கண்கள் காணும்போதும் அல்லற்பட்டு ஆற்றாது அலறும் ஜீவன்களின் குரல் உங்கள் காதில் விழும்போதும் உங்கள் கால்கள் அந்த இடங் களை விரைந்து தேடிச் செல்லட்டும். உங்கள் அன்பு, அன்புக்கரங்கள் கனிந்த இதயங்களோடு அவர்களுக்குத் தொண்டு செய்யட்டும். அப் படிச் செய்யும்போது என்வார்த்தைகள் ஒரு யானையின் வலிமையை உங்களுக்கு அளிக்கும் என்று உற்சாகம் தருகிறார் பாபா. சேவை செய் யச் சந்தர்ப்பம் கிடைத்தற்காக மகிழவேண்டாம். சேவை செய்வதற்கு வேண்டிய திறமையையும், ஆற்றலையும் செல்வத்தையும் தந்த இறை வனை வாழ்த்தி வணங்கு என்பது சுவாமியின் கட்டளை.

எந்தச் சேவையையும் செய்யத் தொடங்குமுன் உன் இதயத்தின் அறைகளை இறைவன் நாமங்களால் நிரப்பிக்கொள். அப்போ நீ மேற்கொண்ட சேவை முழுமையான வெற்றியையும் சந்தோசத்தையும் தரும். ராம - ராவண போரின்போது கடலைக் கடக்க அணை கட்டுவதற்கு வானரப் படை ராம நாமத்தை உரக்கச் சொல்லிக் கொண்டு பெரியகற்களைத் தலையில் சுமந்தபோது பாரத்தையே உணரவில்லையாம். சில வானரர்கள் ராம நாமத்தைக் கல்லில் எழுதிக் கடலில் எறிந்தபோது அவை தண்ணீரில் மிதந்து சென்றனவாம். தெய்வசிந்தனை சேவையின் கடினத்தை எளிதாக்கி விடும் என்ற பாபா எங்களைச் சிந்திக்க வைக் கிறார். நிரந்தரமாகப் பாயும் ஆற்றுநீர் பிறருக்கே பயன்படுகிறது. பூத்துக் காய்த்துச் சொரியும் பழங்களை அனுபவிப்பவர்கள் பிறரேயன்றி மரமல்ல. பசு தன்பாலை கன்றுக்கும் பிறருக்குமே அர்ப்பணம் செய்கிறது. இயற்கையின் இந்தப் புனித சேவையைப் பார்த்து மனிதனும்பற்றற்ற பயன் கருதாச் சேவையை மானிட சமுதாயத்துக்கு அளிப்பதே பிறப்பின் பெரும் பயன். ஒவ்வொரு சாயி அடியானும் அன்போடு செய்யும் சேவை பகவானின் பாதங்களில் சேர்க்கப்படும் நறுமணம் மிக்க மலர்கள் என்பதை உணர்ந்து உய்வோமாக.

ஜெய் சாயிராம்

## இடரின்போது வெளியேறுவதற்கு வடமராட்சி கிழக்கில் புதிய வீதி

யாழ்ப்பாணம்,நவ.23

வடமராட்சி கிழக்கில் கடலில் ஏதாவது இடர் ஏற்படும் பட்சத்தில் கரையோரப் பகுதி மக்கள் விரைவாக வேறு இடங்களுக்குச் செல்லும் பொருட்டு ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளம் கொண்ட புதிய வீதி அமைக்கப்பட்டுள்ளது.

ஆழியவளை, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, வத்திராயன் கரையோரப் பகுதி மக்கள் இந்தப் புதிய வீதி மூலம் அதிக நன்மையடைவர் என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வீதி பொதுமக்கள்,புலம் பெயர் தமிழ் மக்கள்,பிரதேச செயலகம் என்பனவற்றின் உதவியுடன் அமைக்கப்பட்டது. இந்த வீதி கடல் நீரை மறித்து அமைக்கப்பட்டுள்ளதால் கடல் நீர் வீதிக்கு வர முடியாதவாறு வீதியின் கரைக்கு பாதுகாப்பு அணைகள் அமைக்கப்பட்வுள்ளன. இடர் முகாமைத்துவப் பிரிவு இந்தப் பாதுகாப்புச் சுவர் அமைப்பதற்காக ஒரு தொகுதி நிதியை ஒதுக்கியுள்ளது.

பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணிகளும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மாவட்டச்செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வீதி தற்போது கிரவல் மண்ணைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு வீதியைத் தார்வீதியாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-8,17)

70 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்
15 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்
ஆ.நகுலேஸ்வரி



தனது 70 ஆவது பிறந்த நாளை இன்று (23.11.2016) புதன்கிழமை தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவ்வேளையில் தனது பேரனாகிய
சந்திரபாலன் சுஜீவன் அவர்களின் பிறந்ததின வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றார்.
இவர்களை சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துகின்றேன்.
நந்தினி
நாவலடி வீதி, திருநெல்வேலி.

## ஆவணப் படம் திரையிடல்

யாழ்ப்பாணம், நவ. 23

புங்குடுதீவு சிதைவுறும் நிலம் ஆவணப்பட திரையிடலும் கலந்துரையாடலும் இன்று புதன்கிழமை மாலை 3 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். நிறுவக நடன, நாடகப் பீட இணைப் பாளர், கலாநிதி சர்மிளா ரஞ்சித்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வானது மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராஜதுரை அரங்கில் நடைபெறவுள்ளது. ஆவணப்பட அறிமுக உரையை கிழக்கு லண்டன் பல்கலைக்கழக மானிட வியற் துறை ஆய்வாளர் தங்கேஸ் பரம்சோதி நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வுக்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ந-10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சிறீதேவி கண்ணதாசன்
BFA(Dance)PGDE,M.Ed (2nd upper)



திரு.முத்துக்குமாரு கொங்காதரன்
NDT(Sci)BA,PGDE, M.Ed



திரு. நல்லையா ஹரிகரன்
English(Spl.trd)B.A,
PGDE (English), M.Ed (English)

எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி சிறீதேவி கண்ணதாசன், திரு.முத்துக்குமாரு கொங்காதரன், திரு.நல்லையா ஹரிகரன், ஆகியோர் [illegible] பெற்றமையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு மேலும் பல பட்டங்கள், பதவிகள் பெற்று உயர்வடைய [illegible] மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்- யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Optimo international company (PVT.LTD)

யாழ்ப்பாணத்தில் 20 வருடமாக இயங்கிவரும் Optimo நிறுவனத்தின் பதவி வெற்றிடங்கள் புதிய கிளைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் ஆரம்பிக்கவுள்ளது.

**Distributor, Supervisor, A.S. Manager, Manager, Administration**

போன்ற பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்படவுள்ளது.
ஒவ்வொரு பதவி வெற்றிடத்திற்கும் 10 பேர் உள்வாங்கப்படுவர்.
கல்வித்தகைமை: O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(J 6302) (16,17,19)

**தொடர்பு: 077 7009820, 077 5936857**

## கொழும்பில் தொடர்மாடி குடியிருப்புக்கள்

சகலவித தளபாடங்களுடன் (குளிரூட்டப்பட்டவை | A/C)

குறுகிய கால வாடகைக்கு

www.colomboapartments.lk



HOTLINE 011 480 1818 / 077 354 0632 / 077 633 2580

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்

அமரர்
**அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன்**
(பெரியதம்பி)



தோற்றம்
26.12.1954

மறைவு
23.11.2015

மனைவி.
பருத்தித்துறை வீதி,
4ஆம் ஒழுங்கை, ஆனைப்பந்தி.-

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**பொன்னையா சண்முகரத்தினம்**

திதி: அபரபக்க நசமி (23.11.2016)

தோற்றம்
10.03.1937

மறைவு
23.11.2012



எம் அப்பா.....!
எம்மை விட்டு நீங்கி
நீண்டது நான்காண்டுகள்
எம் நினைவில் வாழ்வீர்கள்
நிறையும் எம் வாழ்நாள் வரை

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

டச்சு றோட்,
சோலை அம்மன் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி (லோகம்) லோகநாதன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி லோகநாதன் நேற்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் லோகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், தங்கேஸ்வரி (லண்டன்), கதிரமலைநாதன் (கனடா),காலஞ்சென்ற இலங்கேஸ்வரி மற்றும் நித்தியானந்தன் (ஆசிரியர் - கொழும்பு), ஞானேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி (கனடா), குகநாதன் (கொழும்பு), சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும், கங்காதரன் (லண்டன்), ஸ்ரீசாந்தினி (கனடா), நந்தகுமார் (பிரான்ஸ்),சிவஞானசுந்தரி (ராதா - கொழும்பு),சுகுமாரன் (கனடா), மகேஸ்வரன் (கனடா), இராகுலன் (கனடா), காலஞ்சென்ற செந்தில் நாதன் மற்றும் சிவமலர், சிவநாதன், தியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், லவன், விபீஷன், வைஷ்ணவி ஆகியோரின் மாமியும், தாரணி, ஷோபனா, துளசி, லக்ஷ்மனன்,அபினா, ஆரணி, சாயிகரன், சாயினி ஆகியோரின் பெரியம்மாவும், அபிராமி,லிங்கராஜ், கோதை, நிர்மலன்,மயூரன், நிவேதிதா ஆகியோரின் சித்தியும், யருஷன்,லரீனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2016) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
சி.லோகநாதன் (கணவர்)

(C/26622)
(11,17,18,21)

**077 571 6052**

## புதிய தண்டத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

போக்குவரத்து விதி மீறல்களுக்கு இதுவரை 500 முதல் 3000 வரையான தண்டப் பணம் விதிக்கப்பட்டு வந்தது. 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் போக்குவரத்து விதிமுறைகளை மீறுகின்ற சாரதிகளுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை அறவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஊடகங்களின் ஆசிரியர்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இராஜகிரியவில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மகிந்த, சில சாரதிகளுக்கு போக்குவரத்துக்கான அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன காப்புறுதிப் பத்திரம் என்பவற்றை எடுத்துச் செல்ல மறதிநிலை ஏற்படும் சந்தர்ப்பங்கள் காணப்படும். அவ்வாறான நிலையில் 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுவதானது ஏற்றுக்கொள்ள முடியாத சுமையாக மாறிவிடும்.

சாதாரண முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தை விதித்தால் முழு மாதமும் அவரால் தண்டப் பணத்தை மட்டுமே செலுத்த வேண்டிவரும். தண்டப் பணத்தைச் செலுத்த முடியாதவர்களுக்கு விளக்கமறியல் விதிக்கப்படுவதால் சிறை செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சிறைச்சாலையின் செலவுகளும் அதனூடாக அதிகரிக்கும். நல்லாட்சி அரசின் இந்தப் புதிய தண்டப்பண அறவீட்டு முறை நாட்டின் வருமானப் போக்குக்கு சவாலானதாகவும், பொருத்தமற்றதாகவுமே அமைகின்றது - என்றார். (த-5)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**பொன்னர் கனகசபை**
(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: கார்த்திகை மாத
அபரபக்க திரயோதசி

காற்றில் வரும் காண்டாமணி நாதமும்
கார்த்திகை மாதத்து கனமழை பொழிவும்!
நிலவானின் தேய்பிறை நிலவும்
நாலுபுறமும் உங்களின் நினைவாய்
வலிகளைத் தந்து வாட்டுது ஐயா.

தோற்றம்
04.12.1934

மறைவு
23.11.2011

முருகன் கோயிலடி,
புலோலி.

(N 184) (16,17,19)

என்றும் உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

# பிறந்தநாள் நினைவஞ்சலி

"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பர்"
(தி.பா - 27, 01)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 02 |
| 11 | 05 |
| 1969 | 2006 |



## பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)

**முன்னாள் சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
**- உதயன் பத்திரிகை நிறுவனம் -**

"ஆண்டவரே! நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்." (தி.பா - 139, 01)

**ஜெபம்**

எல்லாம் வல்ல இறைவா, உமது அடியார் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் திடீரென மரணித்ததால் அதிர்ச்சியோடிருக்கும் எம்மை கண்ணோக்கும். அவரது பிரிவால் கவலையோடிருக்கும் எங்களுக்கு உமது அளவற்ற கருணையால் ஆறுதலளித்து அவர் உம்மோடும் புனிதர் அனைவரோடும் தோழமைபெற உம்மிடம் வந்து சேர்ந்துவிட்டார் என்ற எமது நம்பிக்கையை உறுதிப்படுத்தியருளும்.

- ஆமென் -

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக, கொழும்பு - 15 'புனித கார்மேல் மாதா துறவற சபை'யின் சிற்றாலயத்தில் இன்று காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

**எமது சுரேஷை என்றுமே மறவோம். உங்கள் நினைவுகளோடும், வழிநடத்தல்களோடும் வாழும்**

மனைவி - சுவேன் (Suven)
பிள்ளைகள் - அல்றின் (Alrin)
சேஷா (Saesha)
BRISBANE - AUSTRALIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்


“இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது. மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்.”

-மிகைல் கோர்பச்சேவ் (சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர்)

கார்த்திகை
01-30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்”

# கிளி. மாவட்டத்தில் தொடர்கிறது மழை

## இயல்பு வாழ்க்கை கொஞ்சம் பாதிப்பு
## வான்பாய்கிறது கனகாம்பிகைக் குளம்





யாழ்ப்பாணம், நவ.23

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்யும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கனகாம்பிகைக் குளம் வான் பாய ஆரம்பித்துள்ளது.

தாழ் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. வீதிகள், மக்கள் குடியிருப்புக்கள், ரயில் பாதைகள் என்பன வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளன.

அறிவியல் நகர் பகுதியில் வெள்ளத்தால் ரயில் பாதை சேதமடைந்தது. அதைச் சீராக்கும் நடவடிக்கையில் ரயில் திணைக்களப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குளங்களின் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில் கனகாம்பிகைக்குளம் வான்பாய ஆரம்பித்துள்ளது. வான்பாயும் நீர் கடந்து செல்லும் பாலத்தின் ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பாலத்தில் திருத்தப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் பாலத்துக்குப் பதிலாக அமைக்கப்பட்டிருக்கும் வீதி வெள்ளத்தால் அரித்துச் செல்லப்படுவதால், அதைச் சீராக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



கடும் மழை மற்றும் வெள்ளத்தால் 3ஆம் தவணைப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (ற-5,6,34)

## தென்னம் பிள்ளைகள் நடுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்.பொம்மைவெளியில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் தென்னம் பிள்ளைகளை நடுவதற்கு மாநகராட்சி மன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த பகுதியில் கடற்கரையோரமாக சுமார் இருநூறு வரையான தென்னம் பிள்ளைகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காக்கைத்தீவில் உள்ள மீள்சுழற்சி நிலைய வளாகத்திலும் தென்னம் கன்றுகளை நட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-17)

## வலி.கிழக்கில் வீதிவிளக்குகள்

யாழ்ப்பாணம், நவ.23

வலி. கிழக்குப் பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 150 வீதிவிளக்குகள்பிரதானவீதிகளில்பொருத்தப்படவுள்ள நிலையில், தற்போது 75 வரையிலான வீதி விளக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அச்சுவேலி, புத்தூர், வளலாய் போன்ற இடங்களில் பிரதான வீதிகளுக்கு அவை பொருத்தப்பட்டுள்ளன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் தாழ்ந்த வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பத னால் இரவு நேரங்களில் வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற-17)

## முழங்காவில் கொள்ளை; சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.23

முழங்காவிலில் நேற்றுமுன்தினம் நடந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

முழங்காவிலைச் சேர்ந்த கருணாகரன் என்பவரின் வீட்டுக்குள் நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் கதவை உடைத்து நுழைந்த கொள்ளையர்கள் ஆயுத முனையில் அச்சுறுத்தி, 36 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையடித்தனர். வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளையும் பறித்துத் தப்பிச் சென்றனர்.

இது தொடர்பில் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்தார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பறித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளை அக்கராயன் காட்டுப் பகுதியில் இருந்து மீட்டனர்.

குறித்த காட்டுப் பகுதி, அதனை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேகத்தின்பேரில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஜெயபுரம் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகள் நடை பெற்று வருகின்றன - என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

## தடிகள் ஏற்றிவந்த சாரதிக்கு தண்டம்

தென்மராட்சி, நவ.23

கடலில் களங்கண்டி வலை பாய்ச்சுவதற்கு வாகனத்தில் 400 தடிகள் ஏற்றிச் வந்த சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

களங்கண்டி கூடு அமைப்பதற்கு காட்டுப் பகுதியில் வன பரிபாலன சபையிடம் அனுமதியின்றி தடிகள் வெட்டக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 400 தடிகளை வெட்டி வாகனத்தில் ஏற்றி வந்த சாரதி வட்டார வனவள அலுவலரால் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிக்கு தண்டம் விதித்தார்.

இதேவேளை- காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகனவரிப் பத்திரம் ஆகியவை இன்றி வாகனம் செலுத்திய மூன்று சாரதிகளுக்கு தலா 13 ஆயிரம் ரூபா வீதமும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், மது போதையில் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமும் விதிக்கப்பட்டது. (ற-9)

## சீரமைத்த சிறிது காலத்துள் மீள தாழிறங்கியது ஆடியபாதம் வீதி

### ஒப்பந்தகாரரின் கொடுப்பனவை நிறுத்துவதற்கு நடவடிக்கை



யாழ்ப்பாணம், நவ. 23

கொக்குவில் ஆடியபாதம் வீதி சீரமைக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள் சேதமடைந்துள்ளது. “சீரமைப்பு பணியை மேற்கொண்ட ஒப்பந்தகாரருக்கு அதற்குரிய கொடுப்பனவு வழங்கப்படாது நிறுத்தி வைக்கப்படும். விரைந்து சேதம் சீரமைக்கப்படும்” என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

ஆடியபாதம் வீதி கொக்குவில் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் கீழ் இறங்கியது. அதைச் சீரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி திணைக்களம் தனியார் ஒப்பந்தகாரரிடம் வேலைகளைப் பொறுப்புக் கொடுத்தது. ஒப்பந்தகாரரால் வீதி சரி செய்யப்பட்டிருந்தது. பொது மக்கள் அதனைப் பயன்படுத்தினர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக அந்த வீதி மீளவும் தாழிறங்கியுள்ளது. வீதி தாழிறங்கிய பகுதியில் அடையாளமிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர், “வீதியின் அருகில் 5 மீற்றர் ஆழமான வெள்ள வாய்க்கால் காணப்படு கின்றது. அதைக் கவனத்தில் கொண்டு வீதி சீரமைக்கப்படாததாலேயே சேதமடைந்துள்ளது.

சீரமைப்பைச் செய்த தனியார் ஒப்பந்தகாரரே அதனை சீர் செய்ய வேண்டும்” – என்றார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண போக்குவரத்து, வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், ஒப்பந்தகாரருக்குரிய கொடுப்பனவு வழங்கப்படாது-என்றார். (ற-5,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கூட்டமைப்பினர் மீது தாக்குதல் வழக்கில்

# மாவை எம்.பி., சிவாஜி எம்.பி.சி திங்களன்று சாட்சியமளிப்பர்

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ்ப்பாணம், தீவகத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பியினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான வழக்கில், சாட்சியப் பதிவுகளுக்காக மன்றுக்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் தனிப்பட்ட காரணங்களுக்காக நேற்று சாட்சியமளிக்க முடியாது என்று தமது சட்டத்தரணி மூலமாக மன்றில் தெரிவித்தனர். அதனை ஏற்ற யாழ். நீதிமன்று அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை மன்றில் சாட்சியமளிக்குமாறு அறிவுறுத்தியது.
இந்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கின் சாட்சியப் பதிவுகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. அழைப்பாணை பிறப்பிக்கப்பட்ட சாட்சிகள், குறித்த முகவரியில் இல்லை எனவும் கிராம அலுவலரிடம் கேட்டபோது, அவரிடம் குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான பதிவுகள் இல்லை என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தார்.
2013ஆம் ஆண்டு தொடக்கம் தாம் ஜே/ 54 பிரிவின் கிராம அலுவலராகப் பணியாற்றுகின்றேன். சாட்சிகளாகக் குறிப்பிடப்படும் நபர்கள் தொடர்பான எதுவித பதிவுகளும் என்னிடம் இல்லை. அவர்கள் தற்போது வெளிநாட்டில் வசிப்பதாகத் தகவல்கள் மூலமாக அறிந்து கொண்டேன் என்று கிராம அலுவலர் மன்றில் தெரிவித்தார்.
பின்னர் சாட்சிகளின் நலன் சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கே.சயந்தன், மன்றில் முன்னிலையாகியுள்ள சாட்சிகளான நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் தனிப்பட்ட சில காரணங்களுக்காக இன்று (நேற்று) சாட்சியமளிக்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே வேறொரு தினத்தில் சாட்சியமளிக்க விரும்புகின்றனர். அதற்கு மன்றின் அனுமதியைக் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்று அவர்களுக்கு மீளவும் அழைப்புக்கட்டளை வழங்கப்படமாட்டாது என்றும் சாட்சிகள் எதிர்வரும் 28ஆம் திகதி மன்றில் சாட்சியமளிப்பதற்காக முன்னிலையாகவேண்டும் என்றும் நீதிபதி அறிவுறுத்தினார். வழக்கின் தொடர் விசாரணை இன்று தொடரவுள்ளது.

**பின்னணி**

2001ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி தீவகத்தில் தேர்தல் பரப்புரைக்காகச்சென்றதமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் மீது நாரந்தனைப் பகுதியில் மறித்து தாக்குதல் மேற் கொண்டதில், இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் 15க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டு, பின்பு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது. 2010ஆம் ஆண்டு சில காரணங்களுக்காக திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்டது. மீண்டும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. இதில் 4 சந்தேகநபர்கள் மீது கொலைக் குற்றம் மற்றும் 15க்கு மேற்பட்டவர்களை கடும் காயப்படுத்தியமை தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இதன் தொடர் சாட்சி பதிவுகள் நேற்றுமுன்தினத்திலிருந்து எதிர்வரும் 2ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-6)

## ஓல்.எல். பரீட்சை அனுமதி வழங்கல்

இராமநாதன் கல்லூரியில் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை இரண்டாம் தடவையாக தோற்றவுள்ள மாணவர்களுக் கான அனுமதி அட்டையை, தங்களது தேசிய அடையாள அட்டையுடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் திருமதி.கிருஷ்ணபிள்ளை அறிவித்தார். (வ-எ)

## சுகாதார செயலமர்வு

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் திண்ம மற்றும் திரவக் கழிவகற்றல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 28ஆம் திகதி மு.ப.9 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
கொழும்பு சுற்றாடல் அமைச்சின் அலுவலர்களால் நடத்தப்படும் செயலமர்வில் வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் திட்டமிடல் பிரிவினர் மற்றும் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளைக் கலந்து கொள்ளுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.(வ - 9)

# சிறு இலாபத்துடனேயே அரிசியை விற்கின்றோம்

### யாழ். நகர வர்த்தகர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
கொள்முதல் விலையில் இருந்து சிறு இலாபத்தை வைத்தே நுகர்வோருக்கான அரிசிகளை வழங்கி வருகின்றோம். யாழ்ப்பாண வர்த்தகர்கள் அரிசி வியாபாரத்தில் கொள்ளை இலாபம் எடுக்கின்றார்களென அண்மையில் வெளிவந்த தகவல் வியாபாரிகளை மனஉளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளதாக யாழ்ப்பாண வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
யாழ்ப்பாண வணிகர் கழக மண்டபத்தில் நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் தலைமையில் மொத்த வியாபார வர்த்தகர்கள் செய்தியாளர் சந்திப்பை நடத்தினர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
இதன்போது யாழ்.நகர மொத்த வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் அனைவரிடமும் 12 வகையான அரிசிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றில் அதிகமானவை வவுனியா, பொலனறுவை போன்ற இடங்களில் உள்ளபெரிய அரிசி ஆலைகளில் இருந்தே கொள்முதல் செய்கின்றோம். அரிசி வியாபாரத்தில் போட்டி நிலவுவதால் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் போக கொள்முதல் விலையில் இருந்து ஒரு கிலோ அரிசிக்கு இரண்டு ரூபாவுக்கு மேல் யாரும் இலாபம் வைப்பதில்லை.
மொத்த வியாபாரிகளிடம் இருந்து கொள்முதல்செய்யும் சில்லறை வியாபாரிகளும் அவ்வாறே. குறைந்த விலையில் யார் விற்பனை செய்கின்றாரோ நுகர்வோர் அங்கேயே கொள்முதல் செய்வார்கள். இலங்கையில் எந்த மாவட்டத்திலும் வர்த்தகர்கள் தங்களுக்கு வரும் இலாபத்தை வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை. யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் உற்பத்தி நிறுவனங்கள் நிர்ணயித்த விலையிலும் பார்க்க, பொருள்களைக் குறைந்த விலையிலேயே வர்த்தகர்கள் விற்பனை செய்கிறார்கள். அவ்வாறு இருக்க எப்படி அரிசியில் மட்டும் கொள்ளை இலாபம் ஈட்டுகின்றார்கள் என்று சொல்ல முடியும்.
அரிசியில் இருந்து அனைத்துப் பொருள்களும் வேறு எந்த மாகாணத்திலும் பெற்றுக்கொள்வதை விட யாழ்ப்பாணத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்- என்றனர். (வ- 7)

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23
பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடியான தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 27ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.
இலங்கை நிர்வாக சேவை முன்னாள் அலுவலர் அ.ஜெயரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் மு[illegible]கையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் 'வட பகுதி தொழிற்சங்க போராட்டங்களின் வரலாறும் இன்றைய நிலையும்' என்ற தலைப்பில் நினைவுரை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.(வ-10)

### சிறுப்பிட்டி இளைஞர்கள் கொலை

# 14 சிப்பாய்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
சிறுப்பிட்டிப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரின் விளக்கமறியல் காலத்தை டிசம்பர் மாதம் 5ஆம் திகதி வரையும் நீடித்தது யாழ். நீதிவான் மன்றம்.1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இரண்டு இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்தக்காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
இதுதொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து யாழ். நீதிவான் மன்றினால் 14 இராணுவத்தினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இராணுவத்தினர் பொலிஸாரின் சிறப்புப் பாதுகாப்புடன் அனுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது இராணுவத்தினரின் விளக்க மறியலை தொடர்ந்தும் நீடிக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் கட்டளையிட்டார்.
இதேவேளை 14 இராணுவத்தினரின் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. (வ-103)

# பஸ் மீது தாக்குதல் நடத்தியவர்களின் பிணை நீக்கப்பட்டு மீண்டும் மறியல்

### பிணைக்கு ஆட்சேபிக்காத பொலிஸாரை மன்றில் முற்படுமாறு உத்தரவு

பட்டா வாகனத்தில் வந்து பேருந்தை மறித்து அட்டூழியம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பிணை அனுமதியை நீக்கம் செய்து, அவர்கள் ஒவ்வொருவரையும் மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
பிணைக்கு ஆட்சேபிக்காத தலைமைப் பொலிஸ் அதிகாரியையும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரியையும் அடுத்த தவணை மன்றில் முற்படுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.
இந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.
கடந்த மாதம் 12ஆம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரைநகர் சாலைக்குரிய இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் வழிமறித்த பட்டா வாகனத்தில் வந்த இளைஞர்கள் [illegible] ஏறி சாரதியையும் நடத்துநரையும் தாக்கினார்கள். அத்துடன், நடத்துனரின் கையிலிருந்த பற்றுச்சீட்டு புத்தகம், பணம் ஆகியவற்றைபறித்துச் சென்றதுடன் பேருந்தை தாக்கி சேதப்படுத்தினார்கள் என்று- யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் அந்தப் பகுதியில் விசாரணை நடத்திகண்காணிப்புக்கமராக்களின் உதவியுடனும் வாகன இலக்கத்தை அடிப்படையாக கொண்டும் பருத்தித்துறைப் பகுதியை சேர்ந்த 12 இளைஞர்களை கைது செய்து யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அவர்கள் நீதிமன்றினால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சந்தேக நபர்களில் பலர் மாணவர்கள் எனவும் சிலர் அடுத்த மாதம் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன், பேருந்துக்கு ஏற்பட்ட சேதத்துக்கு இழப்பீடு செலுத்த சந்தேகநபர்கள் தயாராக உள்ளதாகவும் மன்றில் தெரிவித்தார்.
சந்தேகநபர்கள் இழப்பீட்டை செலுத்த முன்வருவதால் பிணையில் விடுவதற்கு தமக்கு எதிர்ப்பு இல்லையென மன்றில் பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபர்களை பிணையில் செல்லுமாறு பதில் நீதிவான் கட்டளையிட்டார்.
இந்த வழக்கு நேற்று நீதிவான் சி. சதீஸ்தரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர்களில் எத்தனை பேர் மாணவர்கள் என்று நீதிவானால் கேட்கப்பட்ட போது, சந்தேக நபர்களில் ஒருவர் மாத்திரம் தொழில்நுட்ப கல்வி பயில்வதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து சந்தேகநபர்கள் அனைவரையும் டிசம்பர் மாதம் 6ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பொதுச் சொத்துக்கள் கட்டளை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லையென்று தெரிவித்த யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸ் பரிசோதகரையும் குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளையிட்டார்.
(வ-4,103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துடன் தொடர்புடைய சங்கங்களை 2017இற்குள் பதியப் பணிப்பு

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் விடுத்தார்

யாழ்ப்பாணம், நவ. 23
போக்குவரத்துடன் தொடர்புபடுகின்ற அனைத்து நலன்புரி சங்கங்களும் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு தை மாதம் போக்குவரத்து நியதிச் சட்டங்களுக்கு அமைவாக போக்குவரத்து அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
இவ்வாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார் என அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
எதிர்வரும் காலங்களில் போக்குவரத்தோடு தொடர்புடைய சங்கங்கள் பல்வேறு வகையான ஒழுக்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். வீதி விபத்துக்களைக் குறைப்பது தொடர்பில் உரிமையாளர்களும், சாரதிகளும் கூடுதல் கவனம் எடுத்தல் வேண்டும். மாணவர்கள் மற்றும் முதியவர்களிடம் சாரதிகள், நடத்துநர்கள் ஒழுக்கமான முறையிலும், கௌரவமான முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் தமது சேவையை வழங்கவேண்டும். சங்க நிர்வாகத்தில் உள்ளவர்கள் உரிமையாளர்களின் நலன் தொடர்பில் கூடிய அக்கறை செலுத்தவேண்டும். அதனோடு உரிமையாளர்கள் சங்கத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக நின்று செயற்படவேண்டும்.
போக்குவரத்தோடு தொடர்புடைய சங்கங்கங்களில் பலவற்றில் நிதி மோசடிகள் காணப்படுகின்றன. கொடுக்கப்பட்ட கடன்கள் வசூலிக்கப்படாது இழுபறி நிலையில் நிலுவையாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான முறைகேடுகளுக்கு அந்தந்தக் காலப்பகுதியில் இருந்த சங்க உறுப்பினர்களும், புதிதாக பதவி ஏற்பவர்களும், உரிமையாளர்களும் பொறுப்புக்கூறவேண்டும்.
சங்களின் நிதி சார்ந்த விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் சட்டப்படியான கணக்காய்வுகள் மேற்கொள்ள வேண்டும். இந்தக் கணக்காய்வுகளில் மோசடிகள் காணப்பட்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
வழி அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்போர் சட்டமுரணாக அதனை ஏனையவர்களுக்கு விற்றிருப்பின்



அனுமதிப்பத்திரத்தைக் கொடுத்தவர்களுக்கும் அதனை வாங்கியவர்களுக்கும் எதிராக கடுமையான சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறான அனுமதிப்பத்திரங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி இரத்து செய்யப்படும்.
புதிதாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிர்வாகக் குழுவானது சங்கத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கும் பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்குவதற்கும் தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வடமாகாணத்தில் ஏனைய மாவட்டங்கள் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு புதிய நிர்வாகத்தின் செயற்பாடுகள் தரமாக அமைய வேண்டும். - என்றார்.
(ற-10)

# சிறார்கள், பெண்களுக்கு எதிராக 13,000 குற்றங்கள்

## நல்லாட்சி அரசின் காலப்பகுதியில்

கொழும்பு, நவ.23
நல்லாட்சி அரசின் காலப் பகுதியில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக 13ஆயிரத்து 661 குற்றங்கள் பதிவாகியுள்ளன என்று சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்னாயக்க நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் இறுதிப் பகுதி வரை 4 ஆயிரத்து 325 சிறார்களுக்கு எதிரான குற்றங்களும், 6 ஆயிரத்து 13 பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களும் பதிவாகியுள்ளன.
அவற்றில் ஆயிரத்து 624 சிறார்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. 3 ஆயிரத்து 308 பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தீர்வுகள் காணப்பட்டன.
கடந்தாண்டு இடம்பெற்ற 10 ஆயிரத்து 338 பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளில் 4 ஆயிரத்து 932 வன்முறைச் சம்பவங்களுக்கே தீர்வுகள் காணப்பட்டுள்ளன.
இந்த ஆண்டில் 2 ஆயிரத்து 600 குற்றங்கள் சிறுவர்களுக்கு எதிரானவை என பதிவாகியுள்ளன. அவற்றில் ஆயிரத்து 403 வன்முறைச் சம்பவங்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. 723 பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 335 வன்முறைச் சம்பவங்களுக்குத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன.
பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் இந்த ஆண்டு 3 ஆயிரத்து 323 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற போதும் ஆயிரத்து 738 வன்முறை சம்பவங்களுக்கே தீர்வு காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)




# வட மாகாணக் கல்வி நிலை மீளும் வாய்ப்பு தெரிகின்றது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.23
சில வருடங்களாக தாழ்ந்திருந்த வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை மீண்டெழக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன. ஆசிரியர்களின் கையில் அதற்கான மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
வடமராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எமது சிறார்களிடத்திலும் மிகுந்த திறமைகள் உண்டு. அதை வெளிக்கொண்டு வருவதும் தேர்ச்சி பெற வைப்பதும் ஆசிரியர்கள் கையில் கொடுக்கப்பட்ட மாபெரும் பொறுப்பு. காலச் சூழ்நிலையால், அழுத்தங்களால் கல்வி மேம்பாடு என்பது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து மிகவும் தாழ்வடைந்திருந்தது. அதை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதென்பது இலகுவான விடயமல்ல. புதியதொரு மறுமலர்ச்சியை காணக்கூடிய நாள் வெகு தொலைவில் இல்லை.
நாடாளுமன்றத்தில் முக்கியமான சில நடைமுறைகள் நடைபெற்று வருகின்றன வரவு - செலவுத் திட்ட விவாதங்களுக்கு அப்பால் அதைவிட முக்கியமாக இன்று எமது சமூகத்தின் விடிவு என்று எதிர்பார்க்கின்ற புதிய அரசமைப்புச் சட்டம் அதனுடைய வரைபுகள் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன ஆகையால் இந்த நிகழ்வில் முழுமையாகக் கலந்து கொள்ளமுடியாமைக்கு வருந்துகிறேன் - என்றார்.
வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பாடசாலைகளுக்கான கௌரவிப்பு, க.பொ.த. சாதாரண, உயர்தரப் பரீட்சையில் பொறியியல் மற்றும் மருத்துவ பீடங்களுக்கு அதிகளவு மாணவர்களை அனுப்பிய பாடசாலை அதிபர்களுக்கான கௌரவிப்பு, க.பொ.த உயர்தர, சாதாரண தர பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.
(ற-109)

# ஆசிரியர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், நவ. 23
பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்துக்கு ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சானது பிரதேச கலாசார மத்திய நிலையங்களின் மூலமாக வெவ்வேறு கலை, மொழித்திறன் சார்ந்த வகுப்புக்களை வருடந்தோறும் நடத்தி வருகின்றது.
அதற்கமைவாக பருத்தித்துறைப் பிரதேச கலாசார மத்திய நிலையமானது 2017 ஆம் ஆண்டுக்கான இசை, நடனம், சித்திரம், கிராமியக்கலைகள், யோகாசனம் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்தவுள்ளது. அதற்காக தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பதாரிகள் வடமராட்சி - வடக்கு பிரதேசத்தில் வசிப்பவர்களாக இருக்கவேண்டும்.
மேலும் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.
(ற-10)

எரிபொருள் நிரப்பு நிலையம்
திறப்புவிழா அழைப்பு
அன்புடையீர்,
நிகழும் சுப மங்கலகரமான துர்முகி வருடம் கார்த்திகைத் திங்கள்
08 ஆம் நாள் இன்று(23.11.2016) புதன்கிழமை
முற்பகல் 10.46 மணிமுதல்நண்பகல் 12.05 மணிவரையுள்ள
பூர நட்சத்திரமும் அமிர்தயோகமும்கூடிய சுபவேளையில் எம்மால்
புதிதாக அமைக்கப்பெற்ற
எரிபொருள் நிரப்பு நிலையத்தை
திறந்துவைக்கவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து
தொழில் சிறப்புற ஆசீர்வதித்து வாழ்த்தி வைபவத்தைச்
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
பருத்தித்துறை வீதி,
இருபாலை, கோப்பாய்.
திரு.திருமதி அப்புக்குட்டி முருகேசு
தனநாயகம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு வீடு

## ஆராயப்படுகின்றது என்கிறார் மீள்குடியேற்ற அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ.23

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு வீட்டுத் திட்டம் மூலம் வீடுகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று தெரிவித்தார் மீள்குடியயேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.


சிமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்களை நேற்றுமுன்தினம் மீள்குடியேற்ற அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றி 154 தொழிலாளர்களின் விவரங்கள் என்னிடம் தரப்பட்டுள்ளன. உங்கள் அனைவருக்கும் சொந்தக் காணிகள் இருக்குமாயின் நான் அனைவருக்கும் வீட்டுத் திட்டம் மூலம் வீடுகளை அமைத்து தருகின்றேன் - என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

எங்களில் சிலரின் காணிகள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளன. அதற்கும் நீங்கள் தான் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.- என்று ஊழியர்களில் சிலர் கோரிக்கை விடுத்தனர்.

1990ஆம் ஆண்டு சிமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டதால் நாங்கள் வேலை வாய்ப்பை இழந்தோம். நாம் வேலையிழந்து இருந்த போதும் கூட எங்களுக்கு தரமில்லாத நட்ட ஈடே வழங்கப்பட்டது. எங்களுக்கு அரசு சலுகைகளை வழங்க வேண்டும் - என்று தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

நீங்கள் அனைவரும் பல வருடங்களாக வேலையிழந்து வாழ்ந்து வருகின்றீர்கள். உங்கள் பிரச்சினைகளை என்னால் உணர முடிகின்றது. இந்த விடயம் எனது அமைச்சு சம்பந்தப் பட்டது இல்லை. நான் அமைச்சர் ரிசாத் பதியுதீனை இன்று சந்திக்கும் போது உங்கள்பிரச்சினைகள் தொடர்பில் பேசுகின்றேன்.



காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தொழிற்சாலையை இயங்கவைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தொழிற்சாலையில் உங்கள் பிள்ளைகளுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளீர்கள். நான் இது தொடர்பிலும் அமைச்சர் ரிசாத்துடன் கதைக்கின்றேன். எனது அமைச்சின் ஊடாக உங்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டித் தருவது தொடர்பில் நான் கலந்தாலோசிக்கின்றேன் - என்று மீள்குடியேற்ற அமைச்சர் குறிப்பிட்டார். (ற-8)

# கணக்கறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓட்டோ சங்கங்களுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

கிளிநொச்சி மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்க நிர்வாகத்தினர் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் தங்களது கணக் கறிக்கைகளை வடமா காண போக்குவரத்து அதிகார சபையிடம் ஒப்படைக்க வேண்டும். தவறின் அவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாண போக்குவரத்து அமைச்சருக்கும் கிளிநொச்சி மாவட்ட ஓட்போ உரிமையாளர் சங்க நிர்வாகத்தினருக்கும் இடையே அண்மையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டது என்று அமைச்சர் டெனீஸ்வரன் அனுப்பியஊடகஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாக ஓட்டோ உரிமையாளர்களுக்கு இடையேபிரச்சினைகளும், இழுபறிநிலைகளும்காணப்படுகின்றன. அவை தொடர்பில் அமைச்சரவைக்கு தெரியப்படுத்தியமைக்கு அமைவாகவே கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு ஓட்டோ உரிமையாளர் சங்கங்கள் உள்ளன. 2010 ஆம் ஆண்டில் முதலாவது சங்கமும், 2011 ஆம் ஆண்டு இரண்டாவது சங்கமும், 2014 ஆம் ஆண்டு மூன்றாவது சங்கமும், 2015 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றத்தின் பதிவாளர் தலைமையில் நான்காவது சங்கமும் உருவாக்கப்பட்டிருந்தன.

இந்த சங்கங்கள் எவையும் புதிய நிர்வாகத்தினரிடம் தங்களது கணக்கறிக்கைகள் மற்றும் ஆவணங்களை ஒப்படைக்காமல் தனித்தனியே செயற்பட்டமை தெரிய வந்துள்ளது.

நான்கு சங்க நிர்வாகங்களினதும் பொருளாளர்கள் தமது சங்க கணக்கறிக்கைகளை இன்னும் ஒரு மாத காலத்துக்குள் வடமாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு சமர்ப்பிக்கவேண்டும். தவறின் அந்த சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.


ஓட்டோ உரிமையாளர்கள் செலுத்துகின்ற சந்தாப் பணத்துக்கு குறித்த சங்கத்தினர் பொறுப்புக் கூற வேண்டியது அவர்களின் கடமையாகும். ஒவ்வொரு சங்கத்தின் நிர்வாகக் குழுவும் தங்களது ஓட்டோ உரிமையாளர்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும்.

ஓட்டோ சங்கங்களின் கணக்கறிக்கை தொடர்பில் இருக்கின்ற இழுபறிகள் மற்றும் பிரச்சினைகள் சீர்செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்டம் தழுவிய தான புதிய நிர்வாகம் மிக விரைவில் ஏற்படுத்தப்படும். 2010 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோ உரிமையாளர்கள் தொடர்பான விவரங்களை போக்குவரத்து அதிகார சபைக்கு மிக விரைவாக சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிமன்ற பதிவாளரால் உருவாக்கப்பட்ட நான்காவது சங்கத்தின் தலைவருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.- என்றுள்ளது. (ற-10)

## ‘புங்குடுதீவு சிதைவுறும் நிலம்’ ஆவணப்பட திரையிடலும் கலந்துரையாடலும்

கொக்கட்டிச்சோலை நிருபர்

புங்குடுதீவுசிதைவுறும்நிலம்ஆவணப்படத்தின்திரையிடலும் கலந்துரையாடலும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறும். கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் ஏற்பாட்டில் நிறுவக நடன, நாடகபீட இணைப்பாளர், கலாநிதி சர்மிளா ரஞ்சித்குமார் தலைமையில் நிகழ்வு நடைபெறும். ஆவணப்பட அறிமுக உரையை கிழக்கு லண்டன் பல்கலைக்கழக மானிடவியல்துறை ஆய்வாளர் தங்கேஸ் பரம்சோதி நிகழ்த்தவுள்ளார். (க-ய)



# மீன்பிடி அபிவிருத்தி திட்டங்கள்மூலமாக 4,500 வேலை

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 23

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மீன்பிடி அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக சுமார் 4 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என வடமாகாண மீன்பிடி அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது-

மன்னார் மாவட்டத்தில் அமைய வுள்ள பாரியளவிலான கடல் உயி ரின வளர்ப்பு பண்ணை ஒன்றை அமைப்பதற்கு கொழும்பு மீன்பிடி அமைச்சர் இந்த வருட பாதீட்டில் நிதி ஒதுக்கப்படும் என்று என்னிடம் தெரிவித்தார்.

தற்போது வரை வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த திட்டமானது நடைமுறைப் படுத்தப்படும் போது சுமார் 4 ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

மன்னார் மாவட்ட, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் அனுமதிக்காக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட அதிகாரியால் மன்னார்மாவட்டத்தில் அமையவுள்ள கடல் உயிரின வளர்ப்புப் பண்ணைஒன்றை அமைப்பது தொடர் பான விட யங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதனை இணைத் தலைவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். - என்றுள்ளது. (ற-8)

# வியாபார நிலையம் உடைத்து பணம், பொருள்கள் திருட்டு

வவுனியா, நவ. 23

வவுனியா நகரின் மையப் பேருந்து நிலையத்தில் உள்ள வியாபார நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் உடைக்கப்பட்டு பொருள்கள் மற்றும் பணம் திருடப் பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மேற்படி வியாபார நிலையம் அமைந்துள்ள வியாபார தொகுதியின் பிரதான வாயிலைப் பூட்டிவிட்டு பாதுகாப்பு உத்தியோகத்தர் சென்றுள்ளார். நேற்று அதிகாலை 5.30 மணியளவில் வியாபார தொகுதிக்கான பிரதான வாயிலைத் திறந்து உள்ளே சென்று பார்த்த போது, வியாபார நிலையத்தின் கதவுகள் உடைக்கப்பட்டமை அவதானிக் கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

வியாபாரத் தொகுதியானது வவுனியா நகர சபையின் கீழ் இயங்கி வருகின்றது இதற்கு பகல் மற்றும் இரவு இரு நேரங்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வியாபார நிலையத்தை உடைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கம்பி, கையுறைகள் என்பன சம்பவ இடத்தில் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த வியாபாரத் தொகுதியின் மற்றுமொரு கடையையும் உடைத்து திருடுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது எனறும் பொலிஸார் குறிப்பிட்டனர். வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி கமரா இயங்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. (ற-5,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் பேசும் காவியுடைகளால் நல்லாட்சிக்கு அர்த்தம் ஏதுமில்லை

### கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

அம்பாறை, நவ.23

காவியுடை தரித்து பற்றற்ற வாழ்வு வாழ்கின்ற மதகுருமார்கள் இனவாதம்பேசிசிறுபான்மை மக்களை நசுக்கினால் இந்த நாட்டில் நல்லாட்சி நிலவுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என கிழக்கு மாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெவ்வை தெரிவித்தார்.

வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தால் அட்டாளைச்சேனை அரபா வித்தியாலயத்துக்கு பத்திரிகை மற்றும் சஞ்சிகை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றத.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும், இன நல்லுறவையும் ஏற்படுத்த வேண்டிய மதகுருக்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை பகிரங்கமாக பேசி, தமது மதத்தைக் கொச்சைப் படுத்துகின்றனர்.

இதற்கு பிரதான காரணம் இனவாதம் பேசும் ஒருசில பௌத்த மதகுருமாரும், இனவாதம் கொண்ட அமைச்சர்களுமே.

நல்லாட்சி என்று சொல்கின்ற இந்தநாட்டில் நீதியமைச்சர் நாடாளுமன்றில் ஆற்றிய உரை, அம்பாறை மாவட்டத்தின் அமைச்சர் தயாகமகேயின் உரை மற்றும் மட்டக்களப்பு விகாராதிபதியின் ஒழுக்கமற்ற தன்மை என்பவற்றைப் பார்க்கின்ற பொழுது நல்லாட்சி என்பது கேள்விக்குறியாகவுள்ளது - என்றார். (க-ய-49)

# கடந்த பத்து மாதங்களில் 142 சிறுவர்கள் வதைபட்டனர்

அம்பாறை, நவ.23

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 10 மாத காலத்துக்குள், 142 சிறுவர்கள் சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ஜெமீல் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் 150ஆவது தினத்தையொட்டி அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர், பெண்கள் மீதான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் கூறியதாவது:


சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பெற்றோர்கள் முறைப் பாடுகளை செய்வதற்கு தயங்குகின்றனர். இவை, எதிர்காலத்தில்பெரும்பாதிப்பைஏற்படுத்தும்.

அம்பாறை மாவட்டத்தில், இவ்வருட தொடக்கத்திலிருந்து 142 பேர் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டனர். இலங்கையைப் பொறுத்தவரை, இன்று சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகள் கேள்விக்குறியாகியுள்ளன. சிறுவர் களின் பாதுகாப்பு தொடர்பாக ஒவ்வொரு பிரஜையும் அவதானமாக செயற்படவேண்டும் - என்றார். (க-ய-49)

# வான் பாயும் நிலையில் முல்லையில் இரு குளங்கள்

### ஏனைய குளங்களுக்கான நீர் வரத்து குறைவு





முல்லைத்தீவு, நவ. 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உட்பட்ட இரண்டு குளங்கள் தற்போது வான் பாயும் கட்டத்தில் உள்ளது. நேற்று மழை வீழ்ச்சி குறைவடைந்துள்ளதால் ஏனைய குளங்களுக்கான நீர் வரத்து குறைந்துள்ளது. இவ்வாறு வவுனிக்குள நீர்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அதனால் வீதிகளை மேவி வெள்ளம் பாயும் நிலை காணப்படுகின்றது. குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வவுனிக் குளத்தில், இரண்டு குளங்களே தற்போதைய நிலையில் வான்பாயும் நிலையை எட்டியுள்ளன.

26 அடி நீர் தேக்க கூடிய வவுனிக்குளத்தின் நீர் மட்டம் 11 அடி 10 அங்குலம், 10 அடி நீர் தேக்க் கூடிய தென்னியன்குளம் நீர் மட்டம் 6 அடி 4 அங்குலமும், 12 நீர் தேக்கக் கூடிய ஐயங்கன் குளம் நீர் மட்டம் 3 அடி 10 அங்குலமும், 10 அடி நீர் தேக்கக் கூடிய அம்பளப்பெருமாள் குளம் நீர் மட்டம் 6 அடி 3 அங்குலமும், 11 அடி 6 அங்குலம் நீர் தேக்கக் கூடிய கல்விளான் குளம் நீர் மட்டம் 4 அடி 6 அங்குலம், 9 அடி 6 அங்குலமும் நீர் தேக்கக் கூடிய மருதங்குளம் நீர் மட்டம் 7 அடி 1 அங்குலம், 9 அடி 6 அங்குலம் நீர் தேக்கக் கூடிய பழைய முருகண்டிக்குளம் நீர் மட்டம் 8 அடி 7 அங்குலமும், 9 அடி 6 அங்குலம் நீர் தேக்கக் கூடிய கோட்டை கட்டிய குளம் நீர் மட்டம் 6 அடி 6 அங்குலமும், 11 அடி நீர் தேக்கக் கூடிய கொல்லவிளாங்குளம் நீர் மட்டம் 4 அடி 10 அங்குலம், 12 அடி 6 அங் குலம் நீர் தேக்கக் கூடிய மல்லாவிக்குளம் நீர் மட்டம் 5 அடி 3 அங்குலமும், 11 அடி 2 அங்குலம் நீர் தேக்கக் கூடிய தேராங்கண்டல் குளம் நீர்மட்டம் 5 அடி 7 அங்குலமும், 9 அடி 6 அங்குலம் நீர் தேக் கக் கூடிய பணங்காமம் குளம் நீர் மட்டம் 4 அடி 3 அங்குலமும், 8 அடி நீர் தேக்கக்கூடிய அம்பல வன் சின்னக்குளம் நீர் மட்டம் 5 அடியாகக் காணப்படுகின்றது.

தற்போதைய நிலவரப்படி மருதங்குளம், பழைய முருகண்டி குளங்களே வான்பாயும் அளவுக்கு நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. நீர் ஏந்தும் பிரதேசங்களில் மழை வீழ்ச்சி குறைவடைந் துள்ளதால் குளங்களுக்கான நீர்வரத்தும் சற்றுகுறைவடைந்துள்ளது-என்று நீர்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-5.7)

### குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு

நுவரெலியா - அக்கரபத்தனை மன்றாசி நகரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை, நகரத்தை அண்மித்த பாலத்துக்கு அருகில் கொட்டப்படுவதால் ஆகு ரோயா ஆற்று நீர் மாசடைவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்கள் குளிப்பதற்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் இந்த ஆற்றுநீரையே பயன் படுத்துகின்றனர் பாதையோரத்தில் கொட்டப்படும் கழிவுகளை நாய்களும், காகங்களும் இழுத்துச் சென்று ஆங் காங்கே போடுவ தாலும் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது. (ய-43)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இனவாதத்தை ஒழிக்கும் பொலிஸ் எப்போது சாத்தியம்?

கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, களுத்துறையில் நடைபெற்ற பொலிஸ் நிகழ்வு ஒன்றில் ஆற்றிய உரை கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளது. பொலிஸார் இனவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் முழுமையாக இல்லா தொழிக்கும் கடமையைக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் அந்த நிகழ்வில் தெரிவித்திருக்கிறார். இலங்கையில் இனவாதம்தான் பிரிவினைவாதத்தின் அடிநாதம். இனவாதத்தை ஒழித்தால், பிரிவினைவாதம் தானே மறைந்துவிடும். ஆனால், இன்று வரையில் இனவாதத்தை ஒழிப்பதற்கான பாதையில் இலங்கைப் பொலிஸ் பயணிக்கவில்லை என்பதுதான் உண்மை. அதனடிப்படையில் அது பிரிவினைவாதத்திற்கான தூபத்தைத்தான் போட்டுக் கொண்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த அனைத்து இலங்கை மக்களுமே விடுதலை வேண்டி ஒன்றுபட்டிருந்தாலும்கூட, நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் சிங்கள இனவாதமே அதனைச் சிதைத்தது.

பௌத்த சிங்கள இனவாதமே தமிழர்களை இலங்கை என்ற நாட்டிலிருந்து அந்நியப்படுத்தியது. பிரிவினையை நாட வைத்தது. தனிச் சிங்களச் சட்டம், தரப்படுத்தல், பௌத்தத்துக்கு முன்னுரிமை போன்ற சிங்கள இனவாத நடவடிக்கைகளே தமிழ் இனவாதத்தையும் பின்னர் இந்த இரண்டும் சேர்ந்து முஸ்லிம் இனவாதத்தையும் கூர்மைப்படுத்தியது.

சிங்கள இனவாதம் மூண்டெழுந்து மூச்சுவிட்ட போதே அதனைக் கட்டுப்படுத்த, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தால், இத்தனை பேரழிவுகளை இலங்கை சந்தித்திருக்காது. 1956, 1977, 1983 இனக் கலவரங்களின் போதெல்லாம் பொலிஸார் சட்டத்தை மட்டுமே நிலைநாட்டப் பாடுபட்டிருந்தால் இன்று இலங்கை சிங்கப்பூரைவிட உயர்ந்த இடத்தில் இருந்திருக்கும். ஆனால், தமிழர்கள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் - இறுதிப் போர்க் காலங்களில்கூட - இலங்கைப் பொலிஸ் இனவாதிகளின் பக்கமே நின்றது. இனவாத ஆட்சியாளர்களின் ஏவலாளியாகத்தான் அது தன்னை அடையாளப்படுத்தியது. சில சமயங்களில் தலைவன் விசுவாசத்தையும் கடந்து தானே ஓர் இனவாத இயந்திரமாகத்தான் அது இயங்கியது. பிந்தெனுவெவ படுகொலைகள் அதற்குச் சிறந்த உதாரணம்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னரும்கூட பொலிஸாரின் இந்தப் போக்கில் மாற்றங்கள் பெரிதாக இல்லை. இன்னும் தமிழர்கள் என்பதற்காகவே அவர்களை மலினப்படுத்தி, இழிவுபடுத்தும் போக்குப் பொலிஸார் மத்தியில் பரந்தளவில் காணப்படுகின்றது. அதனைக் களைவதற்கான செயற்றிட்டங்கள் ஏதும் தற்போதைய கூட்டு அரசால் முன்வைக்கப்படவில்லை. அதன் பலாபலனையே அண்மையில் கொக்குவிலில் இரு பல்கலைக்கழக மாணவர்களைக் காவு கொடுத்து அனுபவித்தோம்.

இத்தகைய நிலையில், பொலிஸார் இனவாதத்தை ஒழிக்கவேண்டும் என்றால், அதற்குப் பொலிஸ் திணைக்களம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். பொலிஸார் மத்தியில் நிலவும் இனவாதச் சிந்தனை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். அதற்கான சிறந்த திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். சிங்களப் பொலிஸாருக்குத் தமிழ் கற்பிப்பதால் மட்டும் அது நிகழ்ந்துவிடாது. ஒரு சிந்தனைப் புரட்சி நிகழ்த்தப்பட வேண்டும். அதற்கு அர்ப்பணிப்பும் விடாமுயற்சியும் தேவை. தலைமை அமைச்சரின் வாய்ப் பேச்சுபோன்ற, ஒப்புக்குச் சப்பாணியான உரைகள் மட்டும்போதாது. ஆனால் அத்தகைய அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக அறியமுடியவில்லை. இன்னும் பிரிவினையை முறியடியுங்கள் என்கிற உசுப்பேற்றல்களையே கேட்கவும் காணவும் முடிகிறது.

# மேலதிக சீர்திருத்தங்களுடன் புனர்வாழ்வுத் திட்டம் இணைக்கப்படல் அவசியம்

**(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வரவு-செலவுத் திட்ட விவாத உரையின் நேற்றைய தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது)**

2017க்கான வரவு செலவுத் திட்டத்தில் கிராம மக்களின் நிலையான வாழ்வுக்கு பயனளிக்கும் விதத்தில் பாராட்டக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென நாம் நம்புகின்றோம்.

கிராமவாழ் பொருளாதார செயற்பாடுகளை மேம்படுத்தவும், சமூக வாழ்வு நிலையை உயர்த்தவும் உள்கட்டுமான விடயத்தில் கிராம மட்டத்தில் காணப்படும் இடைவெளியை நிரப்பும் விதத்தில் கூட்டுச்சேரவும், கௌரவ அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கிலுள்ள, கைவிடப்பட்ட நிலையிலுள்ள 1500 சிறிய குளங்கள் கவனிக்கப்பட்டு தூரெடுக்கப்பட்டு, மறுசீரமைக்கப்பட வேண்டும்.

மைக்ரோ, சிறிய, நடுத்தர நிதிநிறுவனங்கள் பிரதான சந்தைகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்கான நல்லதொரு சூழலை உருவாக்க வேண்டும்.

பொருளாதார ரீதியாக பலம் பெற்று தரகர்களை நீக்கும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களை, பெரிய ஏற்றுமதியாளர்களாக்குவது என்ற செயற்பாட்டை நாம் பெரிதும் வரவேற்கிறோம். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பெண்கள் தங்கள் உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெறமுடியாமல் இருப்பதைப் பாதிக்கும் முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்றாகும். வடக்கு கிழக்கைப் பொறுத்த மட்டில் சிறிய உற்பத்தியாளர் ஆனால் பெரிய உற்பத்தி என்பது உற்பத்தியையும் உற்பத்தியாளரையும் ஒன்றிணைத்து பெரிய அளவிலான உற்பத்தியில் நன்மையையும் தருகின்றது. பெரிய அளவிலான ஏற்றுமதியாளர்களாகுமுன்பு, நாம் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும்.

சிறிய, நடுத்தர நிதிநிறுவனங்களின் கடன்வழங்கும் திட்டத்தை நோக்கிய நகர்வு, வணிகத் திட்டத்தின் அடிப்படையில் கடன் வழங்கும் திட்டத்திற்கான நுழைவைத் தருகின்றது.

சிறிய, நடுத்தர அளவிலான தொழிலதிபர்களுக்கு கடன் வழங்குவதற்கான திட்டத்திற்கான ஆதரவு, தொழிலை ஆரம்பிக்கும் தொழிலதிபர்களுக்கு வட்டி மானியம் வழங்கல்

விவசாயத்திற்கான பயிர்க் காப்புறுதிகளை நீடித்தலும் காப்புறுதிச் சபை மிகையான பயிர்களை உள்ளடக்கி எங்கள் விவசாயிகளுக்கு அதிக உதவியளித்தல்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே இப்படியான தடைகள் காணப்படுகின்றன. இவற்றை நீக்குதல், பெரிய அளவில் முன்னேற்றத்தை அடைய வழிவகுக்கும் .

விவசாயத் தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள். எங்கள் பிராந்தியத்தில் இந்தத் துறைக்குள்ள எதிர்காலம் பெரிதானது, வளமானது.

முறைசாரப் பிரிவின் தொழிலாளருக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இயற்றப்பட வேண்டிய சட்டங்கள்.

முகவர் நிலையங்களின் அபிவிருத்திக்கான அங்கீகாரத்திற்கு நேரக் கட்டுப்பாடு விதித்தல்.

ஒரு இடத்தில் அடிமட்டத்திலான பொதுசன சேவை வழங்குவதற்கான முயற்சி

அனைத்துமேநடைமுறைப்படுத்துதல் என்றே மீண்டும் வருவதால், இந்தக் கோரிக்கைகள் அமைச்சுகள், திணைக்களங்கள், அரச ஊழியர்கள் என்ற சிக்கல்களுக்குள் தொலைந்து விடாமல் இருக்க வேண்டுமென்பதே எமது ஆவலாக இருக்கின்றது.

போர்ப் பாதிப்பிற்குள்ளான கிராமப்புற வேலைவாய்ப்புகள் ஒரு குறிப்பிட்ட தகுதி கொண்டவையாகவும், பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேலுயர்த்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒரு பெண்ணின் தலைமையில் பிள்ளைகளுடன் நகர்கின்ற வாழ்வமைப்பில் ஒரு நாளைக்கு வேலைக்குப் போய்வருவதில் 12மணி நேரம் செலவழிகின்ற வேலைகளாக இருப்பின் சமூக முன்னேற்றம் என்பதை இந்த வேலை வாய்ப்புகள் தரப் போவதில்லை.

தாமே வீட்டிற்கு உழைப்பவர்கள், மூத்தவர்கள் என்ற நிர்க்கதியான எண்ணம் இவர்களை இப்படியான வேலை வாய்ப்புகளை ஏற்க வைக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து காணும் காட்சி, ஏனைய மாவட்டங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. குடிநீரின் தரம், நீர்வள மூலங்கள், நிலத்தடி நீர் நிலைகள் ஆகியவற்றின் மீதான தாக்கங்களை ஏற்படுத்தும் சூழலைப் பற்றிய ஓர் ஆய்வு நடாத்தப் பட்டதா? இப்படியாக தவறான திட்டங்கள் தீட்டப்பட்டு சுற்றுப் புறங்கள் தரங் குறைக்கப்படுவதோடு, நமது மக்களின் நாளாந்த வாழ்வு பாதிக் கப்படும் விதத்தில் அரசின் செயற்பாட்டு முறைகள் போதுமான அளவு வெளிவாரியாக ஒருமுகப்படுத் தப்படவில்லை.

பெரிய கட்டடங்களை நிர்மாணிக்கும் செயல்முறையில் எங்கள் மக்கள் பங்கேற்கவே முடியாது. உள்ளூர்வாசிகளை வேலைக்கமர்த்தும் திறனுள்ள ஒரு நிறுவனமோ அல்லது இப்படியான கட்டடங்களை எழுப்பவல்ல திறனோ எம்மிடம் இல்லை. முழு உயர்ந்த கட்டடங்களும் வெளியார் உதவியுடனும், வளங்களுடனும்தான் செய்யப்பட வேண்டிய நிலையில் சமூக முன்னேற்றத்திற்கோ, பொருளாதார எழுச்சிக்கோ அடியோடு வாய்ப்பில்லாது போகின்றது. எங்களுக்கு தேவையானது அபிவிருத்தி. சுற்றுப்புறத்திற்கு ஏற்ப பொருத்தமான அபிவிருத்திதான் தேவைப்படுவது. அபிவிருத்தியை ஆரம்பிக்கு முன்னர் நாம் எமது சமூகத்தை மீட்க வேண்டும்.

சமூகரீதியாக பொருத்தமற்ற 65000 வீடுகள் கட்டப்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பெண்கள் தங்கள் உற்பத்திகளுக்கு நியாய மான விலையைப் பெற முடியாமல் இருப்பதைப் பாதிக்கும் முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்றாகும். வடக்கு கிழக்கைப் பொறுத்த மட்டில் சிறிய உற்பத்தி யாளர் ஆனால் பெரிய உற்பத்தி என்பது உற்பத்தியையும் உற் பத்தியாளரையும் ஒன்றிணைத்து பெரிய அளவிலான உற்பத்தியில் நன்மையையும் தருகின் றது. பெரிய அளவிலான ஏற்றுமதி யாளர்களாகுமுன்பு, நாம் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும்.

திணிக்கப்பட்டுள்ளன. இந்த நிர்மாணப் பணியில் உள்ளூர்வாசிகள் பங்கேற்க முடியாமல் போனமை சமூக முன்னேற்றத்திற்கோ பொருளாதார வளர்ச்சிக்கோ எந்த வழியில் உதவப் போகின்றது? இப்படியான கொழும்பு மத்தியின் பார்வைகளும் கட்டுப்பாடுகளும் சமூகத்தில் கலந்து கொள்ளும் சமிக்ஞையை எமக்குக் காட்டுவதாகத் தெரியவில்லை.

சமாதானம் என்னவென்பதில், நிறையக் குழப்பங்கள் எஞ்சிக் கிடக்கின்றன. தங்கள் கால்களை ஊன்றி நிமிர்ந்து நிற்பதும், தமது மனங்கள் சமாதானமடைந்த ஒரு நிலையை எட்டிப் பிடிப்பதும்தான் சமாதானம் என்று நாம் கூறுகின்றோம். இவர்கள் தமக்குள்ளே ஓர் அமைதியான நிலையைக் கண்டுவிட்டால், அது மேலும் பரவும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

நாம் தொடர்ந்து சந்திக்கும் பல்வேறு இடையூறுகளை இங்கே புகுத்தி பதிவில் வைக்க விரும்புகிறேன். சமூகத்தின் மறுசீரமைப்பு இன்றி மீள் குடியேற்றம் என்பது சாத்தியமானதொன்றல்ல. தற்போதைய புனர்வாழ்வுத் திட்டம் அடிப்படைத் திட்டங்களை மாற்றும் வகையில் மேலதிக சீர்திருத்தங்களுடன் இணைக்கப்படாவிட்டால் இது பாதிக்கப்பட்டவர்கள் பேணக்கூடிய தகைமையுள்ளதாகவோ, சீரமைக்கக் கூடியதாகவோ சமூக ஒருங்கிணைப்பு உள்ளதாகவோ இராது.

நாம் போர்ப் பாதிப்பிற்கு உள்ளானவர்களின் சமூகத்தினரின்சமூகநிலைப்பாடைமீளக்கொண்டுவரவேண்டும். ஏனென்றால், 41 வீதமானவர்கள் இடம்பெயர்ந்து சமீப காலத்தில் மீளக்குடியேறியவர்கள். முழுச் சமூகமும் போரினால் பாதிக்கப்பட்டதோடு, முன்னைய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் யுத்தம் முடிந்தும் தொடர்ந்த ஆறு வருடங்களிலும் பாதிப்பைச் சந்தித்தவர்கள். எங்கள் சொந்தக் கருத்துக்களை நேர்மறையாக, பலன்தரு முறையில் பலரும் செவிமடுக்கும் முறையில் வெளிப்படுத்த விரும்புகிறோம்.

வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கு ஆதரவு தருவதாக அறிவிக்கப்பட்டு, போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் வர்த்தக பிறப்பிடங்களை தேடிக் கண்டு பிடிப்பதை தாம் வரவேற்பதாகவும் கூறப்பட்டது. இது அவசரமானதாகவும், அவசியமானதுமாகவும் இருப்பதை நாம் உணர்கிறோம். காரணம், ஏனைய பிராந்தியங்களை விட ஒரு வர்த்தக ஆரம்பத்திற்கு நாம் பின் தங்கிய நிலையில் இருக்கிறோம். வடக்கு, கிழக்கு பிராந்தியங்களுக்கு வர்த்தக பிறப்பிடங்கள் மிகமிக முக்கியமானவை மாத்திரமல்ல மக்களுக்கு அரசு இப்படியொரு முயற்சியால் வரும் நன்மைகளையும், இதனால் தொழில் அதிபர்களாகின்ற வாய்ப்பைப் பெறுவதையும் உணர வேண்டும். இந்த விடயத்தில் கௌரவ அமைச்சரைப் பொறுப்பேற்க கோருவதோடு, போரால் பாதிக்கப்பட்ட எந்தெந்தப் பிராந்தியங்களில் வர்த்தக பிறப்பிடங்களைத் தொடங்க விரும்புகிறார் என்பதையும் அவர் வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் இப்படியான வர்த்தகப் பிறப்பு வலயங்களை ஆதரிக்க, சக்திவாய்ந்த கொள்கை கட்டமைப்பு ஒன்றையும், பொறிமுறையையும் உருவாக்குவதோடு கிராமங்களில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதாயும் இது அமைய வாய்ப்பளிக்கின்றது.

கௌரவ அமைச்சர் தேங்காய் எண்ணெயின் மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதை அனுமதித்து மீண்டும் ஏற்றுமதி செய்வது பற்றி பிரஸ்தாபித்திருந்தார். இதில் சம்பவிக்கும் குழப்பங்கள் பற்றிய ஆய்வு நடாத்தப்பட்டதா என்று நாம் அறிய விரும்புகிறோம். கடந்த காலங்களில் எண்ணெய் உற்பத்திகள் ஏற்றுமதிக்கு உள்நாட்டு தேங்காய்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வந்தமை இனிவரும் காலங்களில் இறக்குமதி செய்யப் படும் தேங்காய்களை பாவனைக்கு எடுப்பதாக மாறி, தேங்காய்களின் விலையில் வீழ்ச்சியும் ஏற்படும்.

பால்விலையை உயர்த்தி, பாலுற்பத்தியை அதிகரித்து வாழ்வாதாரத்தை உயர்த்துவதை நாம் வரவேற்கிறோம். என்றாலும் போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்கள் இப்படியான வசதிகளை ஏற்கும் செயற்திறன் கொண்டவைகளாக இல்லை. இப்படியான நடவடிக்கைகள் சாதகமான சுற்றுப்புறத்தையும், கூடிய கவனத்துடனான அணுகுமுறையையும் பாவனையாளர் இலகுவில் கையாளக்கூடியதாகவும், சமூகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள சிவில் அமைப்புகள் ஊக்குவிக்கப்பட்டு இப்படியானவற்றில் பங்குபற்ற கூடியதாகவும் இருக்கவேண்டும். கால்நடைகளை மக்களுக்குக் கொடுப்பதும், அவை வளர்க்கப்படும் பிராந்தியத்திற்கேற்றவையாக இருப்பதும், மிக முக்கியமானது. இது பொய்த்தால் வரண்ட பிரதேச மக்களுக்கு இது நடைமுறையில் வரும்போது எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை

மோசமான நிலையில் இருக்கும் மீன்பிடித் தொழில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தேசியரீதியாக அபிவிருத்தி கண்டுள்ள ஒரு அளவு எல்லோருக்கும் பொருந்தும் என்ற நிகழ்வு நிச்சயம் வட கிழக்கு மாகாணங்களை பிராந்தியப்படுத்துவதோடு, இனப் பாகுபாட்டையும் ஏற்படுத்தும். 3 தசாப்த காலத்திற்கு மேற்பட்ட போரும், குறிவைத்து செய்யப்பட்ட பிரச்சாரங்களும் ஒரு காலத்தில் பெருமைப்பட வைத்த மீன்பிடிச் சமுதாயத்தை பாழடித்துள்ளது. கடந்த காலங்களில் வடக்கின் பொருளாதார முது கெலும்பாக இருந்த இந்த மீன்பிடித் தொழில் தற்பொழுது பறித்தெடுக்கப்பட்டு விட்டது.

தொழில்நுட்பரீதியாக நாம் முன்னேற வேண்டிய கட்டாயம் இருப்பினும், அதி நவீனமும் சிக்கல் வாய்ந்ததுமான தொழில்நுட்பங்களால் உள்ளூரில் உள்ளவர்கள் பயனபெறப் போவதில்லை. 30 வருடப் போரால் சிதைந்து கிடக்கும் பிராந்தியத்தில் இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியை எதிர்பார்ப்பது நியாயமானதல்ல. உனக்கு தகைமை இல்லையென்றால் வெளியேறு. மற்றைய மாவட்டத்தில் உள்ளவர்கள் வந்து பொறுப்பெடுப்பார்கள் என்று சொல்லமுடியாது.

# கடமையில் கவனம் தேவை

அண்மையில் யாழ். மாவட்டத்தின் பிரதேச சபையொன்றின் கலாசார விழா சிறப்பாக நடந்தேறியதாக, நிகழ்வு குறித்த செய்தி, புகைப் படங்களுடன் உதயனில் வெளிவந்தது.

கலை, கலாசாரம் சம்பந்தமான பல விடயங்கள், குறித்த பிரதேச பிரிவில் எம்மை அறியாமல் நடந்தேறுகின்றன.

இவை எமக்கு கவலை அளிப்பதுடன் எம்மைப் புறக்கணிப்பதாகவும் உணர்கிறோம். எம்போன்ற கலைஞர்கள், படைப்பாளிகள் இந்த விழாக்களுக்கோ வைபவங்களுக்கோ அழைக்கப்படுவதில்லை.

இது பற்றி பிரதேச செயலர் நடத்தும் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டும் இந்தத் தவறு தொடர்கிறது.

தற்சமயம் குறித்த பிரதேச செயலர் பணிமனையில் மூன்று கலாசார உத்தியோகத்தர்களும், உதவியாளர்களும் பணிபுரிவதாக அறிய முடிகிறது. ஆள்அணி இருந்தும் தவறுகள் தொடர்கின்றன. இது பற்றி அண்மையில் தொலைபேசியூடாக ஒரு கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தவறுதலாக நடந்துவிட்டது என பழைய பதிலே கிடைத்தது. இருந்தும் என்னை தமது பணிமனைக்கு வருமாறும் சொன்னார். கலாசார உத்தியோகத்தர்கள் தமது பகுதியில் வாழும் மூத்த கலைஞர்களையும் படைப்பாளிகளையும் நன்கு அறிந்திருத்தல் அவசியம்.

இலைமறை காய்போல் இருந்து, நாட்டுக்கும், எமது சமூகத்துக்கும் இலவசமாக தமது பணியை வழங்கும் இவர்கள் தொடர்ந்து இலை மறை காய்போல் இருந்து முற்றிப் பழுத்து விழுந்து சமூகத்துக்கு பிரயோசனப்படாது போவதற்கு அரச பணியாளர்கள் அனுசரணையாளர்களாக இருத்தல் கவலைக்குரியது.

கலாபூசணம் மு.மாசிலாமணி,
கொக்குவில்.

# பொருத்து வீடும் தமிழ் அமைச்சர்களும்

ஐயா! இந்தப் பொருத்துவீட்டுத்திட்டம் சிறிது காலம் கிடப்பில் போடப் பட்டிருந்தது. வரவு – செலவுத் திட்டத்துடன் தூசுதட்டி அதை மீண்டும் கையில் எடுத்துள்ளார் அமைச்சர் சுவாமிநாதன். இதற்கு அமைச்சர் மனோ கணேசனும் பக்கப்பாட்டுப் பாடுகிறார். இந்த இரும்பு வீடொன்றின் பெறுமதி 21 இலட்சம் ரூபாய். இந்தப் பணத்தில் இரண்டு கல்வீடுகள் கட்டி முடிக்கலாம். இந்த வீடுகள் பல தலைமுறைகளுக்கு பயன்படக் கூடியவை. இந்த இரும்பு வீட்டை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின், இரும்பு வியாபாரி களுக்கும் விற்கமுடியாது. இவற்றை எல்லாம் இந்த அமைச்சர்கள்சிந்திப்பதாகத் தெரியவில்லை. எவரோ ஒரு பணமுதலைக்கு உதவுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள். காலம் காலமாய் தமிழ் அமைச்சர்களின் பிறசிந்தனையற்ற செயல்களால் துன்பங்களை அனுபவிப்பதே தமிழினத்தின் தலைவிதியாகிவிட்டது. குறிப்பாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொடுக்க இந்த அமைச்சர்களால் முடிந்ததா? முழுமனதுடன் முயற்சித்தார்களா? அவர்களின் துயர்மிகுந்த அவல வாழ்வுக்கு முடிவேதும் இல்லை. இந்த நிலையில் இனவாத அரசின் இன அழிப்பு போரால் அனைத்தையும் இழந்த தமிழ் மக்களின் தலையில் சுமத்த முயற்சிக்கிறார்கள் இந்த இரும்புக் குவியலை. தமிழினத்துக்கு கேடுவிளைவித்ததும், விளைவிப்பதும் பதவி வெறிபிடித்த தமிழ்த் தலைவர்களே! இவர்கள் திருந்தும் நாள்வருமா?

ப.யேசுபாதம், மாயவனூர்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோத பாதிரியார்

பிறிட்டோறியா, நவ. 23
தென்னாபிரிக்காவின் லிம்போபோ மாகாணத்தில் உள்ள பாதிரியார் ஒருவர், நோய்களைக் குணமாக்குவதற்கு பூச்சி மருந்துகளை பொதுமக்கள் முகத்தில் ஸ்பிறே செய்வது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
லெதிபோ றபலாகோ என்ற குறித்த பாதிரியார் தன்னைத்தானே தீர்க்கதரிசி என பிரகடனப்படுத்திக்கொண்டதுடன், பொது மக்களின் நோய்களைக் குணமாக்குவதாகத் தெரிவித்து பூச்சி மருந்துகளை முகத்தில் அடித்து வருகிறார். கடவுளின் வல்லமை அந்த பூச்சி கொல்லிகளில் இருப்பதாகச் சொல்லியே அவர் இவ்வாறான செயல்களைச் செய்கிறார்.
நம்பிக்கைகொண்ட ஏகப்பட்ட மக்கள் முண்டியடித்துக் கொண்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)





## சவூதிக் கூட்டுப்படை ஏமனில் குண்டுமழை

சனா, நவ. 23
ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராக கடந்த ஞாயிற் றுக்கிழமையும், நேற்றுமுன்தினமும் சவூதிக் கூட்டுப் படையால் பெரும் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஏமனில் ஹௌதி ஆயுதக் குழு முகாமிட்டுள்ளது. ஏமன் அரசுக்கு ஆதரவாக சவூதி போரிட்டு வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமையும், நேற்றுமுன்தினமும் வான் வழியாகவும், தரைவழியாகவும் சவூதி பெரும் தாக்குதல்களை அரங்கேற்றியுள்ளது. 15 ஆயுததாரிகள் சாவடைந்தனர். ஹௌதிக் குழுவின் எதிர்த் தாக்குதலில் 9 சிப்பாய்கள் சாவடைந்தனர்.
ஏமன் அரசுக்கும் ஹௌதிக் குழுவுக்கும் இடையே நடைபெற்ற போரில் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.
3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்ததுடன், 21 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான நெருக்கடி நிலை ஏற்பட் டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. (ம-எ)

# ஐ.எஸ்.ஐ.எஸ் 3 ஆயிரத்து 2

## அவர்களில் பலர் மெ

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் 3 ஆயிரத்து 200 ரஷ்யர்கள் இணைந்துள்ளனர் என்று தெரிவித்த அந்த நாட்டின் அயலுறவுத்துறை, நன்கு பயிற்சிபெற்ற 900 ஆயுததாரிகள் தற்போது ரஷ்யாவுக்குத் திரும்பியுள்ளனர். அவர்களால் ரஷ்யாவுக்கு பெரும் ஆபத்து எனவும் எச்சரிக்கை விடுத்தது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு எனப் பிரகடனம் செய்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் அழிவுக்காக உலக நாடுகள் பலவும் தமது தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றன. அமெரிக்காவின் தலைமையில் கூட்டுப்படைகளும், ரஷ்யாவும் ஐ.எஸ். அமைப்புக்கு முடிவு கட்டுவதில் மும்முரமாக உள்ளன. குறிப்பாக சிரியாவிலிருந்து ஐ.எஸ்ஸை விரட்டுவதில் ரஷ்யா மும்முரமாக



உள்ளது. இவ்வாறு அந்த அரசு ஆயுதக் குழுக்களுக்கு எதிராக ஓர் முனையில் தாக்குதல்களை நடத்திவர

## ஒபாமா - புடின் திடீர்ச் சந்திப்பு

மொஸ்கோ, நவ.23
பேரு நாட்டில் நடைபெற்ற 28 ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் தமது அட்டவணைகளுக்கு முரணாக திடீர்ச் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.
4 நிமிடங்கள் மட்டுமே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
சிரியா, உக்ரைன் நாடுகளின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடினர்.
மாநாட்டின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஒபாமா, சிரியாவில் இடம்பெறும் போர் தொடர்பாக எமக்கு அக்கறை உண்டு எனத் தெரிவித்தார்.
மாநாடு தொடர்பாக புடின் தெரிவிக்கையில்,
கடந்த சில வருடங்களாக எம்முடன் இணைந்து பணியாற்றியதற்கு ஒபாமாவுக்கு எனது நன்றிகள். நீங்கள் விரும்பிய நேரம் ரஷ்யாவுக்கு வரலாம். உங்களை வரவேற்க நாம் தயாராகவுள்ளோம்-என்றார்.
அமெரிக்கா-ரஷ்யாவுக்கு இடையே தற்போது சீரற்ற அரசியல் உறவு காணப்படுகிறது. இந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)





வடகிழக்கு சீனாவின் சாங்சி மாகாணத்தில் நேற்றுமுன்தினம் 56 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 17 பேர் உயிரிழந்தனர். மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட பனி மூட்டத்தால் இந்த விபத்து இடம்பெற்றது என முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)

## ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்

### 27 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர்

காபுல், நவ.23
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமைந்துள்ள ஷியா பிரிவினருக்குச் செந்தமான பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டனர், 50 பேர் காயமடைந்தனர். வருடாந்த சடங்குகளை நிறைவேற்றுவதற்காக ஷியாப் பிரிவினர் குழுமிய போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்புக் கூறியுள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 50 இறகும் அதிக மானவர்களில் சிலரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதை அடுத்து, உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..அமைப்பில் ..00 ரஷ்யர்கள்

## ..ாஸ்கோவில்



மறுமுனையில்ரஷ்யர்கள்சிலர்ஐ.எஸ். ஐஎஸ்.அமைப்பில்இணைந்து ரஷ்யா வுக்கே எதிரிகளாக மாறியுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பில் இணைந்துள்ள 3 ஆயிரத்துக்கும் அதிகமான ரஷ்யர் களை விட நாட்டுக்குத் திரும்பியுள்ள 900 ஆயு தாரிகளாலேயே நாட்டுக்கு பெரும் பாது காப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நன்கு பயிற்சி கொடுக்கப் பட்ட ஆயுததாரிகள் தற்போது நாட்டுக்குள் உலா வருகின்றனர். அவர்களால் எந்தநேர மும்தற்கொலைத்தாக்கு தல்களை நடத்த முடி யும். இந்தச் சவாலை நாம்திறம்படக் கையாள் வது அவசியம் என குறித்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டது. (ம-எ)

# ஐரோப்பாவுக்கு பயணிக்க வேண்டாம் தனது மக்களுக்கு அமெ. எச்சரிக்கை

பரிஸ், நவ. 23

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணிப்பதைக் குறைக்கும் படி தனது மக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது.

விடுமுறை காலங்களில் ஏராளமான அமெரிக்கர்கள் ஐரோப்பாவுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ள னர்.

ஆனால் இம்முறை ஐரோப்பிய நாட்டுப் பயணங் களைத் தவிர்ப்பது சிறந்தது என அந்த நாட்டு மாநிலச் செயலகங்கள் தமது மக்களுக்கு அறி வுறுத்தியுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் அண்மைக் காலங்களாக ஐரோப்பாவில் பரவலாகக் கைதுசெய்யப்பட்டதை அடுத்தே இந்த அறிவிப்பை அமெரிக்கா விடுத் தது. (ம-எ)



# கான்பூர் ரயில் விபத்து சாவு 143ஆக உயர்வு

இந்தியாவின் கான்பூர் நகருக்கு அருகே கடுகதி ரயிலொன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143 ஆக உயர்ந்தது.

மத்தியப் பிரதேசம் மாநிலத்தில் உள்ள இந்தூரில் இருந்து உத்தரப் பிரதேசம் மாநிலம் வழியாக பீகார் மாநில தலைநகர் பாட்னா நோக்கி சென்று கொண்டிருந்த கடுகதி ரயில், கடந்த ஞாயிற்றுக்கிழமை; அதிகாலை கான்பூர் நகருக்கு அருகேயுள்ள புக்ரயான் என்ற இடத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. ரயிலின் 14 பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று படு பயங்கரமாக மோதின. சம்ப இடத்தில் 45 பேர் உடல் நசுங்கிச் சாவடைந்தனர்.

175 பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர். மருத்துவ மனையில்மேலும்98பேர்உயிரிழந் ததை அடுத்து, சாவு எண்ணிக்கை 143 ஆக உயர்ந்துள்ளது. (ம-எ)





# குரங்குச் சேட்டை

குரங்கு செய்த சேட்டையின் விளைவாக ஏற்பட்ட கலவரத்தால் 16 பேர் உயிரிழந்த சம்பவம் லிபியாவில் இடம்பெற்றது.

லிபியா நாட்டின் தலைநகரான திரிபோலியில் இருந்து சுமார் 640 கி.மீ. தொலைவில் பழங்குடியினர் வசிக்கும் சபா என்ற நகர் அமைந்துள்ளது. இந்த நகரில் உள்ள குடியிருப்பில்-குரங்கு ஒன்று செல்ல மாக வளர்க்கப்பட்டு வந்தது. சில தினங்களுக்கு முன்னர், குரங்குக்கு சொந்தமான 3 பேர் சாலையில் சென்ற சிறுமிகள் மீது குரங்கை ஏவி விட்டுள்ளனர். சிறுமிகள் மீது ஏறிய குரங்கு, ஒருவரின் முகத்தைக் கிழித்துக் காயமேற்படுத்தியுள்ளது. சிறுமிகளுக்கு நேர்ந்த சம்பவத்தால் ஆத்திரம் அடைந்த குடும்பத்தி னர் ஆயுதங்களை எடுத்துச்சென்று குரங்கை ஏவிய 3 பேரையும், குரங்கையும் சுட்டுக் கொன்றனர். தங்க ளது இனத்தவர் கொல்லப்பட்டதால் ஆத்திரம் அடைந்த உயிரிழந்தவர்களின் பகுதி மக்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டதில் குழந்தை கள், பெண்கள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்தனர். 4 நாள்கள் குறித்த கலவரம் இடம்பெற்றது எனவும்-இராணுவத்தினரால் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும்-தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



# ஜப்பானில் சுனாமி நிலஅதிர்வையடுத்து

டோக்கியோ, நவ. 23

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து அங்கு சிறிய சுனாமி அலைகளும் ஏற்பட்டமை பர பரப்பை ஏற்படுத்தியது.

கொன்சு பகுதியில் அதிகாலை வேளையில் இடம்பெற்ற இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவில் 6.9 எனப் பதிவாகி யது. எவரும் உயிரிழக்கவில்லை. மூவர் படுகாய மடைந்தனர். நில அதிர்வையடுத்து குறித்த பகுதியின் கடற்பரப்பில் மூன்று தொடக்கம் ஐந்து மீற்றர் வரை யிலான சுனாமி அலைகளும் ஏற்பட்டன.

கொன்சுப் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட நிலஅதிர்வால் 20 ஆயிரம் மக்கள் சாவ டைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



# சைக்கிளோட உரிமை வேண்டும்

கைரோ, நவ.23

எகிப்தின் வட பகுதியில் சைக்கிள் ஓடுவதற்கு சம உரிமை கோரி நூற்றுக்கணக்கான பெண்கள் இணைந்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

எகிப்திய வழக்கத்தில் பெண்கள் சைக் கிள் ஓடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள் ளது. பெண்கள் முகத்தை மறைத்து கலாசார ஆடை அணிந்தவர்களாக வலம் வரவேண்டும் என்பது அங்கு கட்டாயமாகும். இந்த நிலையில் ஆண் களைப் போன்று பெண்களும் சைக் கிள் ஓட்டும் உரிமையைப் பெறவேண் டும் எனத் தெரிவித்து-அவர்கள் ஆர்ப் பாட்டங்களை நடத்தினர்.

'எந்த வேறுபாடுகளும் இல்லை' என்ற தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த குழுவினர், மிகப் பெரிய சைக்கிள் ஓட்டப் பேரணியை நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டம் எகிப்தியத் தொலைக்காட்சிகளில் நேரடி நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகியது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவிகள், இளம் பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். பெண் களுக்கு ஆதரவாக சில ஆண்களும் கலந்துகொண்டனர். (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுந்த வாசத்தில் மகிழும் நாராயணதாசன்

கே.எஸ்.சிவஞானராஜா

ஒரு கோடி சூரியரும், ஒருகோடி சந்திரரும், ஒருகோடி நட்சத்திரங்களும் மின்னினால் ஒளிரும் ஒளிப்பிரவாகம் எப்படியோ அவ்வாறு பளிச்சிடும் வியனுலகந்தான் வைகுந்தம் ஆகும். தேவர்களும், முனிவர்களும், சுவர்க்கவாசிகளும், தவயோகிகளும் வேத மூத்தவர்களும், நாதமாதவர்களும் வணங்கி அனுபவிக்கும் வைகுந்தவாசமதில் கடந்த ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமையன்று நராயணதாசன் என்று பெயர் சூட்டப்பெற்ற குருநாதர் பொன்னையா சிவகுருநாதன் பெரியார் வைகுந்த வாசப்பெரும் பேரின்பமாம் பெருவாழ்வு பெற்றார். வையக வாசத்தில் தொண்ணூற்றி நான்கு வருடங்கள் பண்போடும்-பத்தியமாகவும்-பக்குவமாகவும் பகவத்கீதையாகவும் வாழ்ந்து பொன்னாலை மண்ணைப் பேறாக்கி வடபுலத்துக்கு ஒரு வரமானார் ஐயா நாராயணதாசன்.

**தோற்றம்**

தும்பளையைப் பிறப்பிடமாகவும், பொன்னாலையை நிரந்தர வசிப்பிடமாகவும், நல்லூரைத் தற்கால வதிவிடமாகவும் கொண்ட நாராயணதாசன் காலஞ்சென்ற பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வயிரமுத்து-தங்கம் தம்பதியரின் மருமகனுமாவார். 1922.07.04 ஆம் திகதி பிறந்த காரணத்தினால் நாலுந்தெரிந்த நாராயணதாசனாகி பொன்னாலைக்கு மகிமை சேர்த்தார். எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து இங்கே பொன்னாலையில் குடியேறி நல்லூரிலே படியேறினார். அவர்தம் குடும்பம் கல்விப்பேறினால் உயர்ந்தது.

பக்தி எப்படியா தன்னையறியாமல் கண்ணன் குடியேறி உள்ளத்தில் விளையாடியமையால் 1944 இல் இருந்து அவர் வைகுந்தம் செல்லும்வரை 6000 புத்தகங்களிலும் நாராயணனின் பக்திரசம் சொட்டும் ஏராளமான கீர்த்தனைகளை இயற்றி தலையாய ஒரு பஜனைச் சந்தியை உருவாக்கிய பேறுடன் பெறுமதியாகி வடபுலத்தில் பக்தியூற்றைப் பெருகிட வழிசமைத்தார். இந்த ஊற்றிலே இப்போதும் பொன்னாலையில் குளிப்பவர்கள் ஏராளம்-ஏராளம். அதனை இரசிப்பவர்களும் அனுபவிப்பவர்களும் தாராளம்-தாராளம். பொன்னாலைக் கண்ணனுக்கு இதுவே ஞாயிறு தோறும் பூபாளம். ஸப்ததாளம் இலங்கையில் பெறுமதியான பஜனைக்குழுவில் நாராயணதாஸ் முன்னிலைப்படுத்திய பொன்னாலை பஜனைக்குழு தரமும்-தாகமும் தாற்பரியமும் மிக்கதாகும். இந்தப் பஜனையைக் கேட்டாலே துன்பம் பறந்தோடும்.

**பாடல்**

பொன்னாலயம் என்று சொல்லச் சொல்ல ஓடிப் போகுமே நம்வினை.
மெல்ல மெல்ல அந்நாளில் இந்திரன் ஸ்ரீதேவி வணங்கியே அருள்
பெறும் மாயனார் அமர்ந்திட்ட கோயில்

பொன்னாடம் ஈழத்திருநாட்டிலே புகழ்
பொங்கும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலோ
மின்னும் எழில் சேரும் மேற்திசையில் ஐயன்
பொன்னாமையாய் வந்து உறைந்திட்ட கோயில்

சதுரங்கம் என்றொரு நாமத்துடன் உயர்
ஸ்ரீரங்கத் திருப்பதி போலமைந்து
சாற்றும் திருவீதி ஏழுடனே எங்கள்
சாரங்கபாணி இருக்கின்ற கோயில்



வேத் விற்பன்னர்கள் பேரறிஞர் செந்நெல்
விளைவிக்கும் உழவர்கள் பசித்தவர்க்கு
அன்னமளிப்பவர் சூழும் பொன்னாலையில்
ஆதிநாராயணன் வாழ்கின்ற கோயில்

ஆவணி மாதத்தில் ரோகிணியில் வரும்
அட்டமித்திதி பார்த்துத் தேர்பவனி
காணும் அடியார்க்கு அருள்புரியும் மாயக்
கண்ணன் அமர்ந்திட்ட பேராலயம்

இதுபோன்ற ஆயிரக்கணக்கான பக்திக் கீர்த்தனைகளையும் நாம சங்கீர்த்தனங்களையும் பஜனைப் பாடல்களையும் இயற்றி கேள்வி ஞானத்தின் பிரகாரமும் அனுபவ வாலாயத்தில் பிரகாரமும்-இராகங்களையும்-தாளங்களையும் மிகவும் பொருத்தமாக இட்டு அவற்றைப் பாடியும் காட்டி நூல் வடிவிலாக்கி வெளியிட்டமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

**புண்ணியவான்**

சுமார் எழுபத்திரண்டு வருடங்கள் கண்ணனோடு வாழ்ந்தும், பாடியும்-ஆடியும் அனுபவித்தும் பசியாறியும் பரவசப்பட்டும் போற்றியும் வணங்கியும், வாழ்த்தியும் வரம் பெறவும் வாய்த்த பேறு எவருக்கும் கிடைக்காத பாக்கியமாகும். இதனால் இவர் ஒரு புண்ணியவானாகப் போற்றப்படுகிறார். யார் கோயிலுக்குச் சென்றாலும் இவரது உடல் மொழியும் உள வழியும் 'நாராயணா நாராயணா' என்று கைகூப்பி வைக்கும். அவரது நாராயணா நாம சங்கீர்த்தனம் பொன்னாலைக் கோபுரமாய் வானுயர்ந்து ஒலிப்பதாக.

நாமமதே அண்டசராசரம் யாவினுக்கும்
ஆதார நிலையாகுமே ஸ்ரீ ராம

ஆம்! இவரைப் போலவே இவர்தம் குடும்பமும் பொன்னாலையின் சிறப்புக்கு மகிமை சேர்க்கிறார்கள். நாராயணதாசின் பாராயணம் என்றும் தொடரட்டும்.



## 'காலப் பழி' கவிதை நூல் வெளியீடு

கவிஞர் யாத்ரிகனின் 'காலப் பழி' கவிதைநூல் அண்மையில் வெளியிடப்பட்டது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கவிஞர் த. ஜெயசீலன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், கவிஞர் கருணாகரன், தி. செல்வமனோகரன், இ. இராஜேஸ்கண்ணன் ஆகி யோர் உரை நிகழ்த்தினர். கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறீ நூலை வெளியிட்டு வைக்க, யாத்ரிகனின் பெற்றோர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டனர். நூலின் ஏற்புரையை யாத்ரிகன் நிகழ்த்தினார். (108)



## ஜெனாத்தகனின் கவிதை நூல் வெளியீடு

வே . முல்லைத்தீபன்

மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த 17 ஆம் திகதி மார்க் ஜெனாத்தகனின் 'கன்னிக் கவிதை' எனும் நூல் வெளியிடப்பட்டது. சுமார் 250 க்கும் மேற் பட்ட இலக்கிய ஆர்வலர்கள் இதில் கலந்து சிறப்பித்திருந்தனர். மல்லாவி ம.க. அதிபர் ஜேசுதானந்தர் தலைமை தாங்க. பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பங்கேற்றிருந்தார். நிகழ்வுகளை வே. முல்லைத்தீபன் தொகுத்து வழங்கியிருந்தார். வரவேற்புரையை மல்லாவிக் கஜன் நிகழ்த்தினார்.

கடுமையாகப் பெய்த மழை சரியாக நிகழ்வுகள் தொடங்குவதற்கு முன்னர் ஓய்ந்து- மீண்டும் நிகழ்வுகள் முடிவடைந்ததும் வந்திறங்கியது. நல்ல ஒரு காலநிலையும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவீந்திரன், துணுக்காய் பிரதேச செயலர் இ.பிரதாபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக முல்லை கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன், துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.ஜெயபாலன், தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி புத்திரி, கம்பீரக்குரலோன் நாகேந்திரராசா, அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மதிப்புமிகு உருத்திர மூர்த்திக் குருக்களும், வணபிதா குயின்சன் அடிகளாரும் மங்கல விளக்கையேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

மார்க் ஜெனாத்தகன் புலம்பெயர் தேசத்தில் இருந்தாலும் தாய்த் தேசத்தின் மீதான பற்றோடு தான் இருப்பதாக வீடியோ மூலமாக அவரது உரையில் கூறியிருந்தார்.

வெளியீட்டுக்கு முன்பதாக எஸ்.ஜி. சாந்தனின் மகன் கோகுலனின் இனிமையான மெலோடி பாடல் எல்லோரையும் அமைதிப்படுத்தியது.



நூலை, கல்வி அமைச்சர் வெளியிட்டு வைக்க, மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. மிகச் சிறந்ததொரு நூலாராய்வுரையை முல்லை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவன் நிகழ்த்தினார். அப்பட்டமாகத் தான் சொல்லவருகின்றதை தெளிவாகவும் நடைமுறைக்கு ஏற்றால்போலும் கூறியிருந்தார். நன்றியுரையுடன் கூடிய ஏற்புரையை ஜெனாத்தகனின் தாயார் ஜெகதீஸ்வரன் விஜயலட்சுமி நிகழ்த்தினார்.

உண்மையில் நிகழ்வுகள் முடியும் வரை அதிதிகள் உட்பட ஆர்வலர்கள் அனைவரும் அமர்ந்திருந்தமை சிறப்பாகவே அனைவராலும் பேசப்பட்டது. முல்லை மாவட்ட இலக்கிய வறட்சிக்குப் பசுமை சேர்ப்பதாக, மல்லாவியில் இருந்து புத்தகங்கள் வெளிவருகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போர்க்கால இலக்கியங்கள்-8

# த.ஜெயபாலனின் வட்டுக்கோட்டையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை

நா.யோகேந்திரநாதன்

*சென்றவாரத் தொடர்ச்சி*

"விடுதலைப் புலிகளுக்குப் பதிலாகப் புளொட், ரெலொ, ஈ.பி.ஆர். எல்.எவ், ஈரோஸ், ஈ.பி.டி.பி. எவராவது விடுதலைப் புலிகளைப் போல் அதிகார நிலையை அடைந்திருந்தால் அவர்களும் விடுதலைப்புலிகளுக்குக் குறைவில்லாமல் தங்கள் மக்கள் விரோத நடவடிக்கைகளைச் செய்திருக்க மாட்டார்கள் என்பதற்கு எந்தவித உறுதியும் இல்லை. தங்களிடம் ஒரு குறுகிய காலத்துக்கு அதிகாரம் இருந்தபோதே இவர்கள் போட்ட அட்டகாசங்கள் இன்றும் பேசப்படுகின்றன. இதனை இங்கு நான் சுட்டிக் காட்டுவது விடுதலைப் புலிகளை நியாயப்படுத்தவல்ல. இந்த மாற்று அமைப்புக்களிடமும் ஒரு புலி உறங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தப் புலி புலம் பெயர்ந்து வாழும் மாற்றுக் கருத்துக் கொண்ட ஜனநாயகங்களிடமும் உறங்கிக் கிடக்கிறது. இந்தப் புலி இயல்பு, புலிகளது மட்டுமல்ல, எமது சமூகத்தின் ஒரு கூறு. அதனை வேர றுப்பதற்கான ஜனநாயகத்துக்கான போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்".

நூலாசிரியர் இந்தக் கருத்தை முன் வைத்ததன் மூலம் விடுதலைப் புலிகள் ஏனைய ஆயுதக் குழுக்கள் மாற்றுக் கருத்துள்ள ஜனநாயகவாதிகள் என ஒட்டு மொத்தமாக எமது சமூகத்தின் மத்தியில் ஒரு புலி உறங்குவதாக இனம் கண்டுள்ளார். ஆனால் அந்தப் புலி எது எனச் சொல்ல மறுத்துவிட்ட நிலையில், அதற்கு எதிராகத் தொடச்சியான ஜனநாயகப் போராட்டம் தொடரப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

அது-எது-என்பதை எம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை எனினும் இந்த நூல் அவர் வெளிப்படுத்தும் கருத்துக்களைப் பொறுத்து அந்தப் புலி, உறங்கிக் கிடக்கும் புலி எதுவென ஊகிக்க முனைந்தபோது, அது ஏனையவர்களின் கருத்துக்களை பரிசீலிக்காமலே இது நிராகரித்துவிடும். சர்வாதிகாரப் போக்கு "என கருதத் தோன்றுகிறது. இது சரியாக இருக்குமோ என்பதை அவர் தான் உறுதி செய்யவேண்டும்.

ஜனநாயகம் இல்லாத மத்தியத்துவம் சர்வாதிகாரமானது. அதே வேளையில் மத்தியத்துவம் இல்லாத ஜனநாயகம் குழப்பகரமானது. அது எந்தவிதமான முன்னகர்வையும் தடுத்து-தேக்க நிலைக்குள் தள்ளி விடும். ஜனநாயக மத்தியத்துவமே சரியான திசை மார்க்கமாகும். இது, காலம் காலமாகப் புரட்சியாளர்களால் பின்பற்றப்பட்டுவரும் மாக்சியத் தத்துவமாகும்.

இந்த நூலாசிரியரின் குற்றச்சாட்டு ஜனநாயகமற்ற மத்தியத்துவம் எல்லா இடங்களிலும் நிலை கொண்டுள்ளது என்பதாகவே படுகின்றது.

பிரபாகரன் சர்வாதிகாரத்தனமாகத் தானே எந்த முடிவையும் எடுக்கும் சர்வாதிகாரப்போக்குக் கொண்டவர் என்ற குற்றச்சாட்டு பலராலும் கூறப்பட்டு வருவது உண்மை. இங்கு அவர் மட்டுமன்றி ஆயுதக் குழுக்கள் உட்பட பலதரப்பினரும் அப்படித்தான் எனக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகராக அன்ரன் பாலசிங்கம் இருந்தார் என்பதும்- தலைவர் மூத்த தமிழ் உணர்வாளர்களையும் கலை இலக்கியவாதிகளையும் மாவீரர் வாரத்தில் அழைத்து மனம் திறந்து உரையாடுவார் என்பதும் எவ்வித முன்னறிவித்தலுமின்றிப் போராளிகளின் முகாம்களுக்குச் சென்று அவர்களின் கருத்துக்களைப் பொறுமையாகக் கேட்பார் என்பதும் வன்னியில் மக்கள் அறிந்த விடயங்கள். இந்த நூலாசிரியர் போன்றவர்கள் அதை அறிந்திருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அடிப்படையில் தலைவர் பல்வேறு மட்டங்களிலும் கருத்துக்களைப் பெற்றுத்தொகுத்து, அன்ரன் பாலசிங்கத்துடன், இணைந்து நெறிப்படுத்திய பின் அரசியல்துறைப் பொறுப்பாளர்கள், தளபதிகளுடன் கலந்துரையாடிய பின் இறுதி முடிவுகளை எடுப்பார். அதன் பின்பு கட்டளைகள் கேள்விக்கு உட்படுத்தப் படாமல் நிறைவேற்றப்படும்.

இது புரட்சிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாக்சிய ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடாகும். உண்மையான தலைமைத்துவத்தின் ஆளுமையும் கட்டுப்பாடும் அப்படித்தான் நிலை நிறுத்தப்படுவதுண்டு.

இதையே இந்த ஜனநாயகவாதிகள் பிரபாகரனின் சர்வாதிகாரம் எனக் கூக் குரலிடுகின்றனர்.

அடிப்படையில் இவர்கள் மத்தியத்துவம் அற்ற ஜனநாயகத்தை அதாவது குழப்பங்களையே கோரி நிற்கின்றனர். சட்டை கசங்காது வெறும் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற கோசங்களை எழுப்பியவாறு தாங்கள் மேற்கொள்ளும் விமர்சனங்களை களங்களில் குருதியும் வியர்வையும் சிந்தி உயிர்களையே அர்ப்பணிக்கும் போராளி அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இவர்கள் நிலைப்பாடாகும். எல்லாம் வல்லவர்களாக எல்லாம் தெரிந்தவர்களான தம்மை இனங்காட்டும் இவர்களின் போதனைகளைப் பின்பற்ற விடுதலைப் போராட்டம் என்பது ஒரு கல்லூரியை நடத்தும் நடவடிக்கையோ அல்லது ஒரு மதம் பரப்பும் நடவடிக்கையோ அல்ல. அது ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் விலங்குகளை உடைக்க மேற்கொள்ளும் குருதி சிந்தும் நடவடிக்கை.

இனவாதத்தின் பிடிக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களை அதிலிருந்து விடுவித்து இன ஒற்றுமைக்கான குரல்களை ஓங்கி ஒலிப்பது மிக அவசியமாகும். பல்வேறு வழிகளிலும் கூறுபோடப்பட்டுள்ள மக்கள் நெருங்கி வரும்போது, அந்த மக்கள் சக்தியே மகிந்த மாத்தையாக்களுக்கும் தம்பி பிரபாகரன்களுக்கும் பதில் கொடுக்கும். இன உறவுகள் வலுப்படுவது என்பது இவர்கள் இருவருக்குமே ஆபத்தானது. இனவாதத்தளைகளிலிருந்து மக்கள் விடுவிக்கப்படும்போது அவர்கள் தங்கள் முன்னுள்ள உண்மையான பிரச்சினையை உணர்வார்கள். அது சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், மலையக தமிழர்களுக்கும் பொதுவானது என்பதை உணர்வார்கள்.

இது வெளிப்படையில் நூலாசிரியரின் யதார்த்தத்துக்கு வெளியேயான ஓர் அழகிய கற்பனைக் கனவு போல் தோன்றினாலும் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் என்ற கொடிய சுரண்டல் கொள்ளைக்குச் சேவகம் செய்யும் ஒரு நயவஞ்சகமான கருத்து விதைப்பாகும்.

இன ஒடுக்குமுறையும், இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான போராட்டமும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட போதிலும், ஒன்றுக்கொன்று நேர் எதிரானவையாகும். இந்த இரண்டு எதிரான விடயங்களையும் ஒன்றாகக் காட்டி இரண்டையும் ஒன்று என்ற பேரில் குழப்பியடிக்க முயல்கிறார். ஒடுக்கியவர்களையும் ஒடுக்கப்படுபவர்களையும். ஒன்றாகப் போட்டுக் குழப்புவது ஒடுக்குமுறையாளர்களை நியாயப்படுத்தும் ஒரு ஈனச் செயலாகும்.

இன்றைய உலகமயமாக்கல் என்ற ஏகாதிபத்தியச் சுரண்டல் கொள்ளை மூலம் உலக மக்கள் அனைவரையும் பல்தேசிய நிறுவனங்களின் நுகர்வோராகவும் கூலி உழைப்பாளர்களாகவும் மாற்றும் கைங்கரியப் பொருளாதாரம் அபிவிருத்தி என்ற பேரில் மேற்கொள்ளப்படுகிறது. சகல தேசிய இனங்களையும் உலகப் பெரும் சந்தையின் நுகர்வோராக மாற்றுவதானால் அவற்றின் தனித்துவங்கள் சிதைக்கப்படவேண்டும். அவர்களின் உணவு உடை இருப்பிடம் பாரம்பரிய பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் அனைத்திலும் மாற்றம் கொண்டு வரப்படும்.

எனவே தேசிய இனங்களின் மீதான ஒடுக்குமுறை ஏகாதிபத்தியத்தின் பிரதான போக்காகிறது. எனவேதான் உள்ளூர் ஏகாதிபத்திய முகவர்கள் ஆட்சியதிகாரத்தில் ஏறி, இன ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இந்த இன ஒடுக்குமுறை மூலம் சிறுபான்மை இனங்களின் தேசிய தனித்துவங்களைச் சிதைக்க இன முரண்பாடுகளை உருவாக்கிப் பெரும்பான்மை மக்களை தம் பின்னால் அணி திரட்டுகின்றனர்.

எனவே தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம் என்பது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் ஒரு பகுதியே. இப்படியான நிலையில் தேசிய இன அடையாளங் களையே அழிக்கும் வகையிலான இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் நடத்தும் புனிதமான போராட்டத்தை இனவாதம் எனக் கொச்சைப்படுத்தித்தனது அசிங்கமான ஏகாதிபத்திய சார்பு முகத்தை வெளிக் காட்டுகிறார். மகிந்த ராஜபக்சவோ, மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்கிரமசிங்கவோ தனிமனிதர்கள் அல்லர். அவர்கள் சிங்கள ஏகாதிபத்திய சார்பு நிலப் பிரபுத்துவ அதிகார பீடத்தின் பிரதிநிதிகள். எவர் சிம்மாசனத்திலிருந்தாலும் ஆட்சி செய்வது இந்தப் பேரினவாத அதிகாரபீடம்தான். அதே போன்று பிரபாகரன் கூட ஒரு தனிமனிதனல்ல. தமிழ் மக்களின் உரிமை வேட்கை யின் ஒரு கூர்மையும் இவர்களைத் தனிமனிதர்களாகவோ தாம் விரும்பும் வண்ணம் ஆட்சி நடத்தும் சர்வாதிகாரிகளாகவோ பார்ப் பது இந்த நூலாசிரியரின் அரசியல் அறிவின் வறுமையையே காட்டுகிறது.

ஒருவர் ஒடுக்கு முறை அரசியலுக்குத் தலைமை கொடுத்தார். மற்றவர் விடுதலை அரசியலுக்குத் தலைமை கொடுத்தார்.

விடுதலைப் புலிகளின் மீது நஞ்சு பூசிய கணை களைத் தொடுக்கும் இந்த நூலாசிரியர் பாலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தையும் விட்டு வைக்கவில்லை. "ஹமாஸ் விடுதலைப் புலிகள் போன்ற அடிப்படைவாத அமைப்புகள் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக இருக்க முடியாது. ஆனால், மட்டற்ற அரச பயங்கரவாதம் அவர்களின் பயங்கரவாதத்துக்கு விளைநிலமாக உள்ளது. அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து அடிப்படை அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்படுமானால் ஹமாஸ் புலிகளின் அடிப்படைவாத அரசியலின் முடிவின் ஆரம்பமாக இருக்கும்".

ஏகாதிபத்திய சக்திகளும் ஒடுக்கு முறையாளர்களும் உலக விடுதலைப் போராட்ட அமைப்புகள் மீது பாவிக்கும் அடிப்படை வாதம் பயங்கரவாதம் என்ற அதே வார்த்தைகளை இங்கு அவர் ஹமாஸ் அமைப்பின் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் பாவித்து தன்னை இனங்காட்டிக் கொள்கிறார்.

1948 தொடக்கம் தமது சொந்த மண்ணிலிருந்து காலத்துக்குக் காலம் விரட்டப்பட்டு, இன்னமும் அகதி வாழ்வில் அல்லல்கள் சுமக்கும் பாலஸ்தீனிய மக்கள் தங்கள் சொந்த மண்ணை மீட்க ஹமாஸ் அமைப்பின் தலைமையில் போராடுவது பயங்கரவாதமென்றால் மொழியுரிமை மறுக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மூலம் நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டு, கல்வியுரிமை, மறுக்கப்பட்டு, காலத்துக்குக் காலம் இன அழிப்புக் கலவரங்களால் பேரழிவுக்கு உட்படுத்தப்பட்டு தாங்க முடியாத ஒடுக்குமுறைகள் காரணமாக தனிநாடு கோரிப் போராடுவது

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருதாபுரி சரித்திர நாவல் வெளியீடு

ஏ.ஆர்.அப்துல் காதரின் மருதாபுரி சரித்திர நாவல் வெளியீட்டு விழா கடந்த 19 ஆம் திகதி மருதமுனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் கலந்துகொண்டு, நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் ஏ.ஆர்.அப்துல் காதரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். பிரதம அதிதியினால் ஏனைய அதிதிகளுக்கு நூலின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள் மீனோடைக்கட்டு நிருபர்)



# நட்சத்திரப் பலன்கள்

**திருவாதிரை நட்சத்திரப் பலன்கள்**

மும்மூர்த்திகளில் அழித்தல் தொழில் செய்யும் சிவன் என்றழைக் கப்படும் உருத்திரன் உதித்த நட்சத்திரம் திருவாதிரை ஆகும். இதன் அதிபதி ராகுபகவான். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கவர்ச்சியான கண்களும், அழகிய வாயும், சதைப்பற்றுள்ள கன்னங்களும் அமை யப் பெற்றவர்கள். நல்ல பலசாலிகளான இவர்கள் மற்றவர் களுக்கு உதவுவதில் வல்லவர்கள். கோபகுணம் உடைய இவர்கள் மற்றவர்களை குறை கூறிப் பேசியும், எடுத்தெறிந்து பேசும் தன்மையும் உடையவர்கள்.

**திருவாதிரை நட்சத்திரம் : 1ஆம் பாதம்**

சத்தியம் உண்மை இவற்றை வாழ்வில் கடைப்பிடிக்கும் இவர்கள், எப்பொழுதும் சுறுசுறுப்புடனும், ஆற்றலுடன் விளங்குவார்கள். கெட் டிக்காரர்கள். தாயாரிடம் பற்றுள்ள இவர்கள் மற்றவர்களை மதிக் காதவர்கள். தனக்கு நிகர் எவருமில்லை என்ற எண்ணம் உடைய வர்கள். அற்ப உறக்கம் உள்ளவர்கள்.

**திருவாதிரை நட்சத்திரம் : 2ஆம் பாதம்**

தான் சொல்லவந்த விடயத்தை விரிவாக விளக்கி கூறும் இவர்கள், மனைவியை துன்புறுத்துவார்கள். மற்றவர்கள் பொருளின் மேல் பற்று இல்லாத இவர்கள் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு வேண்டிய அளவு உதவி புரிவார்கள். எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டேயிருப்பார்கள்.

**திருவாதிரை நட்சத்திரம் : 3ஆம் பாதம்**

துணிச்சல் மிக்க இவர்கள் பணம் சேர்ப்பதில் சமர்த்தானவர்கள். கஞ்சத்தனம் உடையவர்கள். கோபம் வரும் பொழுது தன்னை அறி யாமல் கொடூர செயல்களைச் செய்பவர்கள். வாத சம்பந்தமான நோயால் அவதிப்படுவர். நல்ல ஞாபகசக்தி உள்ளவர்கள். வீண் வம்புக்கு போகாதவர்கள்.

**திருவாதிரை நட்சத்திரம் : 4ஆம் பாதம்**

மந்திரம் தந்திரம் இவற்றை நன்கு அறிந்தவர்கள். கெட்ட வழிகளில் சிந்தனைவயப்படுவார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவார்கள். பிறரால் வஞ்சிக்கப் படுவர். இவர் களை மற்றவர் கள் தங்கள் காரி யத்துக்கு எளி தில் பயன்படுத்தி கொள்வார்கள். பிற்காலத்தில் சந் நியாசிவாழ்க்கை வாழ்வார்கள்.

**நாளை**
கார்த்திகை-09
வியாழக்கிழமை -24.11.2016
திதி: தசமி மு.ப.08.58
நட்சத்திரம்: உத்தரம் பி.ப.01.00
ராகுகாலம்:01.41-03.11 வரை
சுபநேரம்:07.41-09.11 வரை













# ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

ஒட்டுசுட்டான் பிரதேச கலாசார பண்பாட்டுப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நீர்ப்பாசனத் திணைக்கள சந்தியிலிருந்து கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் ஊர்திகள், அறநெறி மாணவர்களின் பஜனை, காவடி, கோலாட்டம், கும்மியடித்தல், பொம்மலாட்டம் போன்றனவற்றுடன் பண் டாரவன்னியன் குதிரையில் பவனி வந்ததுடன், பண்டாரவன்னியனின் காதலி யாகிய குருவிச்சி நாச்சியார் அவருக்கு நிகராக பல்லக்கில் பவனி வந்த காட்சியும் தத்ரூபமான முறையில் அமையப் பெற்றிருந்தமை சிறப்பம்சமாக இருந்தன.
மேற்படி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டதுடன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வட மாகாண சபை பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர். நிகழ்வில் 'முத்தெழில்' எனும் நூல் வெளியிட்டு வைத்ததுடன் மூத்த கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி பண்டாரவன்னியன் என்னும் விருதும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரச செயலர் உரை யாற்றுகையில், எமது பாரம்பரிய கலை, கலாசாரம், பண்பாடுகள் என்பன அழிந்து மறைந்து வருகின்றமை வேதனைக்குரியது. இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் எமது கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை அடுத்த சந்ததிக்கு எடுத் துச் செல்லக்கூடியதாக உள்ளது- என்றார். (க-7.102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பிரதேச செயலக கலை இலக்கியப் பெருவிழா









மொழி, கலை, கலாசாரம், பண்பாட்டின் வளர்ச்சி ஆகியன ஓர் இனத்தின் தொன்மைமிகு வரலாற்றுக்கும், இருப்புக்கும், உறுதித்தன்மைக்கும் அளவுகோலாக உள்ளன. எமது முன்னோர்கள் சுமந்து வந்து எமக்களித்த இந்த அரிய சொத்துக்கள் அருகி மருவி அழிந்து போகாது முன்னெடுத்துச் செல்லவேண்டியது இந்தக் கால சந்ததியின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்த அரிய பணிகளை கலைசார்ந்த மன்றங்களும் நாடகக்கலைக் குழுக்களும் சனசமூக நிலையங்களும் முன்னெடுத்து வருவதற்கு மேலாக பிரதேச செயலகங்களும் கலாசாரப் பேரவைகளை அமைத்து அந்தந்தப் பிரதேச கலை வடிவங்களையும் கலாசார விழுமியங்களையும் அரங்காற்று கைப்படுத்தி கலைஞர்களைக கௌரவித்து ஊக்கமளித்து வருகின்றன.

இந்த வகையில் யாழ். பிரதேச செயலக கலாசாரப்பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து கடந்த 17ஆம் திகதி திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடத்திய கலை இலக்கியப் பெருவிழா வெகு சிறப்பாக அமைந்தது.

பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமான பொ.தயானந்தன் தலைமை தாங்க முதன்மை விருந்தினராகிய யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சு. முரளிதரன் மற்றும் யாழ் ரத்னா விருது பெறும் கலைஞர்கள், சமயப்பிரதிநிதிகள் ஆகியோர் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் வழங்கிய கிராமியக்கலை வாத்திய முழக்கத்துடன் ஆலவட்டம் குடைகள் சகிதம் அழைத்து வரப்பட்டமை பண்டைய தமிழ் மன்னர் காலத்தை நினைவூட்டியது. மும்மத ஆசியுரைகளைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் ராக தாள பாவங்களைத் துல்லியமாக வெளிக்கொணர்ந்தது.

சிற்பக் கலையில் தேசியமட்டத்தில் ஜொலித்த அமரர் கலாபூசணம் செல்லையா சிவப்பிரகாசத்துக்கு அன்றைய அரங்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது. அன்னாரது துணைவியார் தள்ளாத வயதிலும் அரங்கப்பகுதிக்கு வந்து கௌரவத்தைப் பெற்றது சிற்பி அவர்க ளின் சிற்பக்கலைக்கு மகுடம் வைத்த பெருமதிப்பாக அமைந்தது. கொழும்பில் உள்ள இராமநாதன் சிலை உட்பட யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பெரியார்களது சிலைகளுடன் 22 க்கு மேற்பட்ட சிலைகளை வடித்து 15க்கு மேற்பட்ட தங்கப்பதக்கங்களையும் விருதுகளை யும் பெற்றதோடு மறைந்த பிரதமர் ஸ்ரீமாவோவினால் கௌரவிக்கப்பட்டவர் என்ற தகவல்களை அறிந்தபோது கலைத்தாயின் தவப்புதல்வனை இழந்துவிட்டோமென அனைவரும் எண்ணிக் கொண்டனர்.



சமகாலத்தில் தமிழ்ப்பண்பாட்டைப் பேணுதல் என்னும் தலைப்பில் ம.நிலாந்தன் ஆற்றிய சிறப்புரையில் இன்றைய தலைமுறையை இலத்திரனியல் சாதனங்கள் ஆட்டிப்படைக்கும் ஆதிக்கத்தையும், அதனால் நாம் இழந்து கொண்டிருக்கும் பண்பாடு, குடும்ப அன்பு வாழ்வுமுறைகள், என்பவற்றையும் அக்குவேறு ஆணிவேறாக எடுத்துரைத்தார். பூகோளச் சவால், தொழில்துறைச் சவால் என்பவை எமக்கு நாம் கொடுக்கும் சவால் எமது பண்பாட்டை பிறழ்வடைய வைக்கின்றன. நாம் எதை இழந்து எதைப்பெறுவது என்று சிந்தித்துச் செயற்படவேண்டும். பெற்றோரும் பிள்ளைகளும் போதைப் பொருள் பாவிக்கின்றார்கள் என்றால் எம்மைவிட பிள்ளைகள் மட்டில் செல்வாக்கு மிக்க வர் வெளியில் இருக்கிறார் என்றுதான் அர்த்தம். கலப் புருவாக்கப் பண்பாடுகளை விடுத்து எமது மரபுவழிப் பண்பாட்டை மீளுருவாக்குவோம் என்று விழிப்புணர்வைத் தந்தது. பண்டைத் தமிழ் மரபின் மேன்மை தனை பறை சாற்றும் பாரம்பரிய தோலிசைக் கருவியான பறைமுரசை இசைத்தபடி பல்வேறு ராக. கட்டுக்களு டன் பலவகையான ஆட்டங்களை ஆற்றுகைப்படுத்திய தொன்மம் கலைக் குழுவினரின் பாரம்பரிய கலைச் சங்க மம் பிரமிப்பூட்டும் வகையில்அனைவரையும்கட்டிப்போட்டது.



எமது மொழி, பண்பாடு, கலை என்பவை முன்னோர்கள் தந்தவை. அந்த வடிவங்களைப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பாகும். அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவேண்டும். பன்மைத்துவ கலாசார முறைகளைக் கொண்ட எமது நாட்டில் ஒருவர் மற்றவருடைய பண்பாடு கலாசாரத்தை அறியவும் மதிக்கவும் வேண்டும். அப்போதுதான் ஒற்றுமையை ஏற்படுத்தமுடியும். தமிழரின் பண்பாடு சேலை.

அந்தச் சேலையை வயதுக் கேற்ற வகையில் பல வடிவங்களில் உடுத்துகிறார்கள். அதுபோன்று வடிவங்கள் மாறி னாலும் கலை, பண்பாட்டின் அடிப்படை மாறக் கூடாது. இது முதன்மை விருந்தினரின் அறிவுரை.

கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு, சாகித்ய ரத்னாவிருது பெற்ற பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளைக் கௌரவித்தல், இளம் கலைஞர் கௌரவிப்பு, யாழ். பிரதேச கலைஞர்கள் 10 பேருக்கு யாழ் ரத்னா விருது வழங்கல் என்பன இடம்பெற்றன.

பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான நாட்டுக்கூத்துக்கலைஞர்கள் செறிந்து வாழும் பகுதி யாழ். பிரதேச செயலர் பிரிவு என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சங்கிலியன் நாட்டுக்கூத்து இறுதியாக அறிக்கை செய்யப்பட்டது.

நவீன இலத்திரனியல் நாடகத்தொடர்களில் மூழ்கி எமது பண்பாட்டை, கலை கலாசார விழுமியங்களை தொலைத்து கலப்புருவாக்க பண்பாடுகளைத் தோற்றுவிக்காது எமது தொன்மைமிகு அடையாளங்களைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்பதை இவ்வாறான கலை இலக்கிய விழாக்கள் இடித்துரைக்கின்றன.

*எஸ்.யேசுதாஸ்*
*கொழும்புத்துறை*

# த.ஜெயபாலனின் வட்டுக்கோட்டையிலிருந்து.....

(17 ஆம் பக்கம் பார்க்க)

பயங்கரவாதமென்றால் பாலஸ்தீன மக்களும் தம்மைத் தாமே ஆள நினைப்பது அடிப்படை வாதமென்றால் அவர்கள் கூறும் விடுதலைப் போராட்டம் எது?

அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்படுமானால் ஹமாஸ், புலிகளின் அர சியல் முடிந்துவிடும் எனக்கூறும் இவரை நோக்கி நாம் கேட்கும் கேள்வி அரசபயங்கரவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பது எப்படி? அதைச் செய்வது யார்? யாராவது தேவதூதர்கள் வானத்திலி ருந்து இறங்கி வந்து அரச பயங்கரவாதத் துக்கு முற்றுப்புள்ளி வைப்பார்களா? அமெரிக்காவோ, ரஷ்யாவோ, சீனாவோ, இந்தியாவோ படைகள் அனுப்பி அதைச் செய்வார்களா?

அரச பயங்கரவாதத்தை அழிக்க ஒரே வழி அதற்கெதிரான ஆயுதப்போராட்டம் மட்டுமே. அத்தகைய போராட்டங்களை மேற்கொள்ளும் ஹமாஸ், விடுதலைப்புலிகள் போன்றவர்கள் பயங்கரவாதிகள் என்றால் அரச பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது யார்?

இப்படியாக விடைகாண முடியாத விடுதலைப் புலிகளையும் இந்த விடுதலைப் போராட்டத்தையும் கீழ்மைப்படுத்தும் எழுந்தமான கருத்துக்கள் இந்த நூலெங்கும் நிறைந்து காணப்படுகின்றன. எல்லோருமே மக்கள் விரோதிகள் எனவும் எல்லா வழிகளுமே தவறானவையெனவும் கூறும் இந்த நூல் மாற்று வழி எதையும் முன்வைக்கவில்லை.

உலகில் எந்த ஓர் அமைப்பிலோ போராட்டத்திலோ தனிமனி தனிலோ கூடச் சரிக்கும் பிழைக்குமான போராட்டம் நிரந்தரமானது. சரியான அச்சம் மேலோங்கும்போது வெற்றியை நோக்கிய முன்நகர்வும், பிழையான அச்சம் மேலோங்கும்போது தோல்வியை நோக்கிய பின்டைவும் ஏற்படுகின்றது.

இதற்கு விடுதலைப்புலிகள் மட்டும் விதிவிலக்காக முடியாது. எனவே விடுதலைப்புலிகள் தவறே செய்யாத அமைப்பென எவரும் கூறிவிட முடியாது.

ஆனால் அந்தத் தவறுகள் எவை? அவை ஏன் ஏற்பட்டன? அவை ஏற்படப் பிரதான காரணம் எது, துணைக் காரணங்கள் எவை?

அவற்றில் அந்நிய உள்ளூர் உளவு நிறுவனங்களின் பங்கு என்ன? கொழும்புவரை விஸ்தரிக்கப்பட்ட புலிகளின் புலனாய்வு வலைப்பின்னல் பலம் இருந்த போதும் ஏன் இயக்கத்துக்குள் இடம்பெற்ற ஊடுருவல்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்த நூல் இப்படியான கேள்விகளை எழுப்பி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தால் அது ஒரு பயனுள்ள முயற்சியாக அமைந்திருக்கும். ஆனால் இது புலிகளின் மீது சேறு பூச மட்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டு பேரினவாத சக்திகளுக்குச் சேவை செய்துள்ளது. இப்படியானவர்களுக்கும் அவர்களின் படைப்புகளுக்கும் வரலாறு ஒரு குப்பைத் தொட்டியை ஏற்கனவே தயாராக வைத்துள்ளது என்பதே அடிப்படை உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கே.தருமன்

# பா.இரமணாகரனின் இரேகையியல் சித்திரம் நூல் வெளியீடு

**சித்திரக் கலை வரைதல் பயிற்சி தரம் 6 தொடக்கம் 11 வரையான பாடத்திட்டத்துக்கு அமைவான பயிற்சிகள் இந்த நூலில் காணப்படுகின்றன. மாணவர்கள் சுயமாக சித்திரபாடத்தைக் கற்பதற்கான வழிகாட்டல்கள், இந்த நூலில் அடங்கி இருப்பது அடுத்த சிறப்பாகும்.**

சித்திரக் கலை மனிதத்துவத்தை வெளிப்படுத்தும் மாண்பு கலை. மனித உணர்வுகளுக்கு பிரவாகங்களை வெளியிடும் ஓர் அரிய கலை. கலைகளிலேயே இலகுவாக எல்லோர் மனங்களிலும் இடம் பிடிக்கக்கூடிய உயர்வான கலை கிறுக்கல் கோடுகள், வட்டங்கள் என ஆரம்பித்து பலபரிமாணங்களிலும் முழுமையான உணர்வுகளை வெளிக்காட்டுவது இக் கலையாகும். குழந்தை முதல் பெரியோர்வரை தமக்குத் தெரிந்தோ தெரியாமலோ சித்திரக் கலையினூடாக தமது வாழ்நாளில் பல எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்கின்றார்கள் என்ற வகையில் பாடசாலை மாணவர்களுக்கு இக் கலை பாடத்திட்டத்தினூடாக புகுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழி மூலமாக சித்திரக்கலை தொடர்பான நூல்கள் இல்லாத நிலையில் இரேகையியல் சித்திரம் நூல் ஆசிரியர் பா.இராமாணாகரனால் வெளிவருவது பாராட்டத்தக்கதாகும்.

மேற்படி நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/ மாதகல் சென்.யோசப் ம.வி. அதிபர் கு.விக்னரூபன் தலைமையில் அந்த வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தனராகக் கலந்து கொண்ட கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி பா.தனபாலன் உரையாற்றுகையில் அழகியலுணர்வே மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாகவும்-பண்புள்ளவர்களாகவும்-மனிதத்துவம் பொதிந்துள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்கும் சக்தி கொண்டது என்ற வகையில் சித்திரபாடம் மாணவர்களின் கல்வித்துறை ஆளுமைகளை வெளிக்கொண்டு வர அர்த்தமுள்ளதிறன்களை வழங்குகின்றது. மனித உள்ளத்தில் எழும் எண்ணக்கருக்களில் தோன்றுகின்ற வடிவங்களை உருவமைப்பதாகவும் சித்திரக் கலை உள்ளது.

எமது பிரதேச மாணவர்களின் அண்மைக்கால சித்திர பாட அடைவுகள் வீழ்ச்சியுற்றதாகவே காணப்படுகின்றது. இக்கலையின் நுட்பங்கள் அழகுத் தோற்றங்களை வரையும் திறனும் எமது பிரதேச மாணவர்களுக்குப் போதாமல் உள்ளது. ஆனால் ஆக்கத்திறன் மிக்கவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இந்தக் கள நிலையைப் புரிந்து கொண்டு சித்திரபாட ஆசிரியரும் எனது மாணவருமாகிய பா.இரமணாகரன் மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான ரேகையியல் சித்திரம் என்ற நூலை இன்று வெளியிடுகின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும். அவருடைய ஆளுமையின் வெளிப்பாடாக மாணவர்கள் சுயமாகக்கற்பதற்கு உதவும் வகையில் இந்த நூல் படைக்கப்பட்டமை மற்றொரு சிறப்பாகும்.

மனிதத்துவ ஆக்கத்திறன் சக்திக்கு உயிர் கொடுப்பது சித்திரக்கலையாகும். உலகளாவிய ரீதியில் கல்வியியல் துறையில் சித்திரபாடம் முதன்மை பெறுகின்றது. பாடசாலை மாண வர்கள் தமது ஆளுமைளை விருத்தியாக்க சித்திரக்கலையில் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றனர். இதற்கு சித்திரபாட ஆசிரியரின் ஆளுமை மாணவர்களின் ஆளுமையில் விருத்தியை ஏற்படுத்தும். இவ்வாறான ஆளுமை கொண்ட ஆசிரியரால் இந்த நூல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் எவர் நிறைவுற்றிக் கொள்கின்றார்களோ அவர்களுடன் ஏற்படும் உறவைத் தமதாக்கிக் கொள்கின்றார்கள். இவ்வாறு மாணவர்களின் உணர்வுகளுடன் சங்கமமாகும் ஆற்றலுள்ள இந்த ஆசிரியர் பா.இரமணாகரன் இன்னும் இத்துறைசார் நூல்களை வெளியிட வாழ்த்துகின்றேன்-என்றார்.

சித்திரக் கலை வரைதல் பயிற்சி தரம் 6 தொடக்கம் 11 வரையான பாடத்திட்டத்துக்கு அமைவான பயிற்சிகள் இந்த நூலில் காணப்படுகின்றன. மாணவர்கள் சுயமாக சித்திரபாடத்தைக் கற்பதற்கான வழிகாட்டல்கள், இந்த நூலில் அடங்கி இருப்பது அடுத்த சிறப்பாகும். மாணவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தைத் தூண்டும் பாடப்பயிற்சிகள் எளிமையாக மாணவர் விரும்பும் பயிற்சிகளும் நூலில் அடங்கியுள்ளன. சிறந்த சித்திர பாட ஆக்கத்திறன் உத்திகளுடன் இந்த நூல் வெளிவருகின்றது.

சிறந்த ஓவியங்களை வரைவது ஓரளவு சுலபம். ஆனால் அவற்றை திறம்பட அமைப்பதற்கான வழிமுறைகளை நுட்பங்களை விளங்கப்படுத்துவது கற்பிப்பது கடினம். ஆனால் இந்த நூலாசிரியர் மாணவர்கள் எளிமையாகக் கற்கக்கூடிய விதத்தில் சுய கற்றலுக்கான வழிமுறைகளுடன் சிறந்த முன்னுதாரண நூலாக இரேகையியல் சித்திரம்நூல் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது.



## ‘கதாகாலம்’ நாவலின் விமர்சன அரங்கு

தேவகாந்தனின் ‘கதாகாலம்’ நாவல் தொடர்பான விமர்சன அரங்கு கடந்த சனிக்கிழமை கல்வியங்காடு, கருவி வளநிலையத்தில் இடம்பெற்றது. தூண்டி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்ச்சியில் சி. விமலன், யோ. கௌதமி, தி. செல்வமனோகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பதிலுரையை எழுத்தாளர் தேவகாந்தன் நிகழ்த்தினார். (108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியை பிரமிக்கவைத்த 'முழு நிலாநாள்' கலைவிழா

தென்னவன்



கலைகள் அனைத்தும் ரசனைக்குள்ளானவை. அந்த ரசனையையும் அமைக்கும் விதத்திலேயே அவை சிறப்பான காணப்படுகின்றன என்பதற்கு முன்னுதாரணமாக தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'முழு நிலாநாள்' கலைவிழா அமைந்திருந்தன.

கார்த்திகை மாதத்தில் 48 வருடங்களின் பின்னர் வந்த பிரகாசமான நிலா (புல் மூன்) வெளிவருவதற்கு முன்னர் தென்மராட்சி பிரதேச மக்களின் வெளிப்பாடாக வலய மாணவர்களின் வண்ணமிகு நிகழ்வுகளைக் கொண்டதாக தென்மராட்சி கல்வி வலயத்தின் முழு நிலா நாள் கலைவிழா இடம்பெற்றுள்ளன.





வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் அந்தந்த வலயங்களின் கலைகளை பிரதிபலிக்கும் நிகழ்வுகளை முழு நிலா நாள் நிகழ்வுகளில் மாதாந்தம் நடாத்திவருகின்றது. இந்த வரிசையில் நவம்பர் மாத முழு நிலா நாள் கலைவிழா நிகழ்வுகள் தென்மராட்சி கல்வி வலயத்தில் அரங்கேறின.

நிகழ்வுகள் காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரை நடத்தவும் இந்த நேர இடைவெளிக்குள் நடத்தக் கூடிய நிகழ்வுகளையும் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. காலத்தைக்கருத்தில்கொண்டு நிகழ்வுகள் அமைக்கப்பட்டிருந்தன. காலை 8.30 மணிக்கு முன்னர் ஆரம்ப நிகழ்வுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஊர்திகளும் நடன நிகழ்வுகளும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை வந்தடைந்திருந்தன.அவ்வாறு விருந்தினர்களும் குறித்த நேரத்துக்கு முன்னர் கல்லூரிக்கு வந்திருந்தனர்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ச.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா சிறப்பு விருந்தினராக அமைச்சின் செயலாளர் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், அவர் வருகை தராததால் அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி அபிராமி பாலமுரளி கௌரவ விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ற.நவரத்தினம் முல்லைத்தீவு கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோர் அனைவரையும் ஊக்குவிக்கும் பொருட்டு குறித்த நேரத்துக்கு முன்னர் வந்து விழா தொடக்கி வைத்தனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் டச்சு வீதி வாசலிருந்து ஊர்திகள் முன்னே வர, அதனைத் தொடர்ந்து நடனக் குழுக்கள் வந்து கொண்டிருந்தன.

இந்த வருடம் ஊர்திகளின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும், அவற்றின் பெறுமானம் அதிகமாகவே காணப்பட்டன. ஊர்தியில் காணப்பட்ட காட்சிகள் எமது காலத்தில் காணப்படாத போதிலும் அவை இப்படித்தான் இருந்திருக்க வேண்டுமென கருதக்கூடிய வகையில் உயிரோட்டத்துடன் தத்ரூபமாக மாணவர்கள் காட்சிதந்தனர்.

எமது காலத்தில் வாழ்ந்து அமரத்துவமடைந்திருந்தாலும், நம்மில் பலர் இந்தச் சித்தர்களைக் கண்டிருப்போமா என்றால் பலரிடம் இல்லையென்ற பதிலே கிடைத்தது. கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர் கள் ஈழத்துச் சித்தர்களான யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் போன்றோரைச் சித்திரிக்கும் வகையில் அவர்களைப் போன்ற உடல் அமைப்புடன் காட்சியளித் தமை மகிழ்வாக இருந் தன. இந்தக் காலத்தில் எம்முடன் வாழ்ந்த சித்தர்களை எமக்கு நினை வூட்டிய மாணவர்களுக்கு பாராட்டுக்கள்.

அடுத்து மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களின் 'அசோக வனத்தில் சீதா பிராட்டியுடன் அனுமான்' காட்சியும், கைதடி குருசாமி வித்தியாலய மாணவர்களின் 'பெற்றோரே உலகம் ' என்னும் மாம்பழத்திற்காக முருகனும் பிள்ளையாரும் உலகை வலம் வந்த காட்சியும் மட்டுவில் கமலாசினி வித்தியாலய மாணவர்களின் 'கண்ணகி வழக்குரை' காட்சியும், வரணி மத்திய கல்லூரி மாணவர்களின் அரிச் சந்திர மயான கண்டத்தின் இறுதிப் பகுதி காட்சியும் ஊர்தியில் காணப்பட்டன.

உழவு இயந்திரங்களில் ஊர்திகள் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை சென்றபோதிலும், காட்சிகளில் காணப்பட்டவர்கள் சிலைகளாக காணப்பட்டவை, மாணவர்களின் கலை ஆர்வத்தைப் பிரதிபலிப்பனவாக இருந்தன.

ஊர்திகளின் பின்னர், தமிழர் பாரம்பரியங்களைப் பிரதிபலிக்கும் நடனக் குழுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்த வண்ணமிருந்தன. மட்டுவில் தெற்கு அ.மி. த.க.வித்தியாலய மாணவர்களின் ஒயிலாட்டம், மந்துவில் றோ.க.த.க.பாடசாலை மாணவர்களின்' கோலாட்டம், கைதடி- நுணாவில் அ.த.க.பாடசாலை மாணவர்களின் குட நடனம், கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களின் தாள நடனம், அல்லாரை அ.த.க. பாடசாலை மாணவர்களின் கரகாட்டம் நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களின் உழவர் நடனம், மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை மாணவர்களின் பொம்மலாட்டம், கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவர்களின் மாலை நடனம் சாவ கச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் வண்ணத்துப்பூச்சிகள் நடனம் ஆகியவை தமது நடனங்களை வீதிகளில் காண்பித்தவாறு சென்றனர். இந்த நடன அணிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் கிராமப் புறப் பாடசாலைகள் என்பதால் அந்தந்த கிராமங்களில் உள்ள கலை ஞர்களின் ஒத்திசைவுடன் ஆசிரியர்களால் பயிற்று விக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.பயிற்சியின் திறமையினை நேரில் பார்த்தவர்களுக்கு புரிந்திருக்கும்.

முன்னைய காலத்து மன்னர் பவனி போன்று கோலவுடை தரித்தவர்கள் முன்னால் செல்ல உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் பல வாத்தியங்கள் ஒன்றி ணைந்த இன்னியம் குழு பின் தொடர மூவேந்தர்கள் புடைசூழ விருந்தினர்கள் பவனியாக அழைத்துவிழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் ஆரம்பமான பவனி பிரதான வீதி புகையிரத நிலைய வீதி [illegible] ஒழுங்கை ஆகியவற்றினூடாக சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அண்மையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த்தாய் உருவச் சிலைக்கு தலைமை விருந்தினர் மலர்மாலை அணிவிக்க மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவிகள் ஐவர் தமிழ்த்தாய் வாழ்த்தை இசைத்த விழாவை ஆரம்பித்த வைத்தனர்.

வரவேற்புரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் நிகழ்த்த, வரவேற்பு நடனத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கலலூரி ஆகியவற்றின் மாணவிகள் இணைந்து நிகழ்த்தினர். பயிற்றுவிப்பாளர்களும், பயிலுநர்களும் ஒரு நிகழ்வை அதாவது ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து 'மூவிசை மாலை' என்னும் நிகழ்வும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் கிராமிய சங்கமம் என்னும் நிகழ்வும் நடத்தப்பட்டன இரு நிகழ்வுகளும் அபாரம்


அடுத்து தமிழ் மரபுக் கலாலய மாணவர்கள் வலய ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து வீணை வயலின் ஓகன், மிருதங்கம் ஆகிய் இசைக் கருவிகளை ஒரே நேரத்தில் பவ்வியமாக ஒலிக்கச் செய்த 'பல்லியம்' என்னும் இசை நிகழ்ச்சி அனைவரையும் மெய்மறக்கச் செய்தன. தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் திருமதி புனிதகுமாரி ஈழ நேசனின் நெறியாள்கையில், இவர்களுக்கு பக்கபலமாக வயலின் சுருதிஞானதிலகம் அ.ஜெயராமன் மிருதங்கம் சதாவேல்மாறன் ஆகியோர் செயற்பட்டனர்

முழு நிலா நாள் கலை விழாவில் வருடந்தோறும் கல்வி வலயங்களால் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அறிஞர்கள், கௌரவிப்பு செய்வதுண்டு.அதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவரும் யாழ்.பல்கலைக் கழகத்தின் பௌதிகத்துறை மற்றும் தொழில்நுட்பத்துறை ஆகியவற்றின் தலைவராக இருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் க.கந்தசாமி, அறிஞர் கௌரவிப்பில் இணைக்கப்பட்டார். இவருக்கான கௌரவிப்பை விருந்தினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அறிஞர்தம்பதியினரைக் கௌரவித்தமை தென்மராட்சி பிரதேசமே பெருமை பெற்றதெனலாம்.

அடுத்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் 'ஜப்பானிய நடனம் ' இடம்பெற்றது. நம்நாட்டுக் கலைகள் பெருமளவில் இருந்தபோதிலும், வேற்று நாட்டு நடனத்தை முறைப்படி பயின்றவர்கள் போன்று மாணவிகள் காண்பித்தமை எந்த நாட்டில் வாழ்ந்தாலும் கலைக்கு தனி மதிப்புண்டு என்பதை வெளிப்படுத்தி நின்றன. அடுத்து விசேட கல்வி மாணவர்களின் நடனம் இடம்பெற்றன. இந்த நடனம் ஏனைய நடனங்களுடன் வேறுபட்டதாகக் காணப்பட்டது. அடுத்து மீசாலை சிவசக்தி சங்கீத நர்த்தனாலய நிறுவுனர் அமரர் கலாபூசணம் அ.கி.ஏரம்பமூர்த்தி அவர்கள் இயற்றிய இசை நடனப் பாடல்கள் அடங்கிய ' கீர்த்தனாமிர்தம்' என்னும் இறுவட்டு வெளியீடு இடம்பெற்றது. இந்த இறுவட்டை வலய சங்கீதபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வெளியிட, தலைமை விருந்தினர் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தார். இறுவட்டை உருவாக்க உழைத்த அனைவருக்கும் விருந்தினர்களால் நினைவுப் பரிசில்கள் வழங்கப் பட்டன.

விருந்தினர்களின் உரையையடுத்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் 'ஐவகை நிலம்' என்னும் நாட்டிய நாடகமும், வலய ஆசிரியர்கள் மாணவர்களை இணைந்து வழங்கிய 'திருக்குற்றாலக் குறவஞ்சி' நாடகமும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தேசிய ரீதியில் வெற்றியீட்டிய நாடகங்களின் மேடையேற்றம் வவுனியாவில் முதல் முறையாக

தேசிய ரீதியில் நாடக போட்டிகளில் முதல் நிலைகளைப் பெற்ற நாடகங்களான பொய் முகம், ரூ மேன் ரூ வோமேன், டெத் ஆப்ட்டர் பீஸ் ஆகிய நாடகங்களின் காட்சிகள் இளைஞர் கழக பிரதேச சம்மேளனத்தின் அனுசரணையில், தமிழ் தேசிய இளைஞர் கழகத்தினரின் ஒழுங்கமைப்பில் வவுனியா காமினி மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பிர மாண்டமான முறையில் கடந்த 20ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை இரண்டு காட்சிகளாக மேடையேற்றப்பட்டன.

முதல் காட்சி முற்பகல் 10.30 மணிக்கு தமிழ்த் தேசிய இளைஞர் கழகத் தலைவர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதன்மை அதிதியாக தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவரும், வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதாவுமாகிய க.சந்திரகுலசிங்கம் (மோகன்) கலந்து சிறப்பித்ததார்.


சிறப்பு அதிதிகளாக தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஆலோசகர் முத்தையா கண்ணதாசன், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கௌரவ அதிதிகளாக ஓமந்தை மத்திய கல்லூரி ஆசிரியர் சுத்தானந்தன், செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசிரியர் நா.பார்த்தீபன், நெடுங்கேணி பிரதேச சபையின் பிரதம எழுது வினைஞர் அ.பிரசாந்தன், ஓமந்தை விவசாய போதனாசிரியர் சோ.சுரேந்தர், ஐயனார் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் பேரின்பநாதன் அனோஜன், நிஸ்கோ திட்ட பணிப்பாளரும் வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரியுமான அஜித் சந்திரசேன, நிஸ்கோ திட்ட இயக்குநர் ரி.அமுதராஜ், இளைஞர் கழக அதிகாரிகள், சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இரண்டாம் காட்சி மாலை 4.30 மணிக்கு தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த மாலை நிகழ்வின் பிரதம அதிதியாக அரச ஊழியர் தாதியர் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் சோ.சுதாகர் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக யாழ். பல்கலைக்கழகத்தின் முது நிலை விரிவுரையாளர் கலாநிதி புஷ்பகாந்தன், சித்த மருத்துவர் இரா.மனோராஜ், அன்புக்கும் நடப் புக்குமான வலையமைப்பின் தலைவர் ரவீந்திர டீ சில்வா, முகாமையாளர் திருமதி கிரேஸ் டீ சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.




கௌரவ அதிதிகளாக நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய ஆசிரியர் சுதாத்தரன், ஓமந்தை கிராம சேவையாளர் திருமதி அனுசியா, தொழிலதிபர் சி.சயந்தன், ஐயனார் விளையாட்டுக்கழக செயலாளர் ந.நிஷாந்தன் ஆகியோருடன், நிஸ்கோ திட்ட பணிப்பாளரும் வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரியுமான அஜித் சந்திரசேன, நிஸ்கோ திட்ட இயக்குநர் ரி.அமுதராஜ், இளைஞர் கழக அதிகாரிகள், சம்மேளன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மாலை நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக நாடகத் துறையில் ஜனாதிபதி விருதைப் பெற்ற வவுனியா கனகராயன் குளத்தைச் சேர்ந்த எம்.சுவீகரனின் போலச் செய்தல் நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளில் முற்று முழுதான சேகரிப்பு நிதியும் விசேட தேவைக்குட்பட்ட மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள இளைஞர்களின் அபிவிருத்திக்காக பயன் படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும்.

இன்றைய நிகழ்வில் நிஸ்கோ திட்ட பணிப்பாளரும், வவுனியா பிரதேச இளைஞர் சேவை அதிகாரியுமான அஜித் சந்திரசேனவின் சிறப்புரையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களில் இவ் குறு நாடக விழாவை சிறப்பாக ஒழுங்கமைக்க கூடிய வகையில் சிறந்த இளைஞர் கழகமாக செயற்படும் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தை நாம் தெரிவு செய்தோம்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் காண்டீபன் மற்றும் செயலாளர் கேசவன் ஆகியோருடன் மிகத் திறமையான பல இளைஞர்களை தன்னகத்தே கொண்ட ஒரு நம்பிக்கைக்குரிய கழகமாக செயற்பட்டு வருவதனால், குறு நாடக விழாவை இவ் கழகத்தின் நிர்வாகத்திடம் நாம் ஒப்படைத்தோம்.

நம்பிக்கையில் வழங்கிய பெரிய பொறுப்பை மிக எளிதாகவும் பிரமாண்டமான முறையிலும் காலை அமர்வில் 200 ற்கு மேற்பட்டவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், மாலை அமர்வில் நூற்றுக்கு மேற்படடவர்கள் கலந்து சிறப்பித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனிவரும் காலங்களிலும் பல்வேறுபட்ட சமூக பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வவுனியா மாவட்டத்தின் சிறந்த முன்னுதாரணமான கழகமாக மாறவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்,

காலை அமர்வில் பிரதம உரை நிகழ்த்திய தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஸ்தாபகர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்) அவர்கள் தனதுரையின் போது;

கழகத்தின் பிரமாண்டமான இந்த நிகழ்வை ஒழுங்கமைத்த எமது இளைஞர்களை நான் மனதார வாழ்த்துவதுடன், இவர்களின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் சேவைகள் எமது சமூகத்துக்கு அளப்பெரியது. அந்தச் சேவைகள் தற்போது இன்னும் விரிவாக்கப்பட்டு இளைஞர்களின் கல்வி வாழ்வாதார முயற்சிகளில் முன்னோக்கி நகர்வதையிட்டு பெருமிதம் கொள்கிறேன்- என்றார்.








## கண்டாவளை பிரதேச கலாசார விழா

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தின் கலாசார விழா கடந்தவாரம் புளியம்பொக்கணை கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினராகவும், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் சி.சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ஈ.தயாரூபனும் கலந்து கொண்டதுடன், கலைத்துறை சார் உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளும் விருந்தினர்களின் உரையும். நூல் வெளியீடும், பரிசில்கள் மற்றும் விருதுகளும் வழங்கப்பட்டன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் தமிழைப் பரப்பும் இலங்கைத் தமிழ்ச் சங்கம்

தமிழினத்திற்கும் மனிதகுலத்திற்கும் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இலங்கைத் தமிழ்ச் சங்கம் தன்னுடைய வரலாற்றிலேயே முதல் முறையாக வாழ்நாள் தொண்டு விருது (Lifetime Service Award) என்ற மிக உயரிய விருதினை நீதியரசர் நவநீதம் பிள்ளைக்கு வழங்கி கௌரவித்தது.

அமெரிக்காவில் வாழும் தமிழர் இல்லங்களில் தமிழ் மொழி, இசை, பண்பாடு ஆகியவற்றை வளர்த்தெடுக்கவும், பாதுகாக்கவும் இலங்கைத் தமிழ்ச்சங்கம் பாடுபடுகின்றது. மேலும் தமிழீழத்தில் வாழும் தமிழர்களின் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துரைக்கவும், அவர்களின் நலன், மனித உரிமை, கலை, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது.







இலங்கைத் தமிழ்ச்சங்கம் கடந்த 39 ஆண்டுகளாகத் தமிழ் மொழி, கலை, பண்பாடு, மனித உரிமை ஆகிய துறைகளில் அளப்பரியத் தொண்டு செய்தவர்களுக்கு மிக உயரிய வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இந்த ஆண்டு, முன்னாள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் நீதியரசர் நவநீதம் பிள்ளை தமிழினத்திற்கும், மனிதகுலத்திற்கும் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இலங்கைத் தமிழ்ச் சங்கம் தன்னுடைய வரலாற்றிலேயே முதல் முறையாக வாழ்நாள் தொண்டு விருது என்ற மிக உயரிய விருதினை வழங்கிக் கௌரவித்தது.

இந்த விருது வழங்கியது பற்றி இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் குகபாலன் கருத்துத் தெரிவிக்கையில், எம்முடைய வரலாற்றில் பலர் எம் இனத்திற்கு நடந்த நடக்கின்ற நடக்கப்போகிற அழிவுகளையும், மனித உரிமை மீறல்களையும், இலங்கை அரசாங்கத்தின் தமிழின அழிப்பையும் வெளி உலகத்திற்குத் தெரிவித்து இருந்தாலும், தங்களுடைய பதவி காலத்திலேயே இதைச் செய்தவர்கள் மிகச்சிலரே.

அதிலும் உலக அளவில் தமிழ் இனம் நாதியற்று இருக்கையில் எமக்குக் குரல் கொடுத்தவர் அம்மையார் நவநீதம் பிள்ளை ஆவார். அவர்களுக்கு வாழ்நாள் தொண்டு விருது எனும் மிக உயரிய விருதினைச் சங்கத்தின் சார்பாக மட்டும் அல்லாமல் உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர் சார்பாகவும் வழங்கினோம் என்று கூறினார்.



காலை எட்டு மணியளவில், தமிழ்த்தாய் வாழ்த்துடன் தமிழர் சங்கம் விழா இனிதாக துவங்கியது. பின்னர் இலங்கையில் பொறுப்பு கூறுதல் பற்றியும் மனித உரிமைகள் மீறல் பற்றி ஒரு குழுவிவாதத்தை ஒருங்கிணைத்தது.

இக்குழுவிவாதத்தில் நீதியரசர் நவநீதம் பிள்ளை உட்பட முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளர்களாக விளங்கும் நான்கு பெண்கள் பங்குபெற்றனர். பல்வேறு மனித உரிமை மீறல்கள், வன்செயல்கள், சட்ட மீறல்கள், அதிகார மீறல்கள், பாலினப் பாகுபாடு குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் பார்வையாளர்களின் வினாக்களுக்கு அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டு, அனைத்து வினாக்களுக்கும் பதிலளித்தார்கள். நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு இலங்கைத் தமிழ்ச்சங்கம், அமெரிக்கத் தமிழ் அரசியற் செயலவை ஆகியவற்றின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மாலையில் மாபெரும் அரங்கில் சங்கத்தின் ஆண்டு நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. இதில் 350 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் விழா அரங்கில் குடும்பத்தோடு கலந்துகொண்டனர். குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்தும், நாட்டுப் பண்ணும் பாடி விழாவைத் தொடங்கிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரை வழங்கிய குகபாலன் இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் அமெரிக்கச் செயற்பாடுகள் குறித்தும், ஈழத்தில் ஆற்றும் பணிகள் குறித்தும், அங்கே தொடர்ந்து தழிழர்கள் இன்னல்களுக்கு ஆளாவது குறித்தும், இறுதிக்கட்டப்போரில் நடந்தது இனப்படுகொலைதான் என்றும், பேரிழப்புக்கும், இனஅழிப்புக்கும் உட்படுத்தப்பட்ட மக்களுக்குச் சரியான நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அவருடைய முழுவுரையை இப்பதிவின் கீழே காணலாம். நீதியரசர் நவநீதம் பிள்ளை அவர்களுக்கு இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக குகபாலன் வாழ்நாள் தொண்டு விருது வழங்கினார்.

மேலும் மூத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஏவிசு சிறீசெயந்தா நீதியரசருக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தார். மேலும் அவர்க்குப் பரிசு பட்டயம் வழங்கியதுடன், அனைவரும் எழுந்து நின்றுக் கையொலி எழுப்பி மகிழ்ச்சியையும் மரியாதையையும் வெளிப்படுத்தினர்.

விருது வழங்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து மதிப்பிற்குரிய நீதியரசர் மிகவும் சிறப்பான, ஊக்கமளிக்கும் எழுச்சியுரை வழங்கினார்.

அவருடைய இளமைக்காலம் பற்றியும், வழக்குரைஞராகவும் நீதியரசராகவும் பணியாற்றியது பற்றியும், இனக்கலவரங்களின் போது மனித உரிமைகள் மீறப்படுவது பற்றியும், ஐநா மனித உரிமைகள் ஆணையராகத் தாம் பணியாற்றியது பற்றியும், இலங்கையில் நடந்தப் போரில் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் நடந்ததை ஆய்வு செய்யத் தாம் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும், தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு ஒன்றே தீர்வாக அமையும் என்று தாம் கருதுவதாகவும், உலகில் வாழும் அனைத்து மக்களின் மனித உரிமைகளுக்காக தொடர்ந்து அனைவரும் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

> முன்னாள் ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் நீதியரசர் நவ நீதம் பிள்ளை தமிழினத்திற்கும், மனிதகுலத்திற்கும் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, இலங்கைத் தமிழ்ச் சங்கம் தன்னுடைய வரலாற்றிலேயே முதல் முறையாக வாழ்நாள் தொண்டு விருது என்ற மிக உயரிய விருதினை வழங்கிக் கௌரவித்தது.

பின்னர் அமெரிக்கத் தமிழ் அரசியற் செயலவையின் தலைவர் காருண்யன் சிறப்புரையாற்றினார். நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரனின் சிறப்புரையில் தமிழீழ விடுதலை ஒன்றுதான் ஈழத்தமிழர்களுக்குத் தீர்வாக அமைய முடியும் என்றும், அங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்றும், பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.


ஒவ்வொரு ஆண்டும் தமிழ் சிறார்களுக்குக் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெருவோர்க்கு விழா அரங்கில் பரிசுகள் வழங்கப்படும். இந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

தமிழர்களின் கலை, பண்பாடு, வரலாறு குறித்து நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்கு நீதியரசர் அவர்கள் பரிசுகள் வழங்கி கௌரவித்தது குழந்தைகளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இறுதியில் சங்கத்தின் செயலாளர் தயா நாகராசா நன்றியுரை ஆற்றினார். நாடுகடந்த தமிழீழ அரசு, உலகத் தமிழ் அமைப்பு, இலங்கைத் தமிழர் துயர்துடைப்பு சம உரிமைக்கான அமைப்பு, அமெரிக்கத் தமிழ் அரசியற் செயலவை ஆகிய அமெரிக்காவிலிருந்து இயங்கும் தோழமை அமைப்புகளும் இந்த விழாவில் பங்கேற்றன.பல சிறப்பு விருந்தினர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து விழாவில் பங்குபெற்றார்கள். கருத்தரங்குகளும், விவாத அரங்கும், குழு விவாதமும் நடைபெற்றது.

விழா அமைப்பாளர்கள் அரங்கம், உணவு முதலான அனைத்து ஏற்பாடுகளையும் மிகவும் சிறப்பாகச் செய்திருந்தனர். விழாவில் மூன்று வேளையும் அறுசுவை உணவு வழங்கியதுடன், கலை நிகழ்ச்சியும், இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. தமிழர் சங்கமத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் என்னவென்பது பற்றியும் ஈழவிடுதலையை முன்னெடுக்கத் தேவையான உத்திகள் குறித்தும், ஈழத்தமிழரின் கல்வி, முன்னேற்றம் குறித்தும் விவாதிக்கப்படும். உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு அதை உரக்கச் சொல்வோம் உலகிற்கு எனும் தமிழர் சங்கமத்தின் முழக்கத்திற்கு இணங்கவும், எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார், திண்ணியர் ஆகப் பெறின் எனும் திருவள்ளுவரின் வாக்கிற்கு இணங்கவும் அனைத்துச் செயற்பாட்டாளர்களும் நெஞ்சுறுதியுடன் விடை பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் ஆடம்பரத்தைக் கைவிடுவது நல்லது.

**இடபம்:** அக்கம்பக்கத்தவரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். புத்திரரின் நற்செயல் மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** பேச்சில் வசீகரம் மிகுந்திருக்கும். உழைப்பின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு முழுமையாகும். வருமானம் உயரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** மற்றவர்களின் தவறான வழிகாட்டுதலை ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமார். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**சிங்கம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். புதிய திட்டங்களை செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கன்னி:** புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மனைவி வழிசார்ந்த உறவினரால் நன்மை உண்டு.

**துலாம்:** மனதில் இருந்த குழப்பம் சரியாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் விரும்பிய இட மாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள் ஆபரணம் வாங்குவர்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆதரவை பெற்று மகிழ்வீர்கள். மற்றவர் வியக்கும் வகையில், தொழிலில் வளர்ச்சி உருவாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும்.

**தனுசு:** முக்கியமான பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி ஏற்படலாம். லாபம் சுமார். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பெண்கள் கணவரின் அன்பை பெறுவர்.

**மகரம்:** திட்டமிட்ட செயலை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**கும்பம்:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.


**மீனம்:** செயல்களில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு முழுமையாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும். பெண்கள் விருந்து, கேளிக்கையில் பங்கேற்பர்.

இரவிலை
தூக்கம் வர மாட்டேங்குது..!



காலைல
முழிப்பு வர மாட்டேங்குது..!

அய்யய் குட்டிப் பையா சட்டை
சூப்பரா இருக்கே...
தீபாவளிக்கு எடுத்ததா...?



இல்ல... எனக்கு எடுத்தது..!

இந்த துணி என்ன
பண்ணாலும் கிழியவே
கிழியாது சார்...




அப்ப எப்படி எனக்கு 2 மீற்றர்
கிழிச்சு தருவ?

1. மச்சி! என் பொண்டாட்டி தினமும் "உப்புமா" வா போட்டு கொல்றாடா!
2. இது எவ்வளவோ பரவாயில்லடா மச்சி!
3. என்னடா சொல்றே?
3. என் பொண்டாட்டி எல்லாத்திலேயுமே 'உப்பா' போட்டு கொல்றாடா!
"இந்த காலத்தில சமைக்கிற மனைவி கிடைக்கிறதே பெரிய விஷயம். இதில உப்புடா, உப்புமாடான்னு குறை சொல்லிக்கிட்டு" ஓர் அப்பாவி கணவனோட மனக் குரல்!



WhatsApp

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | | | 9 | | | | |
| 4 | | | 7 | | | 3 | | |
| 3 | | | | | 1 | | | |
| | | 3 | | | 6 | 5 | 4 | |
| | 4 | | | 5 | | | 3 | |
| | 9 | 7 | | | | 6 | | |
| | | | 4 | | | | | 2 |
| | | 2 | | | 7 | | | 3 |
| | | | | 1 | | | 7 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 3 | 8 | 5 |
| 9 | 5 | 3 | 8 | 6 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 8 | 4 | 5 | 3 | 7 | 9 | 6 | 2 |
| 5 | 3 | 7 | 2 | 4 | 8 | 6 | 9 | 1 |
| 4 | 2 | 9 | 1 | 5 | 6 | 7 | 3 | 8 |
| 6 | 1 | 8 | 3 | 7 | 9 | 5 | 2 | 4 |
| 2 | 7 | 6 | 4 | 9 | 1 | 8 | 5 | 3 |
| 3 | 4 | 1 | 6 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 8 | 9 | 5 | 7 | 2 | 3 | 1 | 4 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## கம்போடியாவில் உள்ள புலி கோவிலில் படமான முதல் தமிழ்படம்

பிரபல சண்டை இயக்குநர் ஜெயந்த் இயக்கும் படம் முந்தல். ஹெர்வெஸ்ட் மூன் பிக்சர்ஸ் சார்பில் கே.பால முருகன் தயாரிக்கிறார். அப்பு கிருஷ்ணா, ருக்ஷா என்ற புதுமுகங்களுடன் நிழல்கள் ரவி, நான் கடவுள் ராஜேந்திரன், அழகு, மகாநதி சங்கர் உட்பட பலர் நடித்துள்ளனர். ராஜா ஒளிப்பதிவு செய்துள்ளார் கே.ஜெய் கிருஷ் இசை அமைத்தார். கம்போடியா நாட்டில் உள்ள அங்கோலா புலி கோவிலில் முதன்முதலாக படம் பிடித்து திரும்பியுள்ளார்கள். இதுபற்றி இயக்குநர் ஜெயந்த் கூறியதாவது:




படத்தின் முக்கியகருவே ஓலைச்சுவடிதான். புற்றுநோயைகுணப்படுத்தும் சித்த மருந்து தயாரிப்புக்கான கணக்கு ஓலைச் சுவடியில் இருக்கிறது. ஆனால், அந்த ஓலைச்சுவடி கம் போடியாவில் பெரும் பாதுகாப்புக்கிடையே உள்ளது. அதனைத் தேடி ஹீரோ செல்கிறார். ஆனால், ஹீரோவிடம் இருந்து அதைக் கைப்பற்ற மேலும் பலர் கிளம்ப, எவரிடம் அந்த ஓலைச்சுவடி கிடைத்தது, அதை வைத்து என்ன செய்தார்கள் என்பதுதான் கதை. கம்போடியா, வியட்நாம், பாங்கொக், அந்தமான், குளுமணாலி, கேரளா, இராமேஸ்வரம் உட்பட மொத்தம் 46 இடங்களில் படமாக்கியுள்ளோம்.

முதல் பாதி காதல், நகைச்சுவை என்று நகரும் படம் இரண் டாம் பாதி முழுவதுமே நடிப்பு, திரில் என்று நகரத் தொடங்கிவிடும். கிராபிக்ஸ் எதையும் பயன்படுத்தாமல் காட்சிகளை ஒரிஜினலாக படமாக்கியுள்ளோம். கம்போடியாவில் உள்ள அங்கோலா கோவிலில் தொடர்ந்து 3 நாள்கள் படம்பிடித்துள்ளோம். இங்கு நடந்த முதல் தமிழ்படப்பிடிப்பு இதுதான். இதுவரை தமிழ் சினிமாவில் இடம்பெறாத அங்கோலா கோவில் பகுதிகளை இப்படத்தில் காட்டியிருப்பதோடு அங்கோலா கோவிலைத் தவிர்த்து கம்போடியா காடுகளிலும் படப்பிடிப்பு நடத்தியுள்ளோம். விஷ்ணு படுத்திருக்கும் சிலையும் அதில் இருந்து தொடங்கும் அருவி ஓடையில் படமாக்கப்பட்ட காட்சிகளும் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெறும் என்கிறார்-இயக்குநர் ஜெயந்த்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 . 01 . 1935 | 21 . 11 . 2016 |



## ஆறுமுகம் தணிகாசலம்பிள்ளை

(முன்னாள் இயந்திர இயக்குனர்-வாழைச்சேனை காகித தொழிற்சாலை, மயிலப்புலம் கந்தசாமி கோயில் முன்னாள் தலைவரும் 7 ஆம் திருவிழா உபயகாரரும்)

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தணிகாசலம் பிள்ளை கடந்த (21.11.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-பொற்கொடி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ் சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் பெறாமகளான காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற உதயமலர் மற்றும் தவதாசன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), இராஜேஸ்வரி, குழந்தைக்குமார், சிவலோகலட்சுமி, நவமணி, விஷ்ணுகுமார், சர்வேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராதை (லண்டன்), வினோபா, யசோதா, மஞ்சுளா, சனா, நேமிநாதன், தவவீரசிங்கம் (சிற்பாச்சாரியார்-அராலி கிழக்கு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**

**த.தவதாசன் (லண்டன்), த.பரமேஸ்வரன்- 077 6458237, த.குழந்தைக்குமார்- 077 9587463, த.விஷ்ணுகுமார்- 077 0366522, த.சர்வேஸ்வரன்- 077 6287454**

"முத்துவாசம்"
அராலி வடக்கு,வட்டுக்கோட்டை. (J 6306) (16.17.19)

# மரண அறிவித்தல்

திருமதி
## தனலெட்சுமி சுந்தரலிங்கம்



ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி சுந்தரலிங்கம் நேற்று (22.11.2016) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் அ.சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), தனேஸ்குமார் (கண்ணன்), சிவகுமார் (லண்டன்), ராஜ்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் சிவாஜினி, சத்தியபாமா, சத்தியவாணி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பரதராசா மற்றும் சத்தியமூர்த்தி, யோகநாதன், விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சோமலிங்கம் பூலோகசுந்தரம்பிள்ளை (சோதி), ராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சுவேத்தா, சஞ்சை, தமிழ்மதி, பாவனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2016) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**சு.தனேஸ்குமார்**
**(தாயவன்-மகன்)**
**077 3662802**

15, கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (ஜெ.6308) (16.17.19)

## சிறுவர் முதியோர் தின விழா

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தின் பன்னாட்டு சிறுவர், முதியோர், மாற்று வலுவுடையோர் தின விழா நாளை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச. மோகனபவன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர், முதியோர், மாற்றவலுவுள்ளோர் கௌரவிக்கபடுவர் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

(வ- 9)

# மரண அறிவித்தல்

## வேலாயுதபிள்ளை கேதீஸ்வரன்

வன்னியர் கோயிலடி வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சேமப்புல வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை கேதீஸ்வரன் நேற்று (22.11.2016) செவ்வாய்க் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வேலாயுதபிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும், ஜெயரூபியின் அன்புக் கணவரும், நிதர்சன் (யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி), டிலானி (வேம்படி மகளிர் கல்லூரி), நோசிலா (யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தகப்பனும், விக்கினேஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), பாமினி (ஜேர்மனி), மகேந்திரன் (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற விமலேந்திரன் மற்றும் கமலேந்திரன் (காணி பயன்பாட்டு உத்தியோகத்தர்.வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (J/6310)(10.17) **0771999655 / 0778543782**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 . 09 . 1937 | 21 . 11 . 2016 |



## திருமதி தனலக்ஷ்மி (சறோஜினி) நடராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலக்ஷ்மி (சறோஜினி) நடராஜா 21.11.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராஜா நடராஜாவின் அன்பு மனைவியும், விமலாதேவி, மகேந்திரன், சகுந்தலாதேவி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரகுநந்தன் (U.S.A), நித்தியா (U.S.A ), நிரூபா ( Canada ), ராம்மோகன் (U.S.A ) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவராஜா,நந்தகுமார்,கேமலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆரபி, அமலேஷ், ஆதிரா, அகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (J/6303) (11,17,18,21)

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி கணேசலிங்கம்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கணேசலிங்கம் 22.11.2016 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவானந்த தம்பதியரின் அன்பு மகளும், விஸ்வநாதர் - இலட்சுமிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசலிங்கத்தின் பாசமிகு மனைவியும் தயாளினி கணேசலிங்கம் (சுண்டுகுளி மகளிர் கல்லூரி - ஆசிரியை) பகிரதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவப்பிரகாசம் சிலோகநாதன், பத்மாவதி, மோகதாஸ், காலஞ் சென்ற திருநாவுக்கர ஆகியோரின் அன்புச் சகோதரியும், கௌசல்யாவின் (கனடா) அன்புமிகு மாமியும் வைசாலியின் (கனடா) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2016) புதன்கிழமை இல. விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி. 3.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வி.கணேசலிங்கம்**
**(கணவர்)**

இல.3, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை. (ஜெ. 6300) (13.17.18.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து ரெங்கன்.

# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலையொட்டி சுதந்திரக்கட்சியை பலமுள்ளதாக்க ஜனாதிபதி மும்முரம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் தொகையை 5 மில்லியனாக உயர்த்துவதற்கு அமைப்பாளர்கள் உழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். புதிய கட்சியில் 5 லட்சம் பேரை இணைத்துக் கொள்ளப்போவதாக பசில் ராஜபக்ச அறிவித்திருப்பதற்குப் பதிலளிக்கும் விதத்தில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் மாவட்ட அளவிலும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறது.



அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்வைத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பலமுள்ளதொரு சக்தியாக நிலை நிறுத்திக் கொள்வதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளார். இதில் அவர் அதிக அவசரம் காட்டத் தொடங்கியிருப்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குச் சார்பான புதிய கட்சியொன்று சிறிலங்கா பொதுஜன பெரமுன (சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி) என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டிருப்பதும் ஒரு காரணமாகும். இன்னொரு காரணம் என்னவென்றால், ஆட்சியில் இணைந்துள்ள இன்னொரு பங்காளிக் கட்சி யான ஐ.தே.கட்சிக்குச் சமமானதொரு அதிகார பலத்தில் தமது கட்சியை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுமாகும்.

நவம்பர் 11ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய 168 சிறிலங்காசுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கான இரவுப்போசன விருந்தின்போது அவர்களுக்கு வழங்கிய ஆலோசனைகளின் சாராம்சம் இதுவாகவே இருந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பதவியிலிருக்கும் பல அமைச்சர்களும் அடங்குவர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் தொகையை 5 மில்லியனாக உயர்த்துவதற்கு அமைப்பாளர்கள் உழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். புதிய கட்சியில் 5 லட்சம்பேரை இணைத்துக் கொள்ளப்போவதாக பசில் ராஜபக்ச அறிவித்திருப்பதற்குப் பதிலளிக்கும் விதத்தில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் மாவட்ட அளவிலும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சியில் இறங்கி இருக்கிறது.

"அவர்கள் அந்தக்கட்சியை உருவாக்கும் வரை தான் நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன் - பார்ப்போமே" என்றார் ஜனாதிபதி. வலதுபக்கம் போகையில் தன்னால் சைகைகாட்டிக் கொண்டு இடதுபக்கமும் திரும்பிச் செல்லவும் முடியும் என்றும் கூறினார் ஜனாதிபதி. அணி சேரா நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டபோது முன்னாள் யூகோஸ்லாவிய அதிபர் ஜோசிப் புறோஸ் டீட்டோ இவ்வாறான ஒரு கருத்தைத் தான் கூறியிருந்தார் என்பது சிறிசேன அறிந்துள்ளாரா என்பது தெரியவில்லை. இதன் மூலம் ஜனாதிபதி சிறிசேன எதைக் கூற முனைந்தார் என்பது குறித்து கடந்த வாரம் முழுவதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே. கட்சி வட்டாரங்களில் பெரிதாகவிவாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இது சாதாரணமாகக் கூறப்பட்ட கூற்றா அல்லது அதில் உட்கருத்து ஏதும் உண்டா என்பது தெரியவில்லை.

## அமைச்சரவைக் கூட்டத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் வாய்த் தர்க்கம்.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி யில் இணைந்து கொள்ளும்படி கோரவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது அதிக ஒற்றுமையையும் கட்சியின் பலத்தையும் அதிகரிப்பதாகவிருக்கும் என்றார். தேர்தல் தொகுதிகளில் அதிகநேரம் செலவழிக்கும்படியும் மக்களின் குறைகளைக் கண்டறிந்து அவைகளைக் களைவதில் ஆர்வம் காட்டும்படியும் அமைப்பாளர்களை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

### உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆயத்தம்

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. புதுக்குடி யிருப்பு மற்றும் மேலுமொரு பிரதேச சபையின் தேர்தல்களும் ஏனைய உள்ளூராட்சி தேர்தல்களுடன் நடத்தப் படவேண்டும் என்று மாகாண சபைகள் உள்ளூராட்சி மன் றங்கள் தொடர்பான அமைச்சர் பைசர் முஸ்தபா விரும்பு கின்றார். இந்த சபைகளுக்கான தேர்தல்கள் 2011ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் திகதி நடைபெறவிருந்தன. இந்தப் பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டி யிருந்தமையாலும் மக்கள் குடியேற்றங்கள் முழுமைபெறாமல் இருந்தமையாலும் அவ்வப்போது ஒத்திப் போடப்பட்டு வந்துள்ளன.

இந்தச் சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டு அவை இன்னமும் செயலில் இருக்கின்றன என்று குறிப்பிட்டுள்ள அமைச்சர், சில வேட்பாளர்களின் இறப்புக் காரணமாகவும் 35 வயதுக்குட்படவேண்டியவர்கள் இப்போது அந்த வயதைத் தாண்டி விட்டதாலும் மாற்றி அமைக்கவேண்டியுள்ளது என்றார். இப்போதுள்ள வேட்பு மனுக்களை இல்லாமற் செய்யவும் மனுத்தாக்கல் செய்தவர்களின் கட்டுப் பணங்களை சட்டபூர்வ வட்டியுடன் திருப்பிச் செலுத்தவும் தேவையான சட்டவரைவுகளை முன்னெடுக்குமாறு சட்ட வரைஞர் திணைக்களத்தை அவர் கேட்டிருக்கிறார். இந்தத் தேர்தல்கள் வட்டார முறைகளின் அடிப்படையிலான கலப்புத் தேர்தல் முறையில் நடத்தப்படுவதை அமைச்சர் விரும்புகின்றார். இந்தக் கலப்பு முறை என்ன என்பதை அவர் அமைச்சர்களுக்கு வழங்கியுள்ள அறிக்கையில் விளக்கியிருக்கிறார் [illegible]
கடந்த [illegible] அமைச்சர்கள் இருவர் வாய்த்தாக்கத்தில் ஈடுபட்டவேளை அவர்கள் இருவருக்குமிடையில் அமைதியைத்தோற்றுவிக்கும் காரியத்தில் ஜனாதிபதி மைத்திரிபால ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டது. கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தாக்கல் செய்திருந்த இரும்புத்துண்டுகள் மற்றும் உலோகங்கள் ஏற்றுமதி செய்வது தொடர்பான பத்திரம் தொடர்பானது இந்த விவகாரம். கண்டி மாவட்டத்தில் உலோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தை அமைச்சர் ஹக்கீம் முன்வைத்திருந்தார். கண்டி மாவட்டத்தில் உலோகத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சுமார் 2000 உற்பத்தியாளர்கள் தாம் பாதிக்கப்படுவதாக முறைப்பாடு வைத்துள்ளார்கள் என்று ஹக்கீம் கூறினார். கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவும் இந்தக் கருத்தை ஆதரித்தார். ஆனால், அமைச்சர் பதியுதீன் விட்டுக் கொடுக்காமையால் ஜனாதிபதி தலையிட்டு ஹக்கீம், கிரியெல்ல மற்றும் பதியுதீன் ஆகிய மூவரும் சந்தித்து இந்த விடயத்தில் ஒரு முடிவுக்கு வரலாம் என்று தெரிவித்ததன் பின் விவகாரம் முடிவுக்கு வந்தது. 1

தண்ணீர் விநியோகத்துக்கான வரியை 30 வீதமாக அதிகரிப்பதற்கு தேசிய தண்ணீர் விநியோ கம் மற்றும் வடிகால் சபை தன்னிச்சையாகத் தீர்மானித்திருப்து குறித்த விவாதத்தின்போது அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு இந்த விடயம் தாக்கல் செய்யப்படவில்லையென பல அமைச்சர்கள் குறைபட்டார்கள். நிதியமைச்சர் ரவி கருணநாயக்கா தமக்கும் கூட அறிவிக்கப்பட வில்லையென்று தெரிவித்தார்.

புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கு சம்பளம் வழங்கவும் போனஸ் வழங்குவதற்கும் இது தேவைப்படுவதாக ஓர் அமைச்சர் தெரிவித்தார். இந்த நிறுவனத்துக்கு அரசியல் ரீதியில் ஆள்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக அமைச்சர் பதியு தீன் குற்றஞ் சாட்டினார். இது அமைச்சர் ஹக்கீமை நோக்கிய குற்றச்சாட்டு என்று கருதப் பட்டது. 30 வீத அதிகரிப்பானது வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளை பாதிப்பதாகவிருக்கும் என்று ஜனாதிபதி கூறினார்.

அதிகரிப்பு அவசியமெனில் மக்களுக்கு அதை விளங்கப்படுத்தி இயக்கம் ஒன்றை நடத்தியிருக்க வேண்டும் என் றும் அவர் குறிப்பிட்டார். இந்த அதிகரிப்பைக் கைவிடவேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்தார். ஹக்கீம் பின்வரும் விளக்கத்தை வழங்கினார். மூன்று வருடங்களுக்கொருமுறை தண்ணீர் விநியோக விகிதம் ஆராயப்பட்டு திருத்தப்படுகின்றது. ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக வரிகள் அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஒருவருடத்தில் ஒரு தனிக்குடும்பத்துக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு நீர் வழங்கும் சபைக்கு 5லட்சத்திலிருந்து 6லட்சம் ரூபா வரை செலவேற்படுகிறது. இதற்கு திறைசேரி பணம் வழங்குவதில்லை. பழுதுபார்த்தல், பராமரிப்புச் செலவுகளையும் நாங்களே பார்த்துக் கொள்கிறோம். தற்பொழுது தண்ணீர்ப் பாவனை ஒரு நாளுக்கு 18 ரூபா பிடிக்கிறது. இது ஒருகோப்பை தேநீர் அல்லது பனிஸ் விலையி லும் குறைவே. ஆனால் ஒருகன மீற்றர் தண்ணீர் விநியோகத்துக்கு நாங்கள் 48 ரூபா செலவழிக்கிறோம் என்றார்.

தன்னிச்சையாக வரிகளை அதிகரிதது சம்பளங்களும் போனஸும் வழங்கப்படலாகாது. அதனைத் திறைசேரியின் வழங்கல் மூலம் பெற்று நிறைவேற்ற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதுடன் இது தொடர்பான திட்டத்தைத் தீர்மானிக்க அமைச்சர்கள் ஹக்கீம், சரத் அமுனுகம மற்றும் ரவிகருணாநாயக்க ஆகியவர்களைக் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார். இதில் சிறிய அளவில் வரி அதிகரிப்பு இருக்கக் கூடும் என்று அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துக் குற்றங்களுக்கு அந்த இடத்திலேயே 2500 ரூபா குற்றப்பணம் அறவிடும் விடயமும் ஆராயப்பட்டது. இந்தத் தொகையில் மாற்றம் இருக்காது என்று நிதியமைச்சர் கூறினார். இருந்தபோதும் அமைச்சரவையின் முன்னைய தீர்மானம் ஒன்றின் படி மூன்று விதமான போக்குவரத்துக் குற்றங்களுக்கு 15 ஆயிரம் ரூபா அறிவிடப்படும் என்று அவர் தெரிவித்தார்.

1. குடிபோதையில் வாகனம் செலுத்துதல்
2. குறித்த வயதை அடையமுன் வாகனம் ஓட்டுதல்
3. சாரத்திய உரிமம் இன்றி வாகனம் ஓட்டுதல் என்பன.

இவ்வாறு பயணப்பாதையில் பணம் செலுத்தும் ஏற்பாடானது கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவிப்பது போல் மத்திய வங்கியைத் தனியார் மயப்படுத்துவதாகாது என்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்...

செயற்படுத்திய நாமல் ராஜபக்சவின் நீலப் படையணி இளைஞர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக் காவின் அழுத்தத்துக்கு இலங்கை ஒரு போதும் பணியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் அவர் தெரிவித்தாவது: பலஸ்தீனத்துக்காகவும் அங்கு வாழும் மக்களுக்காகவும் இலங்கை தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வருகின்றது. பலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் கண்காணிப்பு அங்கத்துவம் கிடைப்பதற்கும் பலஸ்தீனக் கொடி அங்கு ஏற்றப்படுவதற்கும் இலங்கை முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

அதேவேளை, இஸ்ரேலுடனான உறவும் இலங்கைக்கு முக்கியமாகும். அங்கு 6 ஆயிரம் இலங்கையர்கள் பணிபுரிகின்றனர். தொழில்நுட்ப ரீதியில் அந்த நாடு முன்னிலையில் திகழ்கின்றது.

எனவேதான், மேற்கூறப்பட்ட இரு நாடுகளுடனும் எமது உறவைப் பலப்படுத்தும் நோக்கில் யுனெஸ்கோ வாக்கெடுப்பிலிருந்து இலங்கை விலகியிருந்தது. மாறாக அமெரிக்காவின் அழுத்தத்துக்குப் பணிந்து தீர்மானம் எடுக்கப்படவில்லை. இலங்கையில் நீண்ட காலமாகவே சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்த உறவைச் சீர்குலைத்து மோதலை உருவாக்குவதற்குச் சூழ்ச்சி வகுக்கப்படுகின்றது. இதன் ஓர் அங்கமாகத்தான் கண்டியில் பள்ளி வீதி பெயர்ப்பலகை உடைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு இந்த நாட்டில் வாழும் உரிமை இல்லை என்ற பயங்கரமான செய்தியை வழங்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. நாமல் ராஜபக்சவின் நீலப் படையணியில் இருந்த இளைஞர் ஒருவரே முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார். தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். முஸ்லிம் அடிப்படைவாதியும் கைது செய்யப்பட்டுள்ளார். அடிப்படைவாதிகளின் தீய எண்ணங்களுக்கு இடமளிக்கப்படாது. இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசு பாடுபடும் – என்றார். (த-5)

## வடக்கு...

செலவுத்திட்ட விவாதம் டிசெம்பர் மாதம் இரண்டாம் வாரத் தில் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண சபையின் 66 ஆவது அமர்வு நாளை வியாழக்கிழமை கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வில், வடக்கு மாகாண அரசின் நிதி அமைச்சரும், முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் நிதிக் கூற்று அறிக்கையை இதன் போது சமர்பிக்கவுள்ளார்.

வடக்கு அரசுக்கு, அடுத்த ஆண்டு கொழும்பு அரசினால் வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் செலவினம் தொடர்பிலான சுருக்க அறிக்கையாகவே இது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வரவு–செலவுத் திட்ட விவாதம் டிசெம்பர் மாதம் இரண்டாம் வாரமே இடம்பெறும் என்றும், மூன்று தினங்கள் வரையில் இது நடைபெறலாம் என்றும் வடக்கு மாகாண பேரவைச் செயலக வட்டாரங்கள் குறிப்பிட்டன. (த-5)

## தவராசாவின் ...

இருப்பினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயல ரால் அவைத் தலைவருக்கு முகவரியிடப்பட்டு முறைப் படியாகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டால் மாத்திரமே இந்த விடயம் ஆராயப்படும்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு, ஈ.பி.டி.பி.யின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமர வீரவிடம் கேட்டிருந்தார்.

இதற்கு அமைவாக, எதிர்க்கட் சித் தலைவர் பதவியிலிருந்து தவராசாவை நீக்கி, அந்தக் கட்சியின் மற்றொரு உறுப்பினரான வை.தவநாதனை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அரமவீர, வடக்கு மாகாண ஆளுநருக்கு முகவரியிட்டு அவைத் தலைவருக்குப் பிரதியிட்டுக் கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்திருந்தார். முறைப்படியாக அவைத் தலைவருக்கு, முகவரியிட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், நாளை வியாழக்கிழமை வடக்கு மாகாண சபையின் அமர்வு நடைபெறவுள்ளது. இந்த அமர்வில், எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இருப்பினும், நாளைய அமர்வுக்கு முன்னதாக செயலர் மகிந்த அரமவீரவிடமிருந்து முறைப்படியான கடிதம் அவைத் தலைவருக்கு கிடைக்கப் பெற்றால் இந்த விடயம் சபையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## வடக்குக்கு...

தொழில் மேம்பாட்டுக்காக 200 மில்லியன் ரூபா நோர்வே அரசு வழங்கியுள்ளது. பன்னாட்டுத் தொழில் அலுவலகத்தின் ஊடாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான உடன்படிக்கை நேற்றுக் கைச்சாத்தாகியுள்ளது.

இவ்வாறு நோர்வேத் தூதரகம் நேற்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

நோர்வே மற்றும் பன்னாட்டுத் தொழில் அலுவலகம் ஆகியன வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்கான உடன்படிக்கையில் நேற்றுக் கைச்சாத்திட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மாவட்டங்களில் அடித்தட்டு நிலையில் தேவைப்படுகின்ற உடனடித் தேவைகளான தொழில் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகள் ஆகியவற்றைத் தீர்ப்பதை இந்தத் திட்டம் நோக்காகக் கொண்டது.

உடன்படிக்கையில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் துர்பியோன் கவுஸ்தத்சேத்த மற்றும் பன்னாட்டுத் தொழில் அலுவலக இலங்கைக்கான பொறுப்பதிகாரி இந்திரா துடாவ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

நோர்வே அரசின் நிதியுதவியுடன் பன்னாட்டுத் தொழில் அலுவலகம் முதன்மையான உற்பத்தியில் ஈடுபடும் சமூகங்களுக்கும் தனியார் துறைக்கும் இடையிலான பங்காண்மைகளை உருவாக்குவதன் மூலம் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியை அதிகரித்து இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்களில் குடும்பங்கள் நின்று நிலைக்கக்கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.

இதன் மூலம் கூட்டுறவுச்சங்கங்களுக்கும், விவசாயம் சார்பான நிறுவனங்கள், பழ, மரக்கறி மற்றும் மீன் ஏற்றுமதியாளர்கள் இடையில் கூட்டு முயற்சிகள் போன்ற புதிய வியாபார மாதிரிகளை உருவாக்கிப் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை நிலைமாற்றத் துணை புரிகின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தினருக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் தனியார் துறையுடன் கூட்டுச் சேர்ந்து பணியாற்றக்கூடிய வண்ணம் வலுப்படுத்தப்படும்.

இதன் இடையீடுகளானவை 60 சதவீதம் பெண்களையும் அதில் 30 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களையும் முன்னிலைப்படுத்துகின்றன.

உடன்படிக்கை கைச்சாத்திடும்போது 'நாட்டின் நல்லிணக்கத்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நின்று நிலைக்கக்கூடிய வாழ்வாதாரத்தையும் பொருளாதார வலுவூட்டலையும் வழங்குவது முக்கியமானதாகும், என்று நோர்வேத் தூதுவர் தெரிவித்தாக, செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## உயிரிழந்தோரை...

தாயக தேசத்தில், 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆண்டு மாவீரர் வாரத்தை நினைவெழுச்சியுடன் கடைப்பிடிப்பதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, மாவீரர் தினத்தைப் பகிரங்கமான நினைவு கூர்ந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்திருந்தார். இந்த நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பை நினைவு கூர இடமளிக்கப்படாது. எனினும் உயிரிழந்தவர்களை நினைவு கூருவது ஜனநாயக உரிமை. எது எவ்வாறு இருப்பினும் ஊடகங்கள் இவற்றைத் தவறாக அறிக்கையிடக் கூடாது' என்று லக்ஸ்மன் யாப்பா குறிப்பிட்டார். (த-5)

## ஆயுதம்...

அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர்கள் சந்திப்பு கொழும்பு– கிருலப்பனையில் அமைந்துள்ள அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த ஞானசார தேரர், வடக்கு–கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். அங்குள்ள புத்தர் சிலைகளை அகற்றுகின்றனர். அதேபோன்று தெற்கில் கோவில்களை நாங்கள் அகற்றுகின்றோமா? சிலுவைகளை அகற்றியுள்ளோமா? இஸ்லாம் பள்ளி ஒன்றை அமைப்பதற்கு எதிர்த்திருக்கின்றோமா? இது புதுமையான நல்லிணக்கம்தான்.

நாட்டுக்குச் சிறந்த தலைவன் இல்லாவிட்டால் இவ்வாறான நிலமையே ஏற்படும். ஏமாறியதன்மை, சுறுசுறுப்பற்றதன்மை, ஆண்மையின்மை உட்பட பலவீனமான தலைவன் ஆட்சிக்கு வந்தால் மக்கள் ஆயுதங்களையே ஏந்துவார்கள்.

பௌத்த பிக்குகளே நீங்கள் வரவேண்டாம். இப்போது தாக்குதல் நடத்துவதைத் தவிர வேறொன்றும் இல்லை. இந்த நிலைக்கே மக்கள் தள்ளப்படுவார்கள். இப்படிப்பட்ட மனோபாவமே நாட்டில் ஏற்பட்டு வருகின்றது. சிங்களவர் என்பதே நாங்கள் செய்த பெரும்பாவம்.

முஸ்லிம் மக்கள் பீதியடைவார்கள். அவர்கள் நிச்சயமாகப் பீதியடைய வேண்டும். முஸ்லிம்களது படிப்பினைகளே தவறாகும். இஸ்லாமிய சமாதானம் என்ற பெயரை வைத்துக் கொண்டு சமூகத்தை விழுங்கும் முயற்சியை ஜம்மியதுல் உலமா வேடிக்கை பார்க்கின்றது. எனவே இதுபற்றி அந்த அமைப்புக்கு நாங்கள் கடிதமொன்றை அனுப்புகின்றோம். அத்தோடு மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்து மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமனரத்ன தேரரை சந்திப்பதற்கு எதிர்வரும் மூன்றாம் திகதி அங்கு செல்லவுள்ளோம் – என்றார். (த-5)

## யாழ்ப்பாணத்தில்...

என்ற பொதுமக்களின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஆனால், அது தொடர்பில் பொதுமக்கள் வழக்குத் தாக்கல் செய்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார். யாழ்.மேல்நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணை ஒன்றில் நீதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது: ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறி 70 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 9 நீதிமன்றங்களும் மேல் நீதிமன்றமும் காணப்படுகின்றன. அவ்வாறிருந்தும் கைது செய்யப்பட்டவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு கொழும்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு மன்றின் உத்தரவுப்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை இங்கு உள்ள நீதிமன்றங்களில் முற்படுத்த முடியாதா? இந்த வழக்குகளை யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றங்களில் நடத்த முடியாதா என்ற பொதுமக்களின் கேள்விக்குப் பதிலளிக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்படுவர்களை வேறு மாவட்டத்துக்குக் கொண்டு செல்வதானது அரசியல் சாசனச் சட்டத்தை மீறிய செயற்பாடாகும்.

2007 ஆம் ஆண்டு குடியியல் அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒரு பிரதேசத்தில் கைது செய்யப்படுகின்ற நபர் அந்தப் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுத்தப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு முற்படுத்தப்படாத விடத்து கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் 3 மாத காலத்துக்குள் வழக்குத் தாக்கல் செய்யலாம். இன்று இது வரை யாரும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வழக்குத் தாக்கல் செய்தால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும்–என்றார். (த-4-6)

## நாட்டைப்

நோக்கில் தயாரிக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பை நிறைவேற்ற நாங்கள் ஒருபோதும் இடமளியோம்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் இனவாதிகளையும், ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்திற்கு உதவிய புலம்பெயர் அமைப்புக்களையும் மகிழ்விப்பதற்கும் ரணில் – சம்பந்தன் தலைமையிலான கூட்டுக் குழு செயற்படுகிறது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உப குழுகளின் அறிக்கை சம்பந்தன்–ரணிலின் கூட்டு அறிக்கையாகும். மாறாக நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் அறிக்கையாக அது அமையவில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுக்குச் சென்று அங்கு வளர்ச்சி அறிக்கையை சமர்பிக்க அரசு எதிர்பார்க்கிறது. ஜெனிவாவில் மங்கள சமரவீர வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக அங்கு கூறவுள்ளதோடு, எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இந்த புதிய அரசமைப்பை நிறைவேற்றும் முயற்சியும் இடம்பெறுகிறது.

எனவே, மகாநாயக்கர்களும், சர்வமதத் தலைவர்களும் இது குறித்து நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். புதிய அரசமைப்பில் வடக்கு–கிழக்கு இணைப்பு குறித்து நேரடியாகக் கூறியிருக்காவிட்டாலும் அதனை இறுதிப் பிரேரணையில் நிறைவேற்றவே அரசு தீர்மானித்துள்ளது. அன்று சந்திரிகாவின் பொட்டலத்தைத் தோற்கடித்ததைப் போன்று அதைவிடவும் பயங்கரமான சம்பந்தன்–ரணில் கூட்டு முயற்சியை தோற்கடிக்க ஒன்றிணையுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் – என்றார். (த-5)

## குடாநாட்டில்...

னர். அத்துடன் இரண்டு வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், 292 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட் டுள்ளதாக, இடர் முகாமைத்துவமைய நிலையம் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 64 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 43 வீடுகள் பகுதி வரை சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 223 குடும்பங்களைச் சேர்ந்த 772 பேர் பாதிப்படைந்துள்ளனர். இரு வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. அத்துடன் 218 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குடும்பங்களை சேர்ந்த எட்டுப் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 249 பேர் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 29 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கோப்பாய் பிரதேச செயலக பகுதியில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 238 பேர் பாதிப்படைந்துள்ளனர். (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சண்முகம்
ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், இணைப்பதிகாரி சமூக அபிவிருத்தி மன்றம், ஓய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

பிறப்பு 06.10.1927 — இறப்பு 23.11.1990

அன்னாரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
சமூக அபிவிருத்தி மன்றம்
276, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## 26 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
அமரர் சண்முகம்
ஞானப்பிரகாசம்
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம் 06.10.1927
மறைவு 23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 26 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் .

### அடித்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வவுனியா பத்தினியார் மகிழங்குளம் மூன்றாம் ஒழுங்கையில், ஜேர்மனியிலிருந்து வந்து வசித்துவந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான விக்கிரமரட்ண குணசிறி (வயது -59) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.


சடலத்தின் மார்புப் பகுதியில் காயம் காணப்படுகின்றது. அதில் இரத்தம் படிந்துள்ளது. அருகில் கதிரைச் சட்டங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன என்று சடலத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் குடும்பமாக இங்கு வந்தார். அவரது வீடு மற்றும் காணிகளைப் புனரமைப்புச் செய்து கொண்டிருந்துள்ளார். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இவரது குடும்பத்தினர் வெளி நாட்டுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். அவர் சம்பவ தினத்தன்று தனது நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்துள்ளார். இதன் போது வாய்த் தர்க்கம் ஏற்பட்ட நிலையில், நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார். சந்தேகத்தில் 4 பேர் விசாரணையில் உள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'நேற்று (நேற்று முன்தினம்) இரவு 10 மணியளவில் அவரது வீட்டில் அலறல் சத்தம் கேட்டது. பயத்தினால்அங்கு செல்லவில்லை' என்று அயலவர்கள் தெரிவித்தனர்.

(கு-5-6-402)

## 21 ஆவது ஆண்டு நிறைவில்





அமரர் கனகசபை
சண்முகசுந்தரம்
(ஸ்தாபகர் சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்)
தோற்றம் 03.11.1941 — மறைவு 23.11.1995

அமரர் சண்முகசுந்தரம்
சிவரூபன்
(மாணவன் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம் 18.08.1983 — மறைவு 23.11.1995

துணையிழந்து மூவேழு தாழாண்டுகளாய் முடிந்தும்
நினைவு வானில் நீங்கள் இருவீரும்
அணையா விளக்காய் ஒளிதந்து எம்மனதில்
இணைந்து நிறைந்து இருக்கின்றீர்கள் நித்தலுமே

துர்க்கா இல்லம்
29, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 . 07 . 1950

உதிர்வு 04 . 12 . 2015

திதி: நவமி (23.11.2016)

திருமதி குகராணி பாலசுப்பிரமணியம்

கருணையும், அன்பும், கடுசொல்லறியாத பண்பும் ஒருங்கே அமைந்த எங்கள் தாயே....!
இறைவனை நாம் கண்டதில்லை - என்றும் தெய்வமாய் நீர் வாழ்ந்தீரே....
வேதம் நான்கிலும் சொல்லாத பொறுமையை வாழ்வின் சுருதியாய் வரிந்து கொண்டவரே...!
எங்கள் உறவுச் சேனையை தன் புன்னகையால் கட்டி வைத்தவரே....
அனைவரையும் அரவணைத்து ஒழுங்கமைத்த ஆளுமையே....
எல்லோரையும் நேசித்த தேவதையே.... "தேவதைகள் பூமியில் வாழ்ந்ததில்லை" - அதனால்தானோ
சட்டென எமைவிட்டு மறைந்தீர்கள்....
விழி பனிக்க, கரம் எடுத்து, மெய்யுருகி, தலைசாய்த்து பணிகின்றோம் ...
தாயே...வாழ்த்தி அருள்புரிவாய்....
நீங்காத நினைவுகளுடன்....

'ஆயிரம்' கலைமணி வீதி,
கட்டைப்பிராய், கல்வியங்காடு.

கணவர், [illegible]
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவுச்சுடர்



தோற்றம் 09 . 11 . 1956

மறைவு 05 . 12 . 2015

அமரர் கிட்டினர் நாகராசா

திதி: அபரபக்க தசமி (23.11.2016)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவராய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்தாலும் எம்
உள்ளங்களில் என்றும் நீங்காது
நிலைத்திருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

[illegible] நாவற்குழி,
கைதடி.

குடும்பத்தினர்.
077 720 1615

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாரிஸ் புறநகர் பகுதிகளில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் போராளிகள் கட்டமைப்பு எனும் முன்னாள் போராளிகளை உள்ளடக் கிய அமைப்பும் வெவ்வேறு இடங்களில் மாவீரர் நாளை நினைவு கூருவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன.

பாரிஸில் இரு பிரிவாக மாவீரர் நாள் நினைவு கூரல் தேவையா? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டதை அடுத்து, ஒரே இடத்தில் மாவீரர் நாளை நடத்துவதற்கு முயற்சிகள் மேற் கொள் ளப்பட்டு, பேச்சுக்களும் நடத்தப்பட்ட போதிலும் அவை தோல்வியிலேயே முடிந் தன.

பாரிஸில் இரண்டு இடங்களில் மாவீரர் நாள் நிகழ்வு நடைபெறும் என்று இரு பகுதியினராலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் லாச்சப்பல் பகுதியில் போராளிகள் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்தவர்களும் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த வாள் வெட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வாள் வெட்டுக்குள்ளானவர்* முன்னாள் போராளியான ஜெயக்குமார் என்றும், இவர் தற்பொழுது தமிழர் ஒருங்கிணைப் புக் குழுவின் செயற்பாட்டாளராக இயங்கி வருகிறார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## சுமணரத்ன...

மாறு அரசை வலியுறுத்தி மட்டக்களப்பு செங்கலடியில் இந்துக் குருமார் நேற்று அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கிழக்கு இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி இடம் பெற்றது.

ஆலயப் பூசகர்கள், தர்ம கர்த்தாக்கள் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் மற் றும் பொதுமக்கள் இதில் பங்கேற்றனர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள் தேரரின் அடாவடித்தனங்களை நிறுத்துமாறும், பிரதேசத்தில் இன முரண்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டாம் என்றும் அரசை வலியுறுத்தும் பதாகைகளை ஏந்தியி ருந்ததுடன் ஜனாதிபதிக்கு மனு ஒன்றையும் கையளித்தனர். (த-ய-46, 47)

## சேமித்த...

வியாபார வர்த்தகர்கள் நேற்று மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந் தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அவர்கள் தெரிவித்ததாவது:

வன்னிப் பகுதியில் உள்ள பிரதான குளங்கள் சீரமைக்கப்பட்டமையால் சிறுபோக நெற் செய்கையில் விவசா யிகள் ஈடுபடவில்லை. இதனால் பெரிய அரிசி ஆலைகளில் உள்ள நெல் இருப்பு குறைவடைந்துள்ளது. தனியார் அரிசி ஆலை களிலும் நெல் இருப்பு முடிவடைந்துவிட்டது.

அரச களஞ்சியங்களில் நெல்லைப் பெற்றுக் கொள்வதற்காக அரிசி ஆலை வர்த்தகர்களால் பணம் செலுத் தப் பட்டு நான்கு மாதங்களுக்கு மேலான நிலையில் இதுவரை நெல் விடுவிக்கப் படவில்லை. காலபோக நெல் அறு வடை ஜனவரி 15 ஆம் திகதிக்குப் பிறகு தான் படிப்படியாக ஆரம்பிக்கும்.

இப்போது அரச களஞ்சியத்தில் உள்ள நெல்லை விடுவிப்பதன் ஊடாக சந்தையில் அரிசியின் விலையைச் சீராக பேண அல்லது குறைந்த விலைக்கு நுகர்வோருக்கு வழங்க முடியும்- என்றனர். (த-4-7)

## எதிர்பார்க்கும்...

பட்டால்தான் எங்களை நாங்களே ஆளும் நிலையேற்படும். கூட்டாட்சியை அரசு தரமறுத்தால் எங்கள் போராட்டங்களும் - ஆர்ப்பாட்டங்களும், அரசுக்கு எதிரான உணர்வுகளும் தொடரும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது,

கொழும்பு அரசின் ஆதிக்க மனப்பான்மையே பிரச்சினையாகவுள்ளது. போர் முடிவடைந்து ஏழு வருடங்களின் பின்னரும் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கின்றது. இதுவே சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கு பெரும் தடையாகக் காணப்படுகின்றது. எங்கள் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம், அதில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த விவகாரங்கள் தொடர்பில் கொழும்பு அரசு எங்களுடன் பேசத் தயாராகவில்லை.


தமிழ் மக்களுக்கு என்று தனித்துவமான கலாசாரமும், பண்பாடும், மதமும், நிலப்பரப்பும் உள்ளதை மறக்க வேண்டாம். அந்த வித்தியாசங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். எங்களைக் கௌரவமாக வாழ விடுங்கள். நாங்கள் இந்த நாட்டின் சமமான குடிமக்களாக எங்களை கருத முடியாத நிலையில் உள்ளோம். நாங்கள் இலங்கை குடிமக்கள் போன்று உணரவில்லை.

மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் என்ன பிரச்சினை யுள்ளது. இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது எங்கள் கலாசாரத்தின் ஒரு பகுதி. அதில் என்ன தவறு. விடுதலைப் புலிகள் மீது உங்கள் மனதில் உள்ள பகைதான் உங்களை அவ்வாறு சிந்திக்க தூண்டுகின்றது. விடுதலைப் புலிகளுக்கு முன்னரும் இனப் பிரச்சினை காணப்பட்டது. தற்போதும் காணப்படுகின்றது. விடுதலைப் புலிகள்... விடுதலைப் புலிகள் எனக் கூக்குரலிடுவதை விடுத்து முதலில் அவர்களின் உருவாக்கத்துக்கு காரணமாகயிருந்த பிரச்சினைக்குத் தீர்வை காண முயலுங்கள். இலங்கையின் அரச தலைவர்கள் கூட்டாட்சி என்ற நியாயமான தீர்வைத் தர விரும்பினாலும் அரசியல் நோக்கங்கள் அவர்களைத் தடுக்கும் என்றே நாங்கள் கருதுகின்றோம். புதிய அரசமைப்பின் ஊடாக நாங்கள் எதிர்பார்க்கும் தீர்வு எங்களுக்கு கிடைக்கும் என்று நம்பவில்லை.

அரசு அவ்வாறான தீர்வைத் தராவிட்டால் எங்கள் ஆர்ப்பாட்டங்கள் தொடரும். எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்போம். அரசுக்கு எதிரான எங்கள் உணர்வுகள் தொடரும். கூட்டாட்சித் தீர்வே அவசியமானது.

போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளிற்கு பன்னாட்டு உள்ளடக்கம் அவசியம் என்று நாங்கள் கருதுகின்றோம். அது இல்லையென்றால் மக்களிற்கு நீதி கிடைக்காது என்றார். (வ-5)

### மரண அறிவித்தல்



**திருமதி கமலாவதி கந்தசாமி**

137/3, ஸ்ரான்லிவீதி, அத்தியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாவதி கந்தசாமி 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - லீலாவதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரியும் பவளராணி முருகதாஸ்(ஜேர்மனி), கலாராணி(ஜேர்மனி), ரவீந்திரதாஸ்(லண்டன்), உஷாராணி (இந்தியா), கௌரிதேவி(டென்மார்க்), ரமணிதேவி(பிரான்ஸ்), சதீஸ்குமார்(ஜேர்மனி), பாமினிதேவி(இந்தியா), சாமினி தேவி, சத்தியநாராயணன்(கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சந்திரமோகன், விநாயகமூர்த்தி, சுபாசினி மற்றும் தனபாலசிங்கம், ஞானசேகரம், விஜயகுமார், சுகுணராஜ், கானமூர்த்தி, உதயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(24.11.2016) வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**137/3, ஸ்ரான்லிவீதி,**
**அத்தியடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(J 6287)
(14.18.21)

### 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **நித்தியானந்தன் முகுந்தன்**

திதி: தசமி(வளர்பிறை)

**அன்னை மடியில்**
**07.12.1971**

**இறைவன் அடியில்**
**10.10.2016**




மீளாத் துயரில் எம்மை ஆழ்த்திச் சென்றீரே
எத்தனை காலங்கள் சென்றாலும் ஆறாது நம் துயர்
உமது பிரிவால் தவிக்கின்றோம் நாம்
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இல.49, வளாக வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



**செல்லையா சிவகுருநாதன்**

**இளைப்பாறிய எழுதுநர் (கிளாக்கர்)**

இவ்வுலகில்:-1926.08.05 மீளாத்துயரில்:-2016.11.12

மலேசியா இப்போவில் பிறந்து ஈவினை, புன்னாலைக் கட்டுவனை வாழ்விடமாகவும், கொழும்பு, சொய்சாபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவகுருநாதன் 12.11.2016 சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் (பாக்கியம் - ஈவினை) அன்புக் கணவரும், கேதீஸ்வரன், ஆனந்தராசா, கணேஸ்வரன், மீனாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி, பத்மலோசினி, கலைமதி,திருஞானதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜா, அனுசன், ஆரணி, அபிநயா, அபிநந்தனா, அபிமீரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (24.11.2016) வியாழக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 10.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நண்பகல் 12.30 மணியளவில் கல்கிசை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

**011 262 6992**

(C 26622)
(11,17,18,21)

### 26 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம்
06.10.1927


மறைவு
23.11.1990



**சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 26 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.**

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோப்பாய் பிராந்தியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முறைப்பாட்டுக்கெதிராக வாய்திறவார் பிளாசிஸ்

பிளாசிஸ் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களுக்கு எதிராக அவர் எந்தக் கருத்துக்களையும் வெளிப்படுத்த மாட்டார் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறி வித்தது.
தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அந்த அணியின் அபாரப் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 85 ஓட்டங்களில் சுருண்டது. இரண்டாவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.
இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணித் தலைவர் பிளாசிஸின் செயல்பாடு, சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என பன்னாட்டு கிரிக்கெட் சபை குற்றஞ்சாட்டியது. இரண்டாவது ஆட்டத்தின் காணொலியை பன்னாட்டு கிரிக்கெட் சபை ஆய்வு செய்தது. அப்போது அவர் பந்தை பளபளப்பாக மாற்றுவதற்காக, இனிப்பு வகையிலான ஒரு பொருளை வாயில் மெல்வது தெரியவந்தது. குறித்த விவகாரத்தை, பந்தின் தன்மையை வேண்டுமென்றெ மாற்றுவதற்கான செயல் என்று பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தலைவர் ரிச்சட்சன் தெரிவித்தார்.
ஆனால் இந்தக் குற்றாட்டடை பிளாசிஸ், சக வீரர்கள், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை என எவரும் ஏற்கவில்லை. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இதனால் செய்தியாளர் சந்திப்புக்களில் பிளாசிஸ் மீது குறித்த விவகாரம் தொடர்பில் கேள்விக் கணைகள் தொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகையில் அவர் இந்த விடயத்தில் எவ்வித கருத்துக்களையும் வெளிப்படுத்தமாட்டார் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்தது.
விமான நிலையத்தில் வைத்து பிளாசிஸிடம் குறித்த விடயம் தொடர்பில் கருத்துக் கேட்க முற்பட்ட சனல் - 9 செய்தியாளர் ஒருவரை பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# மிஸ்பாவுக்குத் தடை விதிப்பு

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் தாமதமாகப் பந்துவீசிய குற்றத்துக்காக பாகிஸ்தான் அணியின் தலைவரான மிஸ்பாவுக்கு ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.
பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. கிறைஸ்ட்சேர்ச்சில் நடந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 8 இலக்குகளால் நியூசிலாந்து அணி வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது. அடுத்த ஆட்டத்தில் வெற்றி பெற்றாலேயே பாகிஸ்தானால் குறைந்த பட்சம் தொடரை சமநிலையில் முடிக்கலாம் என்ற நிலை உள்ளபோது மிஸ்பாவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தவிர 40 சதவீதம் அபராதமாகவும் விதிக்கப்பட்டது.
ஆனால் மிஸ்பாவுக்கு தடை விதித்தமை தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் பெரிதும் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அவரது மாமனார் உயிரிழந்தமைக்காக மிஸ்பா பாகிஸ்தானுக்கு திரும்பிவிட்டார். தடை விதிக்காமல் விட்டாலும் அவரால் அடுத்த ஆட்டத்தில் களமிறங்க முடியாது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டது. (ம)



# மூன்றாவது டெஸ்ட்டில் விளையாடுவார் புரோட்

இந்தியா–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்குவதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்தினார் புரோட்.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் பந்துவீசும் போது புரோட்டின் கணுக்காலில் காயம் ஏற்பட்டது. காயத்தின் அளவு சிறிதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் புரோட் தொடர்ந்து பந்துவீசியதாலும், களத்தடுப்புக்களில் ஈடுபட்டதாலும் காயம் பெரிதாக வாய்ப்பு இருந்தது. எனவே அவர் மூன்றாவது ஆட்டத்தில் களமிறங்குவதில் சிக்கல்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால்தனது பங்குபற்றலை இயன்றளவு உறுப்படுத்தியுள்ளதை புரோட் வெளிப்படுத்தினார். மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (ம)

# முதலிடத்தில் செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்று வரும் பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்ற செல்சி புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியது.
செல்சியை எதிர்த்து மிடில்ஸ்பேர்க் அணி மோதியது. ஆரம்பம் சுறுசுறுப்பாக அமையாவிட்டாலும் நேரம் செல்லச் செல்ல தமது ஆட்டத்தை வேகப்படுத்தியதுடன், 41ஆவது நிமிடத்தில் கொஸ்டா பெற்ற கோலின் மூலம் இடைவேளையின்போது 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் இல்லாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் செல்சி வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையிலான தொடரின் தரப்படுத்தலில் செல்சி முதலிடத்துக்கு முன்னேறியது. (ம)




# மீண்டும் அணியில் மிச்செல் சான்னெர்

நியூசிலாந்து அணியின் சுழல் வீரரான சான்நெர் காயத்திலிருந்து மீண்டு மீண்டும் அணியில் இடம் பிடித்தார்.
இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. பயிற்சியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக சான்நெர் முதலாவது ஆட்டத்தில் களமிறங்கவில்லை. இரண்டாவது ஆட்டத்திலும் அவர் அணியில் இடம்பிடிப்பது சந்தேகம் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் காயத்திலிருந்து விடுபட்ட அவர் தற்போது மீண்டும் அணியுடன் இணைந்துள்ளார்.
இரண்டாவது ஆட்டம் ஹமில்டனில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



# அலிஸ்டர், ஹமீட் இருவரும் பொறுமையைச் சோதித்தனர்

## கோக்லி சொல்கிறார்

இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்களான அணித் தலைவர் குக் மற்றும் ஹமீட் இருவரும் தங்களின் பொறுமையை அதிகமாக சோதித்துவிட்டனர் என்று விராட் கோக்லி தெரிவித்தார்.
இந்தியா–இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இந்தியாவின் வெற்றியுடன் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது. ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்தின் ஆரம்ப இணையைப் பிரிக்க இந்தியா படாதபாடுபட்டது. 50 பந்துப் பரிமாற்றங்கள் வரை குக், ஹமீட் இருவரும் தாக்குப் பிடித்தனர். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.
இங்கிலாந்தின் தொடக்க வீரர்கள்எங்கள்பொறுமையை அதிகமாகச் சோதித்து விட்டனர். அவர்கள் தற்காப்பாட்டம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்துள்ளார்கள் என்பதை ஆரம்பத்திலேயே அறிந்த கொண்டோம். 50 பந்துப் பரிமாற்றங்கள் வரை எமது முயற்சிகள் பயனளிக்கவில்லை என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸிக்குச் சிக்கல்கள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் நாளை களமிறங்கவுள்ளது ஆஸ்திரேலிய அணி.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 177 ஓட்டங்களாலும், இரண்டாவது ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்களாலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. இந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. 3:0 என்று அல்லாமல் குறைந்த பட்சம் 2:1 என்று கௌரவத் தோல்வியடைவதற்காகவாவது இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வெற்றி பெற வேண்டும் என்று அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் ஆஸ்திரேலிய அணியில் பல்வேறு மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.


ஆஸ்திரேலியாவில் வைத்து ஆஸ்திரேலியாவை 3:0 என்று வீழ்த்துவோம் என பிளாசிஸ் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளமையாலும் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



# சாதனையை நோக்கி செல்கிறார் அஸ்வின்

நடப்பு வருடத்தில் அதிக டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையைப் படைக்க இந்திய அணியின் சுழல் வீரரான அஸ்வினுக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனக் கருதப்படுகிறது. 9 ஆட்டங்களில் களமிறங்கிய அஸ்வின் 55 இலக்குகளைக் கைப்பற்றி முதலிடத்தில் தொடர்கிறார். 8 ஆட்டங்களில் களமிறங்கிய கேரத் 54 இலக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், 13 ஆட்டங்களில் களமிறங்கிய புரோட் 46 இலக்குகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

வருட இறுதியில் அதிக டெஸ்ட் இலக்குகளைக் கைப்பற்றிய வீரராக அஸ்வின் உருவெடுக்க அதிக வாய்ப்பு உள்ளது எனக் கருதப்படுகிறது. ஏனெனில் இன்னும் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் இந்திய அணிக்கு எஞ்சியுள்ளன. (ம)



# கோக்லியினது ஓட்டங்களை கழித்துவிட்டுப் பார்க்கட்டாம்

கோக்லியின் ஓட்டங்களைக் கழித்துவிட்டுப் பாருங்கள் இங்கிலாந்து நெருக்கடி கொடுத்தமை தெரியவரும் இவ்வாறு தெரிவித்தார் இங்கிலாந்து அணித்தலைவர் குக்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது. 246 ஓட்டங்களால் இந்தியா வெற்றிபெற்றது. கோக்லி பெற்ற ஓட்டங்களின் எண்ணிக்கை 248. இதனையடுத்தே குக் இவ்வாறு தெரிவித்தார்.

விராட் எடுத்த ஓட்டங்களைக் கழித்துவிட்டுப் பாருங்கள் நாங்கள் இந்திய அணிக்கு நெருக்கடி கொடுத்தது தெரியவரும். இந்த 10 நாள்கள் கிரிக்கெட் எனக்கு என்ன அறிவுறுத்துகிறது என்றால், இந்திய நிலமைகளில் நாங்கள் சவாலாகவே திகழ்ந்துள்ளோம். எங்களிடமுள்ள அனைத்து திறமைகளையும் ஒன்று திரட்டினால் நாங்கள் இந்தியாவை வீழ்த்தலாம். நாங்கள் இன்னும் இந்தத் தொடரை இழந்துவிடவில்லை. தொடரின் ஆதிக்கத்தை எமது பக்கமாக மாற்றமுடியும். இதில் சந்தேகமேயில்லை என குக் மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ். மாவட்ட பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 23

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

புதிய நிர்வாகத் தெரிவு, மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. தலைவராக என்.ஏ.விமலேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். இந்தச் சங்கத்தின் செயலாளராக உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியர் ப.தர்மகுமாரன் தெரிவு செய் யப்பட்டார்.

ஏனைய உறுப் பினர்களாக எழில்வேந்தன் (யாழ். மத்திய கல்லூரி) துசிகரன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), மிதிலா (வேம்படி மகளிர் கல்லூரி), குமணன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), குமரேஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.எல்.மோகன் (யாழ்ப்பாணக் கல்லூரி), தர்சினி (யாழ். திருக்குடும்பம்), சுகிர்தன் (யாழ். மத்திய கல்லூரி), யசிதரன் (ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-50)

# ஆஸ்திரேலியா சம்பியன்

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய 4 அணிகள் பங்குபற்றிய ரக்பித் தொடரில், ஆஸ்திரேலிய அணி சம்பியனானது.

குழுநிலை மட்டத்தில் தான் விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இறுதியாட்டத்தக்குத் தகுதிபெற்ற ஆஸ்திரேலிய அணி, நியூசிலாந்தை 34:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி சம்பியனானது. 5ஆவது தடவையாக இடம்பெற்ற இந்தத் தொடரில், 1ஆவது, 3ஆவது, 5ஆவது தொடர்கள் என மூன்று தடவைகள் ஆஸ்திரேலியாவும் 2 ஆவது, 4 ஆவது தொடர்கள் என இரு தடவைகள் நியூசிலாந்தும் சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (ம)



# தீவுகள் – இலங்கை இன்று பலப்பரீட்சை

முத்தரப்புத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டமொன்றில் மேற்கிந்தியத் தீவுகள்–இலங்கை அணிகள் எதிர்த்து மோதவுள்ளன. சிம்பாப்வே, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. 2 ஆட்டங்களில் விளையாடியுள்ள தீவுகள் 7 புள்ளிகளுடன் முதலிடத்திலும், 3 ஆட்டங்களில் விளையாடியுள்ள இலங்கை 7 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், 3 ஆட்டங்களில் விளையாடியுள்ள சிம்பாப்வே 4 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைந்து அடுத்ததாக நடைபெறவுள்ள தொடரின் இறுதி லீக் ஆட்டமாக தீவுகள்–சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் சிம்பாப்வே வெற்றிபெற்றால்



இலங்கை இறுதிக்குத் தகுதிபெறுவதில் சிக்கல்கள் ஏற்படும். எனவே மற்றொரு அணியைச் சார்ந்து இருக்காமல் இறுதிக்குத் தகுதிபெற இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நெருக்கடி இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. (ம)



கால்பந்தாட்ட பயிற்றுநர்களுக்கான ஏ தரப்பரீட்சையில் வடமாகாணத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்டப் பயிற்றுநர் எல். அனுராகாந்தன் சித்தி பெற்றுள்ளார். அண்மையில் நடைபெற்ற குறித்த பரீட்சையில் தேசிய அளவில் 12 பேர் தோற்றியிருந்தனர். அவர்கள் நால்வர் தமிழர். அனுரகாந்தன் ஒருவரே சித்திபெற்றார். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லக்மலுக்கு 50 சதவீதம் தண்டம் பன்னாட்டு கிரிக்கெட் சபையினால்

இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளரான சுரங்க லக்மலுக்கு 50 சதவீதம் தண்டம் விதித்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை.


முத்தரப்புத் தொடரில் இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது சிம்பாப்வேயின் துடுப்பாட்ட வீரர் சிப்கபா பந்தை அடித்தபோது பந்தைப் பிடித்த லக்மல், சிப்கபாவை நோக்கி எறிந்தார். சிப்கபா ஓட்டமெடுக்க முற்படாத நிலையில் பந்தை எறிந்தமையானது, பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் மைதானத்தில் மோதல் போக்கை கடைப்பிடிப்பதற்கு நிகரான ஒரு குற்றமாகும். இதனால் குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்திலிருந்து 50 சதவீதம் பன்னாட்டு கிரிக்கெட் சபையால் தண்டமாக விதிக்கப்பட்டது.

(ம)

# டோனியுடன் செல்பி ஆண்ட்ரியா எடுத்தார்

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில் இந்திய அணித்தலைவர் கோக்லி ஒரு புறம் அசத்தி வர, டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட டோனி குடும்பத்தினருடன் தனது நேரத்தை செலவிட்டு வருகிறார். இந்த நிலையில் பிரபல நடிகையான ஆண்ட்ரியா, டோனியைத் தான் பயணித்த விமானத்தில் பார்த்துள்ளார். உடனே டோனியின் இருக்கைக்கு சென்று டோனியுடன் ஒரு செல்பி எடுத்த அவர், அதை 'என்னுடைய விமானத்தில் யார் இருக்கிறார் பாருங்கள்' என்று முகப்புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார்.

(ம)



# ஜோகோவிக்கை வீழ்த்தியமையை நம்பமுடியவில்லை

## முர்ரே தெரிவித்தார்



இங்கிலாந்துத் தொடரில் ஜோகோவிக்கை வீழ்த்தி சம்பியனானமையை நம்பமுடியவில்லை எனத் தெரிவித்தார் முர்ரே.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு மட்டுமாக இங்கிலாந்தில் நடைபெற்ற தொடரில் முர்ரே சம்பியனானார். இதுவே நடப்பு வருடத்தின் இறுதி ரென்னிஸ் தொடருமாகும். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே முர்ரே இவ்வாறு தெரிவித்தார்.

"உலக சம்பியன்ஷப் தொடரில் ஜோகோவிக்கை வீழ்த்தியமையை நம்பமுடியவில்லை. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரர் நான்தான் என்பதை அடிக்கடி எனக்கு நானே நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறேன். இந்த வருடம் எனக்கு சிறந்த வருடமாக அமைந்துள்ளது. விம்பிள்டன், ரியோ ஒலிம்பிக், இங்கிலாந்துத் தொடர் என முக்கிய கிண்ணங்களைத் தந்துள்ளது. காயமின்றி உடல்தகுதியுடன் தொடர்ந்து செயற்பட்டமை அபாராமானது. அடுத்த வருடமும் இதேபோன்றதொரு ஆட்டத்தை வெளிப்படுத்த முனைப்புக் கொண்டுள்ளேன்" என முர்ரே மேலும் தெரிவித்தார்.

(ம)

# ஹொங்கொங் தொடர் இன்று ஆரம்பமாகிறது

வருட இறுதிப் பகுதியில் நடைபெறும் டுபாய் பூப்பந்தாட்டத் தொடருக்கான தகுதிச் சுற்று என அழைக்கப்படும் ஹொங் கொங் பூப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

ஒவ்வொரு வருடத்தின் இறுதிப் பூப்பந்தாட்டத் தொடரான டுபாய் தொடர் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் மட்டுமே இந்தத் தொடரில் கலந்துகொள்வார்கள். இதற்கு முன்னதாக நடைபெறும் ஹொங்கொங் பூப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. டுபாய் தொடருக்கான தரவரிசைப் புள்ளிகளில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தி சிலர் தரப்படுத்தலில் உள்ளே வரவும் வெளியே செல்லவும் இந்தத் தொடர் காரணமாக அமைந்துள்ளமையால் இதை டுபாய்க்கான தகுதிச் சுற்று எனவும் அழைப்பார்கள்.

உலக ஜாம்பவான் கரோலினா மாரின், சாய்னா நேவால், சிந்து உட்பட பலரும் தொடரில் கலந்து கொள்கின்றனர்.

(ம)

# பிளாசிஸ் செய்தது குற்றமே!

பந்தின் இயல்பைத் திட்டமிட்டு மாற்றினார் எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டில் பிளாசிஸ் செய்தது குற்றமே எனத் தெரிவித்த பன்னாட்டு கிரிக்கெட் சபை குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்திலிருந்து முழுத் தொகையையும் தண்டமாக விதித்தது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அந்த அணியின் அபாரப் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆஸ்திரேலியா படுதோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளா சிஸின் இனிப்பு வகையிலான ஒரு பொருளை வாயில் வைத்து மென்று அதன் உதவியுடன் பந்தைப் பழுதடையவிடாது பாதுகாத்தார் என குற்றஞ்சாட்டப்பட்டது. இதனையடுத்து குறித்த ஆட்டத்தின் காணொலியை பரிசீலனை செய்த பன்னாட்டு கிரிக்கெட் சபை அந்த ஆட்டத்துக்கான முழுக் கட்டணத்தையும் தண்டமாக விதித்தது.

(ம)

வீடு வாடகைக்குத் தேவை
வவுனியாவில் பூவரசங்குளம்.
வேப்பங்குளம் பகுதியில் 3 அறையுடன்
நல்ல நிலையிலுள்ள. சகல வசதிகளுடன்
கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (C 26887) (14,17,18)
தொடர்பு: 071 411 5004

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
பிரெஞ்சு மொழி
யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்
FRENCH EMBASSY இன் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.
பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள்.
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து செல்வோர்: யாழ், வன்னி, பிறமாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படிக்கிறார்கள்.
ஆரம்பம் 10.12.2016 உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் ➡ புகையிரதக்கடவை ➡ AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

வேலை வாய்ப்பு
100 இற்கு மேற்பட்ட நாடுகளில் அமைந்துள்ள எமது Internatinal நிறுவனமானது இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி(North side)இல் தனது புதிய 10 கிளைகளை விஸ்தரிக்கவுள்ளது. கிளைகளுக்கான பல்வேறுபட்ட அலுவலக ரீதியான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.
கல்வித்தகைமை: O/L, A/L படித்தவர்கள்
குறிப்பு: எமது நிறுவனத்தில் தொடர்ந்து வேலை செய்பவர்கள் 6 மாத கால தகைமைகாண் தெரிவின் மூலம் வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.
தொடர்பு: 077 2986763 (J 6309) (16,17,19)
077 0771377, 076 8643505

ஆங்கிலம் 3 மாத பயிற்சி நெறி
இம்முறை A/L எழுதியோர், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர், இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
செவ்வாய், வியாழன் பிரிவு - 29.11.2016
1.காலை 08-10 2.காலை 10-12
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட 3 மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் - 26.11.2016
1.பி.ப 1.00-3.00 2.மாலை 3.00-5.00
பயிற்சிநெறி முடிவில் "Diploma Certificate"
SAMSON Expert in Language Training
119, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 077 1570 486 / 021 320 3318

வேலையாள் தேவை
வயதான தம்பதியினருடன் தங்கியிருந்து வீட்டுவேலை செய்ய 50 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
021 2223289

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.